உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்
செங்குந்த இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்

# சுடரொளி

2007



## யா/செங்குந்த இந்துக் கல்லூரி

# சுடரொளி

# 2007

உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்


செங்குந்த இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம்

**யா/செங்குந்த இந்துக் கல்லூரி**
**திருநெல்வேலி கிழக்கு**
**யாழ்ப்பாணம்.**

# பொருளடக்கம்


- கல்லூரிக் கீதம்
- ஆசிச் செய்திகள்
- அதிபர் அறிக்கை
- மலர்க் குழு
- பெரியோர் ஆக்கங்கள்
- மாணவர் ஆக்கங்கள்

# கல்லூரி கீதம்

வாழ்த்திடுவோம் எங்கள் கல்லூரித் தாயை
வளமுடன் மாணவர் நாமே.

செங்குந்த இந்துக் கல்லூரியை என்றும்
எங்களுக்குக் கல்வி அளித்து
பொங்கும் புகழுடன் வாழ்ந்திட நாமே
திங்கள் முடியோனைத் துதிப்போம்.

கன்னற் சுவைதரும் தமிழ்மொழியுடனே
அன்னிய ஆங்கிலம் சேர்த்து
இன்னிசை யோடுயர் இலக்கியம் பலவும்
என்றுமே அளித்திடும் அன்னாய்!

இத்தல மீதினில் மாணவர் எல்லாம்
உத்தமராய் வாழ வேண்டி
சத்தியம் ஒழுக்கம் எனுமுயர் பண்பை
எத்தினமும் ஊட்டும் தாயே!

வறுமையாய் வாடினும் வளமுற்று வாழினும்
மறந்திட மாட்டோம் உன் நலனை
குறைகளின்றி உனைக் குவலயம் போற்றிட
இறைவனை வேண்டுவோம் நாமே.

அறிவுக் கதிர்களை நீட்டி
அறத்தினை மாணவர்க் கூட்டி
அகிலம் புகழ்ந்திட வாழ்க.

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வாழிய வாழிய என்றும்

வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
செங்குந்த இந்துக் கல்லூரி
எங்கள் கல்லூரி வாழ்க.

Title : SUDARROLI

Year : 2007

Editors : *Mr.R.Pasupatheeswaran*
Mrs.K.Muthukrishnan

Publishers : J/Senguntha Hindu College
Thirunelvely East
Jaffna
Sri Lanka

Printers : Mathy Colours
Murugesar Lane,
Nallur.
T.P: 021 2229285
E-mail: mathicolours@yahoo.com

# சஞ்சிகை வெளியீட்டுக் குழு – 2007

<u>தலைவர்</u>

திருமதி. சி. விஸ்வலிங்கம்

<u>உபதலைவர்</u>

திருமதி. ரு. இராஜரட்ணம்

<u>இதழாசிரியர்கள்</u>

திரு. இ. பசுபதீஸ்வரன்

திருமதி. க. முத்துக்கிருஷ்ணன்

<u>மலர்குழு</u>

திரு. ஹ. சி. சர்மா

திருமதி. தி. இராஜேஸ்வரன்


திருமதி. க. ஜெயராஜபாலா

<u>வெளிக்கள உதவி</u>

திரு. தி. இரவீந்திரநாதன்

# திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூதநாதசுவாமி தேவஸ்தான பிரதம குருவின்

## ஆசிச் செய்தி



யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியின் சுடரொளி சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதை யிட்டு மனமகிழ்வடைகிறேன்.

இக்கல்லூரி தனது நீண்ட வரலாற்றில் பல சாதனைகளையும் திறமைகளையும் வெளிக் கொண்டு வந்துள்ளது. இந்தவகையில் மாணவர்களின் ஆக்கத்திறனையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் களமாக இச் சஞ்சிகை விளங்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை ஆகும்.

ஒரு சமூகத்தின் அடி வேர்களாக பாடசாலை காணப்படுகிறது. சமூகத்தின் இருப்பையும் வளர்ச்சியையும் பாடசாலையே கொண்டுள்ளது. ஒழுக்கம், பண்பு, பணிவுடமை, அறம், சமய நம்பிக்கை என்பவற்றை வளர்க்கும் இடமாகத் திகழும் இக் கல்லூரி தனது வரலாற்றில் பெரியார்கள் மகான்கள் போன்றோரின் தரிசனங்களைப் பெற்றுள்ளது. இந்தவகையில் இங்கு பயிலும் மாணவர்களும் நன்மக்களாக மிளிர்வர் என்பது அசையாத நம்பிக்கையாகும். எனவே இச் சஞ்சிகை வெளிவருவதற்கு உறுதுணையாக செயற்பட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இறைஆசி வேண்டி எனது மனநிறைவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

ஸ்ரீ பூதநாதர் சுவாமி தேவஸ்தானம் **சிவப்பிரம்மஸ்ரீ ப. இராமலிங்கக்குருக்கள்**

பிரதம குரு

# சுடரொளி சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரின்
# ஆசிச் செய்தி

புத்தகங்களிலுள்ள உண்மைகளை, தகவல்களை, தத்துவங்களை விளக்கி, விபரித்து மாணவர்களுக்கு விநியோகிப்பதுடன் ஆசிரியரின் கடமை முற்றுப்பெறுவதில்லை, முழுமையடைவதில்லை. அரும்பியும் அரும்பாமலும், மலர்ந்தும் மலராமலும் வெவ்வேறு அளவிலும் தரத்திலும் உள்ள பல்வேறு ஆற்றல்களையுடைய மாணவர்கள் பாடசாலைகளில் இருப்பர். இந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி, ஏனையோரின் பாராட்டுகளையும் மதிப்பையும் பெறவேண்டும் என்ற "தணியாத தாகம்" அவர்களுட் பலரிடமிருக்கும் . மாணவர்களின் ஆற்றல்களைச் சரியாகவும் விரைவாகவும் இனம் கண்டு குறித்த அந்த மாணவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து வாழும் சமுதாயமும் பயன்படும் வகையில் அந்த ஆற்றல்களை வளர்த்தெடுப்பது ஆசிரியர்கள் ஆற்ற வேண்டிய மிகப் பெரும் பணியாகும். செங்குந்த இந்துக்கல்லூரியின் அதிபரும் ஆசிரியரும் இதனை நன்குணர்ந்ததன் விளைவே 1958 ஆம் ஆண்டிலிருந்து வெளிவரத் தொடங்கிய "சுடரொளி" என்ற மாணவர் சஞ்சிகையாகும். மாணவர்களின் இலக்கிய ஆர்வத்தையும் எழுத்தாற்றலையும் விருத்தி செய்வதே இதன் குறிக்கோளாக இருந்தது. காலப்போக்கில் கல்லூரியின் செயற்பாடுகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றின் பதிவேடாகவும் இது பரிணமித்தது. ஆண்டு தோறும் நடைபெற்ற " சுடரொளி" வெளியீட்டு விழா, சொற்பொழிவுகள், மாணவர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள், நாடக அரங்கேற்றம் போன்றவற்றை உள்ளடக்கிய – மாணவர்கள் , ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முதலிய பலர் ஆவலுடன் எதிர்பார்க்கும் கதம்ப விழாவாக அமைந்திருந்தது. ஊக்கமுடன் செயற்பட மாணவர்கள் – ஆசிரியர்கள் ஆகியோரின் கணிசமானவர்கள் கலை இலக்கியத் துறையில் புகழ் பெற்றுத் திகழ்வது பெருமைக்குரியது.

விரைவில் நடைபெறவுள்ள கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் "சுடரொளி" விசேட மலர் வெளியீடும் இடம்பெறும் என்று அறிகின்றேன். முன்னை நாள் ஆசிரியர்கள் சிலரை பாராட்டி கௌரவிப்பதற்கு அவுஸ்திரேலியாவில் வாழும் பழைய மாணவர்கள் முன்வந்திருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. அத்தகைய ஆசிரியர்களில் ஒருவராக என்னையும் தெரிவு செய்ததற்காக அவுஸ்திரேலியா வாழ் பழைய மாணவர்களுக்கும் கல்லூரிச் சமூகத்திற்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனினும் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் விழாவிலே கலந்து கொள்ள முடியாமை கவலையளிக்கின்றது.

"சுடரொளி" யின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் ஆண்டு தோறும் அதை வெளியிடுமாறு அதிபரிரையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கேட்டுக்கொண்டு விழா சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சிவசரவணபவன் M.A (சிறப்பு)
ஆசிரியர் (1955- 1968)
(தற்காலிக வாசம் -கொழும்பு)

# ஆசிச் செய்தி

நான் கற்ற கல்லூரியை மிகவும் நேசிக்கிறேன். நீண்ட காலம் கற்பிக்க எனக்கு வாய்ப்பைத்தந்த இந்துக் கல்லூரியை அதனிலும் மேலாக நேசிக்கிறேன். செங்குந்த இந்துக் கல்லூரியின் "சுடரொளி" என்னும் போது திரு.சிவசரவணபவன் (சிற்பி) அவர்களை மறக்க முடியாது. அவர் பெற்றெடுத்த குழந்தை தான் "சுடரொளி" அந்தச் சஞ்சிகையின் மற்றுமொரு இதழ் வெளிவரப்போகிறது என்பதை அறியும் போது ஆனந்தமாக இருக்கிறது.

"சுடரொளிச்" சஞ்சிகையில் மாணவர்களது ஆக்கங்கள் நிறையவே வர வேண்டும் என்பது எனது விருப்பம். மாணவர் தம் படைப்பாக்கத்திறனை எழுத்துத்துறையில் வளர்ப்பதற்கு இச்சஞ்சிகை வெளியீடு வாய்ப்பளிக்கும். பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பும் ஒரு கையெழுத்துச் சஞ்சிகையை நடத்தி வந்தால், அச்சஞ்சிகையில் அனைத்து மாணவரும் எழுத வாய்ப்புக்கிடைக்கும். அத்தகைய சஞ்சிகைகளை மாதமொருமுறை வெளியிட்டால் வருடத்தில் குறைந்தது ஒன்பது வெளியீடுகளாவது வரவாய்ப்பிருக்கும். அவ்வாறு வருடமொன்றில் வெளிவரும் அனைத்து சஞ்சிகைகளிலிருந்தும் மிகச்சிறந்தவற்றை தெரிந்தெடுத்து "சுடரொளி" யில் வெளியிடலாம்.

இன்று பெரும்பாலான மாணவரிடம் வாசிக்கும் பழக்கம் மிகவும் குறைவாக உள்ளது என்ற கருத்துப் பரவலாக உள்ளது. வாசிக்கும் பழக்கத்தைச் சிறுவயதிலிருந்தே தூண்டுவது பெற்றோரதும் ஆசிரியரதும் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். பாடசாலையில் இலக்கிய மன்றங்கள், கலைமன்றங்கள், விஞ்ஞான மன்றங்கள், சமூகவியல் மன்றங்கள் எனப் பலதையும் அமைத்து மாணவர் வாசித்து நயந்தவற்றை எடுத்துக்கூற வாய்ப்பளிக்க வேண்டும். இது சாத்தியப்படாது என்று கூறிக் கைவிட்டு விடுவது சுலபம். பாடசாலையில் ஒரு ஆசிரியர் நினைத்தால் இதனைச் சாத்தியமாக்க முடியும் எதற்கும் மனம் இருக்க வேண்டும். இன்று நாட்டின் சூழல் இத்தகைய எதையும் செய்ய வாய்ப்பாக இல்லை என்று கூறிவிடலாம். எமது நாட்டை விட மோசமான நிலைகளில் உள்ள சில நாடுகள் மாணவருக்கான பல சிறந்த பணிகளைப் பாடசாலைகளில் செய்து வருகிறார்கள். நாமும் செய்வோம்.

"சுடரொளி"யினை வெளியிடும் நல்ல பணியினை மேற்கொண்டிருக்கும் செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை மனமார வாழ்த்துகிறேன். நீங்களும் உங்கள் பாடசாலையும் நிறைவோடு நீடுவாழ இறையருளை வேண்டுகிறேன்.

என்றும் உங்களுடன்
குழந்தை ம. சண்முகலிங்கம்
முன்னாள் அதிபர்

# அதிபரின் பார்வையில்

யா/செங்குந்த இந்துக்கல்லூரி திருநெல்வேலி கிழக்கில் சங்கம மடமாக இருந்த ஓர் இடத்தில் 1934ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சைவமும் தமிழும் வளர வேண்டும் என்ற மேன்மையான நோக்குடன் சைவப்பெரியார்களான இளைய தம்பி சாஸ்திரியார் , இந்துபோட் இராஜரட்ணம் போன்ற பெரியார்களால் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரியின் முதலாவது அதிபர் சுன்னாகம் குமரசாமிப்புலவரின் மகன் முத்துக்குமாரசாமி அவர்கள் தொடக்கம் பதினான்கு அதிபர்கள் தலைமையில் பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய அபராத உழைப்பினால் ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பித்து இரு மொழிப் பாடசாலையாக வளர்ந்து இன்று கல்லூரியாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் இன்று ஈழமணித் திருநாட்டில் மட்டுமன்றி உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் வாழ்வதோடு பொறுப்பான பதவிகளையும் அலங்கரித்துள்ளனர். அத்துடன் அமையாது தாம் கல்வி கற்ற கல்லூரி அன்னையை மறவாது காலாத்திற்குக் காலம் வேண்டிய உதவிகளையும் ஆற்றி வருகின்றனர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணுற்றொன்பதாம் ஆண்டு மாசித்திங்கள் பத்தொன்பதாம் நாள் இக்கல்லூாயில் அதிபராகக் காலடி பதித்தவேளை கட்டிட தளபாடப் பற்றாக்குறை தேவையான ஆசிரியர் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்சனைகள் நிறைந்திருந்தன.

எனக்கு முன்னர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த சான்றோர்களை இதயத்தில் இருத்தி அவர்களின் அற்புதமான சேவைகளை படித்தும் கேட்டும் அறிந்து தலைசாய்த்து வணங்கி அவர்கள் வழியில் இக்கல்லூாயின் வளர்ச்சிப் படியினை மேலும் மேலும் உயர்த்துவதற்காக என்னை அர்ப்பணித்துப்பாடுபட வேண்டும் என்பதாக உறுதிபூண்டேன்.

கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் என்னால் எடுத்துவைக்கப்பட்ட ஒவ்வொரு அடிக்கும் ஓராயிரம் முட்டுக்கட்டைகள் ஒவ்வொரு முட்டுக்கட்டைகளையும் உடைத்தெறிந்து கல்வி இலக்கை அடைவதென்பது இலகுவான காரியமல்ல. இக்கல்லூரியில் எனது ஒன்பதாண்டு காலப்பகுதியும் “நெருப்பாற்றில் நீந்துவதாகவே” அமைந்திருந்தது. “கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீரவிசாரித்து அறிவதே மேல்” என்பதை புரிந்து கொள்ள முடியாத அல்லது விரும்பாத சுயநலவாதிகள் மத்தியில் எங்களால் பல பல சாதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. நூலகம் மீள அமைத்தல்

   1999ம் கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் இரவிரச இராணுவ நடவடிக்கையுடன் இயங்காதிருந்த நூலகத்தையும் திரும்பவும் புனரமைப்புச் செய்து இயங்க வைக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்திருந்த கூரைகள் தளங்கள் என்பன திருத்தப்பட்டன. பாடசாலைக்கு மின் இணைப்புப் பெற்று நீர்த்தாங்கி திருத்த வேலை மேற்கொண்டு மாணவர்களுக்குக் குழாய் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது

2. 2000ம் ஆண்டு விஞ்ஞான ஆய்வுகூடம் அமைத்தல்.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 6 – 11ம் தரங்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது.

3. 2001ம் ஆண்டு சுடரொளி சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. டென்மார்க்கில் வாழும் பழைய மாணவன் M.S. விஸ்வநாதன் நிதி உதவ வழங்கி வறிய மாணவர்களுக்கு M.S.V உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்பட்டது.

4. 2002ம் ஆண்டு மாடிக்கட்டடம் அமைத்தல்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ரூபா 5 இலட்சம் நிதி உதவியுடன் புதிய மாடிக்கட்டிடத்தின் கீழ்தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இலண்டன் அவுஸ்திரேலியா ப.மா.ச உதவியுடன் கீழ்தள வேலைகள் முடிக்கப்பட்டு கணினி அறையும் ஆங்கில அறையும் உருவாக்கப்பட்டது.

5. 2003 ஓடியோ வீடியோ அறை அமைக்கப்பட்டமை

கல்வித் திணைக்கள நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது.

6. 2004ம் ஆண்டு G.T.Z உதவியுடன் ஆண்களுக்கான மலசல கூடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டது.

7. கனடா ப.மா.ச உதவியுடன் ரூபா 3 இலட்சம் நிதி நிலையான வைப்பிலிடப்பட்டு அதன் வட்டி வருடம் தோறும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

8. அவுஸ்திரேலியா ப.மா.சங்க உதவியுடன் விளையாட்டு மைதானத்திற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு ஏற்கனவே உள்ள விளையாட்டு மைதானத்துடன் இணைக்கப்பட்டு விளையாட்டு மைதானம் மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

9. 2005ம் ஆண்டு புதிய மாடிக்கட்டடத்தின் மேற்தள வேலைகளும் கூரை வேலையும் இலண்டன் பா.ம.ச உதவியுடன் முடிவுற்றது. இன்று ஏற்கனவே உள்ள மாடியுடன் இணைக்கப்பட்டு விஸ்தாரமான பிரார்த்தனை மண்டபம் உருவாக்கப்பட்டது.

10. 2005 இல் பாண்ட் இசைக்குழு அமைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி உதவியுடன் பான்ட் இசைக்கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு பான்ட் இசைக்குழு அமைக்கப்பட்டது.

11. 2006 சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் ஒரு கணினி, தொலைக்காட்சிப் பெட்டிகள் பெறப்பட்டன. 270,000 ரூபா பெறுமதியான செலவில் திறந்த மண்டபத்திற்கு உருக்கு யன்னல்கள் பொருத்தி கதவுகள் போடப்பட்டும் மூடிய அறையாக மாற்றப்பட்டது.

12. 2007 கணினி கற்றல் வளநிலையம் அமைக்கப்பட்டது.

S.E.M.P திட்டத்தின்படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கற்றல் வளநிலையம் அமைக்கப்பட்டுள்ளதுடன். 23 கணனிகளும் வர இருக்கின்றன.

மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை மேம்படுத்தவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தவும், மாணவர்களின் ஆளுமைத்திறனை விருத்தி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

நவீன கற்றல் முறைகளை நமது சிறார்களிடையே புகுத்தி கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தி வருகின்றோம். இத்தனை சாதனைகளை நிகழ்த்துவதற்கு எள் என்பதன் முன் எண்ணெயாக நிற்கும்

எமது ஆசிரியர் குழாமும் எல்லாக்காரியங்களிலும் தோள் கொடுத்து உதவிவருகின்ற கல்வி சாரா ஊழியர்களும் காலமறிந்து கல்லூரியின் தேவையறிந்து அயராது உதவிபுரிந்து வரும் பழைய மாணவர்களும் புலம் பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவர்களும் இலண்டன், கனடா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களும் பெரிதும் காரணமாக அமைந்திருந்தன எனலாம்.

மேலும் இக்கல்லூரி தற்போது இடம்பெயர் மாணவர்களால் மட்டுமே நிரம்பி வருகின்றது. இக்கல்லூரி சார் சமூகத்தினர் பத்துவீதமானோர் கூட இக்கல்லூரியில் கல்வி கற்பதில்லை. கல்வி கற்ற பழைய மாணவர்கள் தூர நின்று வேடிக்கை பார்த்து விமர்சிப்பதை தவிர்த்து கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதோடு அமையாது தங்கள் பிள்ளைகளை இக்கல்லூரியில் கல்வி கற்க வைக்கவேண்டும். இன்று இக்கல்லூரியின் காலத்தின் தேவையாகும். இத்தகைய சூழலில் சில காலம் உறக்க நிலையிலிருந்த கல்லூரியின் சஞ்சிகையான "சுடரொளி" மீண்டும் ஒளி வீசப் புறப்பட்டிருப்பது யாவரையும் பெருமிதம் கொள்ள வைக்கும் செயலாகும். பலரின் தியாக சேவையினால் உருவாகும் இச்சஞ்சிகை மாணவரினதும் ஆசிரியர்களினதும் ஆக்கத்திறன் செயற்பாடுகளையும் தேடல் திறமைகளையும் வெளிக்கொணருவதை முழு நோக்கமாகக் கொண்டுள்ளன. இக்கல்லூரியின் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வரலாற்றுப்பதிவாக இச்சஞ்சிகை அமையும் என்பதில் சந்தேகமில்லை.

1957ம் ஆண்டு திரு. சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் அயராத முயற்சியினால் அன்றையகால ஆசிரியர் மாணவர்களது ஒத்துழைப்பினால் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் இச் சஞ்சிகையில் வெளிவந்தது. பின்னர் 32 ஆண்டுகளின் பின்னர் 2001ம் ஆண்டு எனது காலத்தில் வெளிவந்தது. மீண்டும் தற்போது இம்மலர் வெளிவருகின்றது. மீண்டும் தொடர்ந்து இச்சஞ்சிகை வெளிவரவேண்டும் என்பது எனது வேணவா என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

மேலும் இக்கல்லூரி தொடர்ந்து வளர்ச்சியடைந்து பொலிவுற்று விளங்க இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அதிபர்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

*பிறர்செய்வதில் எது உனக்குப் - பிடிக்கவில்லையோ,*
*அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே*

## கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

## ஆசிச் செய்தி



யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் மாணவர் சஞ்சிகையான சுடரொளி இவ்வாண்டு வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பெரிய பெரிய பாடசாலைகள், நிறுவனங்கள் கூட ஒரு நூலை வெளியிட வேண்டும் என்று நினைத்துப்பார்க்க முடியாத இக்காலகட்டத்தில் "சுடரொளி" சஞ்சிகையின் வெளியீடு மாணவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். பாடசாலையின் வரலாறு, அது புரிந்த சாதனைகள், அதிபரின் திறமை மிக்க நிர்வாகம் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான பணி, அதன் தோற்றம் வளர்ச்சி போன்றவற்றை எதிர்காலச்சந்ததியினருக்குத் தெரியப்படுத்தும் ஊடகமாகப் பாடசாலைச் சஞ்சிகைகள் விளங்குகின்றன. அந்த வகையில் கடந்த காலங்களில் பாடசாலை புரிந்த பாரிய செயல்கள் இச்சஞ்சிகை மூலம் வெளிவரும். அத்துடன் மாணவர்களை எழுத்தாளர்களாகவும் அறிஞர்களாகவும் உருவாக்குவதில் பாடசாலைச் சஞ்சிகைகள் பெரும்பங்காற்றி வருவது எனக்குத் தெரியும். இன்று உலகமெங்குமுள்ள சிறந்த பல எழுத்தாளர்களை உருவாக்கியது பாடசாலையின் சஞ்சிகைகள் ஆகும்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்பு இவ்வருடம் மாணவர்களின் ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை எதிர்காலச் சூரியானகப் பிரகாசிக்கும். அத்துடன் இவ் இதழை அழகுற வெளியிட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோரை எவ்வளவு போற்றினாலும் தகும். வருடாவருடம் இவ் இதழ் மலர்ந்து மாணவர்களின் ஆளுமையை வளர்க்க வேண்டும். வாழ்க அதன் பணி, வளர்க அதன் தொண்டு.

**கே. வீ. குணசேகரம்**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
நல்லூர்/கோப்பாய்.

சேவைபுரிவதன் மூலமே உண்மையான
வெற்றியையோ மகிழ்ச்சியையோ எய்தமுடியும்.

# யா/செங்குந்த இந்துக் கல்லூரி ப.மா.ஆ.ந.சங்கம் கனடா

## ஆசிச் செய்தி

யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி தன் செயற்பாட்டின் மேம்பாடாக "சுடரொளி" என்னும் சிறப்புப் பெயர் அமைந்த மலரை வெளியிடுவது பெரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நடராசா பாஸ்கரன் ஆகிய நான் மேற்படி கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களில் ஒருவன். இப்புலம் பெயர்ந்த நாட்டில் மன உறுதியோடு நற்பிரஜையாக வாழ்கின்றேன் என்றால் கல்லூரி அன்னையின் ஆசீர்வாதமும் தன்னலமற்ற சேவையுமே காரணம் என்பதை மறுக்க முடியாது.

இக்கட்டான சூழ்நிலையில் மலரை வெளியிடுவது எவ்வளவு கஷ்டம் எனினும், அதிபர் ஆசிரியர்களின் மனஉறுதி வெற்றியை ஈட்டித்தர இறை ஆசி என்றும் உண்டு.

மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் ஆக்கத் திறனுக்கும் இப்படியான மலர் வெளியிடுவது பெரிதும் உதவுவதோடு அவர்களை சிறந்த எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் ஆக்குவதற்கு வழிவகுக்கும் என்பது உண்மை. முதன் முதலாக மேற்படி மலர் உருவாவதற்கு கால்கோளாய் இருந்தவர் திருவாளர் சரவணபவானந்த சர்மா(சிற்பி) அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றோம்.

எங்கள் சங்கமானது இனி வரும் காலங்களிலும் கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்குத் தன்னுடைய சேவையை ஆற்றும் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

கல்லூரி அன்னையின் நினைவாக வெளிவரும் "சுடரொளி" மலர் வெளியீட்டு விழா இனிதே நிறைவேற மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சங்கச் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

ந.பாஸ்கரன்
தலைவர்

## யா/செங்குந்த இந்துக் கல்லூரி ப.மா.ஆ.ந.சங்கம் கனடா

## ஆசிச் செய்தி

யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபரும் ஆசிரியர்களும் கல்லூரியின் சஞ்சிகையான சுடரொளியை வெளிவிடுவதற்கான கைங்கரியம் போற்றுதற்குரியது. கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்தும் கொண்ட உங்கள் எண்ணம் நிறைவேற ஆண்டவன் அருள்பாலிப்பார்.

நீங்கள் கல்லூரிக்கு ஆற்றிவரும் சேவை மகத்தானது. புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் ஆகியோர் ஓரளவு பண உதவிகள் செய்கின்றோம். உரிய முறையில் நிர்வகித்து வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வது உங்கள் கைகளிலேயே உள்ளது. உங்கள் பணிகளின் ஊடாக செயற்திறனை வியந்து பாராட்டுகின்றோம்.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருப்பினும் எங்களை நற்பிரஜையாக வளர்த்து விட்ட கல்லூரி அன்னையை நினைவு கூருகின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" மேற்படி குறளுக்கு அமைவாக கல்லூரி அன்னயைின் மாணவர்கள் நன்றி உணர்வோடு வாழ்வோமாக.

இனிவரும் காலங்களிலும் எங்களால் ஆன உதவிகளை கல்லூரி அன்னைக்கு ஆற்றுவோம் என்பதில் உறுதியாக உள்ளோம். கல்லூரி அன்னயைின் நினைவாக வெளியிட இருக்கும் "சுடரொளி" மலரானது மாணவர்களினது உணர்வுகளுக்கும் தேடல்களுக்கும் படைப்புத் திறன்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து காலமெல்லாம் ஒளிவீசி மிளிரும் என்பதில் ஐயமில்லை. சுடரொளி வெளியீட்டு விழா இனிதே நிறைவேற வாழ்த்துவதோடு எங்கள் சங்கத்தின் சார்பில் நல்லாசிகளையும் வழங்கி மகிழ்கின்றோம்.

நன்றி.

திருமதி ம.வரதராசா
முன்னைநாள் தலைவர்

# இதழாசிரியர்களின் இதயங்களில் இருந்து .....

ஏழு தசாப்தங்காளக எமது சிறார்களுக்கு எழுத்தறிவினை ஊட்டி வரும் எமது கல்லூரித் தாயின் "சுடரொளியை" பிரகாசிக்க வைப்பதில் பெருமகிழ்வடைகிறோம். காலத்தின் கோலத்தினாலும், இடையறா இன்னல்களினாலும் சுடரொளி சுடரவில்லை. ஆறு வருட இடைவெளியின் பின் எமது பாடசாலை அதிபர் திருமதி.சி.விஸ்வலிங்கத்தின் அயராத முயற்சியினால் மீண்டும் எமது கைகளில் சுடரொளி இன்று தவழ்கிறது.

"சுடரொளி" சஞ்சிகை காலத்தின் கண்ணாடியாகவும் பாடசாலையின் எதிர்காலச் செயற்பாடுகளிற்கு உந்து சக்தியாகவும் அமையும். மேலும் ஆசிரியவாண்மையையும் மாணவர் ஆக்கத்திறனையும் மேம்படுத்தும் என்பது எமது நம்பிக்கை.

கடல் கடந்தும் விழுதுக்களைப் பரப்பி விருட்சமாக வளர்ந்து நிற்கும் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்ட நிறுவுனர் அவர்களையும் வித்து வளர உரமூட்டிய அதிபர்களையும் வரலாறு ஊடாக நினைவு கூர்வது அவசியமாகிறது. இச்சஞ்சிகையை வளமூட்ட பல ஆக்கங்கள் கிடைக்க பெற்று பொழுதும் நிதிப் பற்றாக்குறையும் குறுகிய கால இடைவெளியில் சஞ்சிகையை வெளியிட வேண்டியிருந்தமையாலும் அவற்றை பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

சஞ்சிகைக்கான ஆலோச்னைகளை அவ்வப்போது தந்துதவியும் தனது அதிபர் சேவைக்காலத்தில் 30 வருடங்களாக வெளிவராது இருந்த " சுடரொளியை" இருமுறை சுடர வைத்த அதிபருக்கும், சுடரொளி மலர உதவிய பகுதித்தலைவர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் என்றென்றும் உரியனவாகின்றன.

இம்மலர் சிறக்க ஆசியுரைகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கும், இச்சஞ்சிகைக்கு வேண்டிய புகைப்படங்களை எடுத்துதவிய புகைப்பட ஸ்தாபனத்திற்கும், இச் சஞ்சிகை மலர்க் குழுவினருடன் இணைந்து கணினியில் பொறித்த ஆசிரியர்களுக்கும், சஞ்சிகையை அச்சிட்டு உதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும்,அன்பளிப்பை வழங்கிய அன்பர்களுக்கும் , மேலும் இம்மலர் சிறப்புற எம்முடன் தோளோடு தோள் நின்ற அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகின்றன.

இதழாசிரியர்கள்
திரு. இ. பசுபதீஸ்வரன்
திருமதி. க. முத்துக்கிருஷ்ணன்

## 2007ம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்

## திருமதி. ருக்மணிதேவி. லோறன்ஸ்



B.A(Ceylon), Dip.in Edu.

| | | |
|---|---|---|
| ஆரம்பக் கல்வி | :- | யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம் |
| க.பொ.த. (உ/த) | :- | யா/செங்குந்த இந்துக் கல்லூரி |
| பல்கலைக் கழகம் | :- | பேராதனைப் பல்கலைக் கழக கலைப் பட்டதாரி(B.A) |
| பட்டப்பின் டிப்ளோமா | :- | தேசிய கல்வி நிறுவகம் (1992-1994) |
| ஆசிரிய நியமனம் | :- | 01.11.1976 |

சேவை விபரம்

| | பாடசாலையின் பெயர் | இருந்து | வரை |
|---|---|---|---|
| 01. | அ/பப்ரிஸ்ற் மிஷன் | 01.11.1976 | 31.03.1980 |
| 02. | அ/கெக்கிராவை முஸ்லீம் ம.வி. | 01.04.1980 | 20.04.1982 |
| 03. | யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி | 21.04.1982 | 11.05.1983 |
| 04. | யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் | 12.05.1983 | 28.02.1986 |
| 05. | யா/செங்குந்த இந்துக் கல்லூரி | 01.03.1986 | 21.08.2007 |

### திருமதி ருக்மணிதேவி லோறன்ஸ்

செங்குந்த இந்துவின் சீர் பெற்ற மாணவியாய், சிறந்த ஆசிரியையாய் ஈர்பத்தாண்டுகள் இனிமையாய் புவியியலும் சமூகக்கல்வியும் போதித்த புனிதை ருக்மணிதேவி நீவிர் அகவை அறுபதில் அறம் நிறை சேவைசெய்து அமைகின்றீர். தங்கள் எதிர்காலம் மாண்புறு புகழும் மனநிறைவும் பெற்றாங்கு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

## ஆசிரியர் கீதம்

இராகம் :- கரிகாம்போதி தாளம் :- திஸ்ரநடை

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகளறிந்து பூர்த்தி செய்வோம்
அவன் ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலை தூண்டிடுவோம்

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையை பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்



# எமது அதிபர்




**Mrs.Sivagnanavathy Visvalingam**

B.A(Cey),Dip.in.Ed,S.L.P.S.-1

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல சட்டநாதர் சிவபெருமனின் திருவருள் துணை கொண்டு கடந்த இரு வருடங்களுக்குரிய அதிபர் அறிக்கையை இன்றைய விழாவில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய எமது பரிசுத்தின, நிறுவுநர் தின விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற யாழ் மாவட்ட பாடசாலை கட்டிட வேலைப்பகுதி பிரதம பொறியியலாளர் பெருமதிப்புக்குரிய திருவாளர் குணரட்ணம் சிவபாலன் அவர்களே அவர் தம்பாரியாரும் யாழ் கல்விக்கோட்டப் பணிப்பாளருமாகிய திருமதி வசந்தமாலா சிவபாலன் அவர்களே, நல்லூர் கோட்டப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் அவர்களே நிறுவுநர் தின உரையை ஆற்ற வந்திருக்கும் திரு நடராசா சத்தியபாலன் அவர்களே பெருமதிப்புக்குரிய கல்விசார் அலுவர்களே சகோதர பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, கல்விசார ஊழியர்களே, மாணவச் செல்வங்களே, நலன்விரும்பிகளே அனைவருக்கும் எனது உளம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவிப்பதுடன் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று எமது கல்லூரி அன்னையானவள் தனது எழுபத்து மூன்றாவது அகவையில் கால்பதிக்கின்றாள். இன்றைய எமது விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ள திரு. சிவபாலன் அவர்கள் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாளர் குணரட்ணம் சரஸ்வதி தம்பதியினர்களுக்கு அருமை மகனாக தோன்றினார். இவர் தமது ஆரம்பக் கல்வியைச் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் கற்றுத்தேறியவர். இவர் தமது பொறியியல் பட்டத்தை இலண்டன் பல்கலைக்கழத்திலும் கற்றுத்தேறினார்.பின்னர் தாய்நாடு திரும்பி கல்வித்திணைக்களத்தில் சில காலம் பொறியியலாளராக பணியாற்றினார். பின்னர் வவுனியா கல்வித் திணைக்களத்தில் 1983 -1994 வரை பொறியியலாளராக பணியாற்றினார். 1995 ம் ஆண்டு தொடக்கம் யாழ் கல்வித்திணைக்களத்தில் இணைந்து கட்டட வேலைகள் பகுதிப் பொறியியலாளராக அரும்பணியாற்றி வருகின்றார். கடந்த பல ஆண்டுகளாக யாழ் குடாநாட்டில் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் சீர்குலைந்து போன பாடசாலை கட்டிடங்கள், மலசலகூடங்கள் என்பவற்றை மீள அமைப்பதிலும் புதிதாக அமைப்பதிலும் பல்வேறு நிறுவனங்களின் உதவிகளையும் பெற்று அயாராது பாடுபட்டு வருகின்றார். அவரது அரும்பெரும் முயற்சியினால் பாடசாலைகள் தமது தேவைகளை திறமையாகவும் விரைவாகவும் நிறைவேற்றி வருகின்றன. அண்மைக்காலமாக எமது கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்டடப்பணிகள் யாவற்றையும் துரிதமாக முடிப்பதற்கும் முடித்தவற்றிற்கான நிதியை விரைவாக பெற்றுத்தருவதற்கும் அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை.

அத்துடன் தீவக அரிமாக்கழக உறுப்பினராக இருந்து பல்வேறுபட்ட சமூகப்பணிகளையும் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமதி.வசந்தமாலா சிவபாலன் அவர்கள் தீவகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை களுத்துறை சென்ஜோன்ஸ் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை வேலணை மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரக்கல்வியை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். புவியில்

சிறப்புப்பட்டத்தை இவர் பேராதனைப் பல்கலைக்கழத்தில் பெற்றுக்கொண்டார் பட்டப்பின் டிப்ளோமாவை யாழ் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்தார். பின்னர் வவுனியா இறம்பைக்குள மகாவித்தியாலத்திலும் ஆசிரியராக பணியாற்றினார். இதன்பின் சேவைக்கால ஆலோசகராக பணிபுரிந்த வேளை இலங்கை அதிபர் சேவையில் இணைத்துக்கொண்டார். யாழ் மத்திய கல்லூரியில் பிரதியதிபராக சில ஆண்டுகள் பணிபுரிந்த பின் 2000ம் ஆண்டு ஜனவரியில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். அதிபராக சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருந்த வேளை 2007ம் ஆண்டு யாழ் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுக் கொண்டார். அப்பணியை சிறப்பாக ஆற்றி வருகின்றார்.

அறிவு ஆற்றல்களில் மேம்பட்டவர்களும், கல்விப்புலத்தில் உயர் பதவியாற்றி வருபவர்களுமான திரு, திருமதி சிவபாலன் தம்பதிகள் எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிப்பது எமது கல்லூரிச் சமூகத்தின் பேரதிஸ்டமாகும்.

இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது நல்லூர் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வைத்திலிங்கம் குணசேகரம் அவர்கள் எமது பிரதேசக் கல்வி அபிவிருத்தியில் பெரும் பங்கு ஆற்றிவருபவர். இவர் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர். 1330 குறள்களுக்கும் கதைகள் எழுத்தியுள்ளார். இவரது கதைகள் 19 நூல்களாக வெளிவந்துள்ளன. அத்துடன் பெரியபுராணம், விநாயக புராணம் என்பவற்றிற்கான கதைகளும் சிறு கதைகளும் வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார். ஆத்திசூடிக் கதைகள் எழுதி மலேசியாவில் நடைபெற்ற உலக சைவ மாகாநாட்டில் வெளியிட்டுள்ளார். இவர் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாசாலையில் பதினாறு வருடங்கள் பணியாற்றிய பின் 28.09.2005 தொடக்கம் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்து வருகின்றார்.

நிறுவுநர் தின உரையாற்ற வந்துள்ள திரு.நடராசா சத்தியபாலன் ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றியவர். சிறந்த எழுத்தாளர், பழைய மாணவர், கல்லூரி பற்றிய அக்கறையுள்ளவர். இங்கு வருகை தந்துள்ள எல்லோரையும் வருக வருக என் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**ஆசிரியர் மாணவர் விபரங்கள்**

தற்போது எமது கல்லூாயில் தரம் 6 -13 வரை 426 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அதிபர் உட்பட நிரந்தர ஆசிரியர்கள் 26 பேர் பணிபுரிகின்றார்கள். இவர்களுடன் தற்காலிக இடமாற்றம் பெற்ற 2 ஆசிரியர்களும் பணிபுரிகின்றனர். தொண்டராசிரியராக ஒருவரும் கடமையாற்றுகின்றார். கல்வி சாரா ஊழியர்கள் 4 பேர் பணியாற்றுகின்றனர்.

**வெளிச்சென்ற ஆசிரியர்கள் விபரம்**

03.02.2006ல் திருமதி நா.மாகலிங்கமும், 21.08.2007ல் திருமதி.ஞ.லோறன்ஸ் ஆசிரியரும் சேவையிலிருந்தது இளைப்பாறியுள்ளார்கள். அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எமது வாழத்துக் களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

### இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

திருமதி. பா. கனகநாயகம்

திருமதி.இ.மன்மதராசா

திரு.க.அருந்தவராசா

திருமதி.மீ.மகேந்திரன் ஆகியோர் இடமாற்றத்தைப் பெற்றுச் சென்றுள்ளனர். சென்ற இடங்களில் அவர்கள் பணி சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

### உள்வந்த ஆசிரியர்கள்

எமது கல்லூரியில் ஆசிரியப்பணிக்காகப் பின்வருவோர் இணைந்து கொண்டுள்ளனனர்

திருமதி.பௌ.பஞ்சலிங்கம்

திருமதி.ம.சுரேந்திரன்

திரு.செ.இரவிச்சந்திரன்

திரு.சி.சசீலன்

செல்வி.க.முருகசுந்தரி

### தற்காலிக இணைப்பு பெற்றோர்

திருமதி.அ.நிஷாகரன்

திருமதி.அ.குகானந்தா

மேற்படி ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### வாண்மை விருத்தி பெற்ற ஆசிரியர்கள்

திருமதி. க.முத்துக்கிருஸ்ணன் முதுதத்துவமணி (MED- கற்கை நெறியை) நிறைவு செய்துள்ளார்.
திருமதி. இரவீந்திரநாதன் HNDA பட்டத்தைப் பெற்றுள்ளார்.
திரு.இ.பசுபதீஸ்வரன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்துள்ளார்.

### அஞ்சலி செலுத்தப்பட வேண்டியவர்கள்

இக்கல்லூரியின் முதல் மாணவனும் அண்மையில் காலமான இளைப்பாறிய ஆசிரியருமாகிய அமரர் கந்தையா நடராஜா அவர்களுக்கும், இக்கல்லூரியின் நிறுவுநர் இளையதம்பி சாஸ்திரிகளின் பேரன் அமரர் சிவஞானம் இராஜேஸ்வரன் அவர்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம்.

### கல்விப்பெறுபேறுகள்

2005 ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் பெறுபேறுகளின்படி உயர்தரத்திற்கு 26 பேரும் 2006ம் ஆண்டு பெறுபேறுகளின்படி 10 பேரும் உயர் கல்வியைத் தொடர்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.
க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின்படி

2005 ஆம் ஆண்டு 8 பேரும்

2006 ஆம் ஆண்டு 16 பேரும் பல்கழைக்கழக அனுமதிக்குத் தகுதியடைந்துள்ளனர். இவ்வாண்டு செல்வி S.செல்வமனோகரி, செல்வி அ.தேவகி ஆகியோர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**விளையாட்டுத்துறை**

2006 சதுரங்கப்போட்டி பெண்கள் பிரிவு வலயமட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. பங்குபற்றிய மாணவிகள் செல்வி இ.றெபேக்கா, ஜெ.சந்திரகுமார், எ.சஞ்சிகா, ஜெ.பூவிழி, றொ.சிந்துஜா

**மெய்வல்லுனர் போட்டி வலயமட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 17 வயது பிரிவு | த.தர்மினி | 400M | 2ம் இடம் |
| | கு.நிசாந்தன் | 200M | 3ம் இடம் |
| | பு.நிசான் | 100M | 3ம் இடம் |

வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டி 2007 3ம் இடம்

கோட்டமட்டம்

கரப்பந்தாட்ட போட்டி 19 வயதுப்பிரிவு 1ம் இடம்

உதைபந்து போட்டி 15 வயதுப்பிரிவு 1ம் இடம்

**மன்றங்கள்**

இந்துமன்றம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | அதிபர் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி.தி.இராஜேஸ்வரன் |
| தலைவர் | - | செல்வன். இ.அகில்ராஜ் |
| செயலாளர் | - | செல்வி. ச.சுதர்சனா |
| பொருளாளர் | - | செல்வி. பு.ரசிதா |

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆராதனையுடன் நற்சிந்தனை, திருக்குறளும் பொருளும் கூறுதல் ஆகியன நடைபெறுகின்றன. நால்வர் குருபூசை நிகழ்வும் சேக்கிழார் தினமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் சுந்தரர் குருபூசைக்கு சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. இரா செல்வவடிவேல் கலந்து சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மாணவர் சமய அறிவை மேம்படுத்துவதற்காக

1. சமய அறிவுப் போட்டிகள்
2. பேச்சு
3. நாடகம், உரைச்சித்திரம் ஆகிய போட்டிகள் நடாத்தி ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் நடைபெறும் சமய அறிவுப்போட்டிகளில் பங்குபற்றி மாணவர்கள் தங்கப்பதக்கங்களும் பரிசில்களும் பெற்றுவருகின்றனர். 2005ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் செல்வி.க.தேவகியும் 2006ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் செல்வி.க.சாருஜாவும் தங்கப்பதக்கங்கள் பெற்றனர். இம்மன்றம் ஆண்டுதோறும் சட்டநாதர் சிவன் கோவில் திருவிழாவும் கொன்டலடி வைரவ கோவில் அபிஷேகம் பொங்கல் என்பனவும் செய்து வருகின்றது.

**ஆசிரியர் நலன்புரி மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.ஹ.சிவஞானசுப்பிரமணிய சர்மா |
| செயலாளர் | - | திருமதி.க.முத்துக்கிருஷ்ணன் |

பொருளாளர் – திருமதி.இ.பொன்னையா

இம்மன்றம் பாடசாலை உறுப்பினர்களின் மங்கல அமங்கல நிகழ்வுகளில் பங்குபற்றல் இடமாற்றம், ஓய்வு பெறுவோருக்கு பிரிவுபசாரம் சேவைநலன் பாராட்டுதல் ஆகிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. மாணவர்களுக்கு அன்றாட நிகழ்வுகளை அறியச் செய்ய செய்தித்தாளை வாங்கி வழங்கி உதவுகின்றது. பாடசாலை நிகழ்வுகளுக்கு பங்களிப்புச் செய்தல் புதிய உறுப்பினர்களை வரவேற்றல் ஆகிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றது.

**இன்ரறக்ற் கழகம்**

காப்பாளர் – அதிபர்

தலைவர் – செல்வன் மு.சிவநாதன்

செயலாளர் – செல்வி .ச.பிரியதர்சினி

பொருளாளர் – செல்வி.சி. ஞானரூபி

பொறுப்பாசிரியர் – திருமதி.பௌ.பஞ்சலிங்கம்

திரு.சி.சசீலன்

இக்கழகம் மாணவர்களது ஆளுமை விருத்தி, சேவை மனப்பான்மை என்பனவற்றை விருத்தி செய்யும் நோக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.

**மாணவர் முதல்வர் சபை**

காப்பாளர் – அதிபர்

சிரேஸ்ட மாணவர் தலைவர் – செல்வன். உ.உதயராஜ்

தலைவி – செல்வி. ச.சுதர்சனா

பொருளாளர் – செல்வி. ச.பிரியதர்சினி

பொறுப்பாசிரியர் – திருமதி.ரூ.இராஜரட்ணம்

திரு.இ.பசுபதீஸ்வரன்

திருமதி. பௌ.பஞ்சலிங்கம்

மாணவர் முதல்வர்கள் பாடசாலையின் தினசரி ஒழுங்கமைப்புக்கு பொறுப்பாக இருந்து பணியாற்றி வருகின்றனர்.

**பழைய மாணவர் சங்கம்**

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு ப.மா.சங்கங்களும் பழைய மாணவர்களும் அரும்பாடுபட்டு வருகின்றனர். அவுஸ்திரேலியா,கனடா, இலண்டன், டென்மார்க் போன்ற நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் கல்லூாயின் தேவைகளை அறிந்து காலத்துக்குக் காலம் வேண்டிய உதவிகளை ஆற்றி வருகின்றனர். மாணவர் குடிநீர் தேவை கருதி மின்நீர் இறைக்கும் பம்பி ஒன்றினை திரு.பவானந்தன் அவர்கள் அன்பளிப்புச் செய்தார். எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கான பரிசுச்செலவு முழுவதும் பழைய மாணவர் சங்கத்தின் நிதிகள் மூலமே பெறப்பட்டு வருகின்றன. கனடா பழைய மாணவர் சங்க நிலையான வைப்பு நிதியிலிருந்து கடந்த இரு வருட வட்டிகள் ரூபா 54700 வும் , அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்க உறுப்பினரும் அமரர் பண்டிதர் இராசையா ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் ஆண்டு தோறும் வழங்கும் நிதி ரூபா 10,000 வும் எமக்கு பேருதவியாக அமைந்துள்ளன.

எமது கல்லூரியின் பழைய மாணவர் திரு. கு.கிட்னர்,திருமதி கனகம்மா கிட்னர் ஆகியோர் ரூபா ஒரு இலட்சம் நிலையான வைப்பிலிடப்பட்டு வட்டிப்பணம் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்காகத் தற்போது அனுப்பியுள்ளார்கள். திருமதி. கனகம்மா கிட்னர் இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர், பல திறமைசாலியான மாணவர்களை உருவாக்கியளித்தவர் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். அவர்கள் வழங்கிய இந்நன்கொடை நிதியத்திற்கு எமது கல்லூரி சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளூரில் வாழும் பழைய மாணவர்கள் பலர் இப்பரிசளிப்பு விழா வெற்றிபெற அரும்பணியாற்றி வருகின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அதிபர் |
| செயலாளர் | - | திரு.கி.மகேந்திரன் |
| பொருளாளர் | - | திரு.சி.சசீலன் |

இச்சங்கம் கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையேற்படும் உதவிகளை வழங்கிவருகின்றது.

**உயர்தர மாணவர் மன்றம்**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | செல்வன். த.திலீப் |
| செயலாளர் | - | செல்வன். க.சாளுஜா |
| பொருளாளர் | - | செல்வி.ஜெ.சுகன்யா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி.ஜெ.கலாதரன் |

இம்மன்றம் மாணவர்களது தலைமைத்துவப் பண்பு ஆளுமை விருத்தி, மொழித்திறன்விருத்தி என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. மாதம் ஒருமுறை இம்மன்றம் கூடி விவாத அரங்கு, கருத்தரங்கு என்பன நடத்தி வருகின்றது. ஆண்டு தோறும் மகளிர் தின நிகழ்வையும் இம்மன்றம் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது.

2006ம் ஆண்டு ஒன்று கூடல் வைபவத்திற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் முதன்மை விருத்தினராக வருகை தந்துள்ளார்.

2007ம் ஆண்டு ஒன்று கூடல் நிகழ்விற்கு கல்லூரிப் பழைய மாணவரும் இலங்கை வங்கியின் நிர்வாக அதிகாரியுமான திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா பிரதம விருத்தினராக வருகை தந்து சிறப்பித்துள்ளார்.

**தமிழ் மன்றம்**

இம்மன்றம் மாணவர்களது பல்வேறு திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டது. வாரத்தில் ஒரு நாள் இம்மன்றம் கூடி மாணவர்களிடையே பேச்சு விவாதம், கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தும் செயற்பாடுகளை இம்மன்றமே பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றது.

2006ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கோட்ட வலய மட்டத்தில் பல மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். செல்வி ச.சுதர்சனா பிரிவு (5) கட்டுரை எழுதும் போட்டியில் மாவட்ட மட்டத்திலும்

பங்குபற்றினார். செல்வன் பா.சங்கீதன் பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார். மேலும் 2007ம் ஆண்டிற்கான தமிழ் மொழித்தின நாடகப் போட்டியில் "காத்தவராயன்" (சிந்துநடைக்கூத்து) எமது மாணவர்கள் பங்கு பற்றி 3ம் இடத்தைப் பெற்றுள்ளனர். இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி க.முத்துக்கிருஷ்ணன் இருந்து வருகிறார்.

**ஆங்கில மன்றம்**

இம்மன்றம் மாணவர்களது ஆங்கில அறிவை விருத்திசெய்ய உதவுகிறது.

ஆங்கிலதினப்போட்டியில் மாணவர்கள் கோட்ட வலயமட்டங்களில் பெற்ற இடங்கள் வருமாறு

1. செல்வி.க.சாருஜா - வலயமட்டம் வினாடிவினாப்போட்டி 2ம் இடம்
2. செல்வி.ர.கனுசா - கோட்டமட்டம் உறுப்பெழுத்துப்போட்டி 1ம் இடம்
3. செல்வி.இ.சுவேந்தா - கோட்டமட்டம் உறுப்பெழுத்துப்போட்டி 3ம் இடம்
4. செல்வி.ச.பிரசங்கா - கோட்டமட்டம் உறுப்பெழுத்துப்போட்டி 3ம் இடம்

விஞ்ஞான அறிவுப்போட்டியில் தரம் 11 இல் செல்வன் நீ.மயூரன் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். செல்வி.ப.தயாளினி இவ்வாண்டு நடைபெற்ற தனி நடனப் போட்டியில் கோட்டமட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். செல்வி பவித்திரா தேசிய கல்வியியற்கல்லூரி நடாத்திய அழகெழல் போட்டியில் 1ம் இடத்தையும் பிரதேச சபையால் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டியில் செல்வன் இ.கருண்ராஜ் 1ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். சமூகக்கல்வித்துறையில் கோட்ட வலய மட்டங்களில் மாணவர்கள் பல இடங்களையும் பெற்றுள்ளனர். வலயமட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் செல்வி க.சாருஜா செல்வி அ.தேவகி 3ம் இடம் செல்வன் டோ.ஜெரோன்ராஜ் 2ம் இடம் செல்வி இ.ஶ்ரீசந்திரிக்கா 2ம் இடம் செல்வன் யோ.துஷிகன் 1ம் இடம் பெற்றுள்ளனர்.

**நன்றிகள்**

பல்வேறு சிரமங்களின் மத்தியில் எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து பரிசளிப்பு உரையை நிகழ்த்தி பரிசில்களை வழங்கி இவ்வளவு நேரமும் எம்முடன் பொறுமையுடன் ஒத்துழைப்பு நல்கிய பிரதம விருந்தினர் தம்பதிகளுக்கு எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவர்கள் சிறப்பு விருத்தினராகக் கலந்து சிறப்பித்ததோடு எமது சுடரொளி சஞ்சிகையின் வெளியீட்டுரையையும் நிகழ்த்தியமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறுவுநர் தின உரையை நிகழ்த்திய சத்தியபாலன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக இச்சஞ்சிகை வெளிவருவதற்கும் பரிசளிப்பு விழா சிறப்புற நிகழ்வதற்கும் பண உதவி புரிந்தும் ஆலோசனை வழங்கி உதவிய எமது கல்லூரி ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் அன்பளிப்பு தந்துதவிய அனைத்துள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# OUR STAFF

## PRINCIPAL

Mrs.S.Visvalingam _ B.A(Cey), Dip.in.Ed, S.L.P.S.- 1

## SECTIONAL HEAD

Mrs.R.Rajaratnam – Sp..Trd, Agriculture.

## OTHER STAFF

Mrs.P.Gnanasegaravel – Sp.Trd.Maths.

Mrs.J.Kalatharan - B.A.(Cey), Dip.in.Ed

Mr.H.S.Sarma - Sp.Trd.English

Mrs.I.Ponniah – Sp.Trd.science.

Mrs.K.Muthukirishnan – B.A(Cey), Dip.in.Ed.MED

Mrs.K.Jeyarajabala- B.A(Cey), Dip.in.Ed

Mrs.R.Gnanapandithan – Sp.Trd. Science.

Mrs.T.Rajeswaran – B.A. Dip.in.Ed, Hin.Trd

Mr.R.Pasupatheeswaran B.com Dip.in.Ed

Mrs.T.Kirubanantha – Sp.Trd. Sc

Mrs.J.Tharmajeelan - Sp.Trd.P.E,B.A(Cey),Dip.in.Ed

Mr.T.Raveenthiranathan - Sp.Trd.Eng.H.N.D.A

Mrs.P.Panchalingam - B.A, Sp.Trd.H. Sc.

Mrs.S.Raveenthiran -Sp.Trd.Dance.

Mr.S.Kokulan – G.C.E.A/L

Mrs.S.Thnanaseelan – B.A.Dip.in

Miss.P.Tharshila – B.Fine Arts, Dip.in.Ed.

Mrs.P.Sathian – B.Com (Hons)

Mr.S.Ravichandran – B.Com, Dip.in.Ed.

Mr.S.Saseelan – B.A, Sp.Trd.Agri

Miss.K.Murugasunthari – B.A, Dip.in.Ed.

Miss.P.Thayadevini – B.A.

Miss.P.Gowri – B.Com(Hons)

Mrs.M.Surendran – B.Sc., Dip.in.Ed.

## Displaced Teachers

Mrs.A.Nisakaran – B.Fine Arts

Mrs.A.Kukanatha – B.Com

## Non Teaching Staff


Mr.S.Srishanmuganathan – Lab Assistant

Mr.P.Thiyagesan

Mr.N.Amirthalingam

Mr.S.Irythayaraja


யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
J/SENGUNTHA HINDU COLLEGE



# கல்வி

✍... P.யாழினி
*A/L 2009* கலை


நுனிப்புல்லை மேய்வது போல்
மேய்வதில்லை கல்வி
இலை மரத்திலிருந்து உதிர்வதுபோல்
ஆவதில்லை கல்வி
என்றும் வயதெல்லை வரம்பாகக்
கொண்டதில்லை கல்வி
சாதி மத பேதம் என்னும்
கண்டதில்லை கல்வி

உரியவேளை பசியின்போது
எண்ணுகின்றோம் உணவையே
சிறிய வயதில் கிடைக்கும் கல்வி
பசியைப் போன்ற துண்மையே
நினைவில் என்றும் வைத்திருக்கும்
நீண்டதொரு சக்தியை
இறைவன் அன்று தந்ததினால்
என்றும் வாழ்வில் நன்மையே

வாசிப்பதால் ஒருவன் முழுமனிதன்
ஆகலாம் என்றவுண்மை
இன்றைய இளம் தலைமுறைக்கு
முன்னுதாரணமாக எடுத்துக்கூற
கண்டதுகற்கப் பண்டிதன்
ஆகலாம் என்றகூற்றை
சிந்தையில் உரைக்கும் போதேயதை
உணர்ந்திடுவ காலப்போக்கில்

நிலையான சொத்தாக வாழ்வின்
இறுதிவரை நிலைத்திருக்கும்
பதியாத தடயங்களை சற்றுப்
பரிசீலிக்க உதவிசெய்யும்
மிக வறுமையிலும் கல்விகற்று
வாழ்வதிலே சிறப்புண்டு
அது பக்தியோடும் பண்புடனே
படிப்பதனால் வருவதுண்டு

ஏழ்மையிலும் நேர்மையாகக் கல்விகற்று
பார்போற்றும் பலகருமம் செய்திட்டால்
இறந்தபின்னும் புகழோடு வாழுகின்ற
உன்னத நிலையை அடைந்திடலாம்
பணம்மூலம் கிடைக்கின்ற புகழ்களெல்லாம்
காலப்போக்கில் மறைந்துவிடும்
கல்விமூலம் கிடைக்கின்ற புகழோ
காலாகாலம் நிலைத்து நிற்கம்



# சங்கப்பெண் புலவர்கள்

✍... நா.நாகநந்தினி
தரம் 13

"எட்டும் அறிவினிலாணுக்கிங்கே பெண் இழைப்பில்லை காண் என்று கும்மியடி." என பெண்களின் அறிவு பற்றி புரட்சிக் கவிஞர் கூறியுள்ளார். அன்று அவர் கண்ட கனவை இன்று பெண்கள் நனவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு இன்றைய பெண்கள் வாழ்வதற்கு அடித்தளமிட்டு சங்ககால பெண்கள் தாமும் வாழ்ந்து காட்டியுள்ளனர். இவர்கள் புலமையில் மட்டுமன்றி, வீரத்திலும் சிறந்து விளங்கினார்கள். இவ்வாறான சிறப்புப் பெறும் சங்கப் பெண் கவிவானர்களை ஈண்டு நோக்குதல் சாலச் சிறந்தது. சங்ககாலத்தில் முப்பதிற்கும் குறையாத சங்கப் பெண்புலவர்கள் வாழ்ந்ததாக கூறப்படுகின்றது. அவ்வாறு விளங்கிய புலவர்களின் சிலரை இங்கு நோக்குவோம். ஔவையார், ஆதிமந்திரியார்,உக்கவ்மா சாத்தியார், காக்கை பாடினியார், நற்சென்னையார், காவற் பெண்டு, குறமகள் இளவேனி,நக்கன்னையார், நப்பசலையார், பாரிமகளிர், பூங்கொண் உத்தரை யார், பூதப்பாண்டியன்தேவி, பெருங்கோப்பெண்டு, பொன்முடியார், வெள்ளிவீதியார் போன்றோர் சிறப்பாகக் கூறக்கூடியவர்கள்.

**ஔவையார்**

சங்கத்தலைமைக் கவியாக அவர் விளங்கினார். கொங்கு நாட்டின் பழந்தமிழ் குடியில் ஒன்றான பாணர் எனும் குடியில் பிறந்தார். இவர் முத்தமிழ் தேர்ச்சி பெற்ற கவிவாணர் ஆவார். இவருடைய அக்கை எனும்பெயர் மறைந்து ஔவையார் எனும் பெயர் நிலவுவதே இவருடைய சிறப்பைத் தெளிவுபடுத்தி நிற்கிறது. இவர் பல கவிகளைப் பாடி பெரும் புகழ் ஈட்டியவர். இவருடைய நண்பராக அதியமான் எனும் மன்னன் விளங்கி னான். இவர்களுடைய நட்புப் பற்றி புறநானூறு (101ம்) பாடலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அப்பாடல டியை இங்கு நோக்குமிடத்து "ஒருநாள் செல்லலாம் இருநாள் செல்லலாம்" என்பதாகும். இவர் தனது இந்நட்புப் பற்றி இருபத்து மூன்று பாடல்களில் புகழ்ந்துள்ளார். நண்பனான அதியமானிடம் நெல்லிக்கனி பெற்று உண்டதனால் பல காலம் உயிரோடு வாழ்ந்து தமிழுக்கு பல பணியாற்றி யுள்ளார்.

**பொன்முடியார்**

சங்காலப் பெண்கவிகளில் அடுத்து சிறப்பிடம் பெறுபவர் பொன்முடியார் ஆவார். இவரும் ஔவையார் காலத்திலேயே வாழ்ந்தவர். அதிய மானின் அன்புக்குரிய பெண்கவிகளில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தவர். இவரது சில பாடல்கள் தகடூர் யாத்திரை எனும் நூலில் காணப்படுகின்றது. இவர் வீரம் மிக்க பாடல்களையே அதிகம் பாடியுள்ளார். இவரது பாடல்கள் புறநானூறில் கொடுக்கப் பட்டுள்ளன. இவர் சமுதாய மேம்பாட்டையும் ஒவ்வொருவரின் கடமைகளின் தன்னையையும் ஆராய்ந்து கடமை தொடங்குமிடம், முடியுமிடம் என்பனவற்றைக் கண்டறிந்து அதனை ஐவகை நிலையுள் அடக்கிப்பாடியுள்ளார். கடமை தொடங்கு மிடம் வீடு, கடமை முடியுமிடம் நாடு என்பது இவரது கொள்கை. கடமைகளை தாய், தந்தை, கொல்லன், வேந்தன், வீரன் எனும் ஐந்து நிலையில் கூறியுள்ளார். அவை பின்வருமாறு,

| | |
|---|---|
| தாயின் கடமை | - ஈன்று புறம் தருதல் என் தலைக்கடனே |
| தந்தையின் கடமை | - சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே. |
| கொல்லன் கடமை | - வேல் வடித்துக் கொடுத் தல் கொல்லர்க்கு கடனே. |
| வேந்தன் கடமை | - நன்நடை நல்கல் வேந் தர்க்குக் கடனே. |
| வீரனின் கடமை | - களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. |

**வேற்றுமை பாடிய வெண்ணி**

வெண்ணிக்குயத்தியர் என்னும் பெண் கவி பற்றிக் குறிப்பிடுகையில் இவர் வெண்ணி என்னும் இடத்தில் குயவர் குடியில் பிறந்தார். இவர் தன் குடிக்கும், ஊருக்கும், மரபிற்கும் பெருமை சேர்த்த சிறப்பான ஓர் பெண்கவிவாணர். இவரது இயற் பெயர் மறைந்து காரணப் பெயரே இன்றும் நிலவி வருகின்றது. இவருடைய பாடல்கள் யாவும் கால வெள்ளத்தால் அழிவுற ஒரேயொரு பாடல் மட்டும் புறநானூறில் காணப்படுகின்றது. இப்பாடலின் வரிகள் வருமாறு.

"நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில்
ஆண்ட உரவோன் மருக..." என்பதாகும்.

இவரது பாடல்கள் சொல் வன்மை மிக்கவை. வள்ளுவருடைய நானநலம் இவரது பாடலில் பா நலமாக அமைந்துள்ளது.

**கண்ணீர்க் கவிதைச் செல்வி**

சோழநாட்டு மன்னன் கரிகாலனின் புதல்வியே இவராவர். இவர் பெயர் ஆதிமந்திரியார் என்பதாகும்.. இவர் தமிழ்ப்புலமையும் கவித் திறமையும் மிக்கவர். இவர் முதன்முதலாக "புனல்" எனும் விளையாட்டில் ஈடுபட்டதன் கணவனை காணவில்லை என அழுது புலம்பிய பாடல் குறுந்தொகையில் 31வது பாடலாக விளங்குகின்றது. காவிரிக்கரையில் துயரப்பாடல் பாடியதால் கவிப்பெண் கவி வரிசையில் இவர் இடம்பெற வழிகோலியது.

**புதுமை பாடிய பசலை**

இவர் பாண்டிய நாட்டில் கொற்கை எனும் இடத்தில் பிறந்தவர் பசலையார். இவர் பிறந்த இடத்துப் பெயரையும் சேர்ந்து இவரை மாநோக்கத்து நப்பசலையார் என்று கூறுவர். இவரது பாடல்கள் நற்றினை புறநானூறு என்பனவற்றில் காணப் படுகின்றன. இவரது நண்பனாக கிள்ளிவளவன் விளங்கினார். அவரின் வீரத்தையும் ஈகை செங்கோல் ஆகியவற்றையும் புகழ்ந்து பாடியுள்ளார். இது புறநானூறில் உள்ள பின்வரும் பாடலாகும். அதன் முதலடி வருமாறு

"புறவின் அல்லல் சொல்லிய கறை அடி
யானை வால் மருப்பு ........." இது புதுமை தழுவிய ஓர் பாடலாகும்.

கிள்ளிவளவன் இறந்து விட்டான் என்ற செய்தி கேட்டு யமனைப் பழித்து பாடிய பாடல் புறநானூறில் இருநூற்றி இருபத்தாறாம் பாடலாய் உள்ளது. இப்பாடல் தான் அவர் புதுமைக் கவியரசியாக விளங்க ஊன்று கோலாயிற்று.

**வீரம் பாடிய சாத்தி**

இவர் ஒக்கூர் மாசாத்தியார் என்று கூறப்படுகிறார். இவர் தன் பால்மணம் மாறாப் பாலகனை போருக்கனுப்பிய தாயின் வீரம் பற்றி புறநானூற்றுப்பாடலில் சிறப்பாகக் கூறியுள்ளார். அப்பாடலில் தொடர்வரி சில வருமாறு

"கெடுக சிந்தை கடி திவள் துணிவே
மூதில் மகளிராதல் தகுமே..." என்பதாகும்.

இவரது பாடல்கள் மொத்தம் எட்டு ஆகும். அவை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றில் காணப்படுகிறது.

வெண்பாவிற்கு புகழேந்தி என்பது போல உவமைக்கு ஒரு சாத்தி எனக்கூறுவது இவருக்கு மிகப் பொருந்தும். இவரது பாடல்கள் அனைத்தும் உவமைப் பெருக்குடையனவாக விளங்குகின்றன. உவமை யால் பாடலை அணி பெறச்செய்து இயற்கை வனப்பும், கற்பனை வனப்பும் பெறப்பாடிய கவின் கவியரசி இவராவர்

இவ்வாறாக சங்கப்பெண் புலவர்கள் ஒவ்வொருவரும் தந்தம் திறமைகளை ஏதோ ஓர் வகையில் வெளிக்கொண்டு வந்து இன்றும் தம் புகழ் நிலைக்க வழி கோலியுள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வீரம், கல்வி, ஆற்றல் பெற்றவர் களாக திகழ்ந்திருந்தார்கள். இன்றைய பெண்கள் தாம் எதையும் செய்யத்துணியும் ஆற்றல் பெற்றவர்களாக மிளிர்வதற்கு சங்காலப் பெண்களே அன்று பாலமிட்டார்கள். பெண்கள் நாட்டின் கண்களாவர்கள்.

## "மாற்றியே புதுமை செய்தான் மாண்பதெம் பண்ப தோடு!"

### இறைதுதி (அறுசீர் விருத்தம்)

மாறிலா மாண்பின் வீறாய்
மதிக்குமோர் தலைமைக் கூறாய்
பேறிலார் பெற்ற வாறாய்
பெரியதோர் கவிதை ஏறாய்
ஊறிலா உயர்வின் பேறாய்
உறுகவி உரைக்கு மாறாய்
ஈறிலா இறையே ஆறாய்
இன்கவி உரையே கூறாய்!

### கவித்திறம் (அறுசீர் விருத்தம்)

1. 1. பூத்திடும் பூவில் இங்கு
புகழுயர் பூவ தென்ன
நாத்திறம் நன்கு கொண்டு
நன்றுமே அன்று கம்பன்
தோத்திரம் விருத்த மாக
தொகுத்தநற் கவிதை தன்னை
ஏத்தரும் இயல்பதோடு
இயம்புதல் இலகு தானோ?

2. அங்குமோ கங்கை அண்டை
அனைந்தவன் ராமன் தன்னை
இங்குமோ காவி ரிக்கு
இழுத்துமோ வந்து வைத்தான்
எங்குமோ எவரும் எண்ணா
இயல்பினில் இனிய காதை
பொங்குமோ ரரிய சொல்லால்
புகன்றதன் புலமை என்னே!

3. சொன்னதாம் வான்மி கத்தில்
சுடுமொழி ராமன் உண்டு
அன்னைதான் சொன்ன போதும்
அதட்டுமோர் மொழியு முண்டு
சொன்னதாம் தந்தை தன்னைச்
சுட்டதாய் மொழிந்த துண்டு
ஏன்னதான் சொன்ன போதும்
எமதுபண் பாடோ இல்லை!

4. காட்டினான் கம்பன் இங்கு
கருத்துயர் ராமன் தன்னை
நாட்டினான் நமது பண்பு
நல்லதோர் ராமன் இங்கு
காட்டினூர் வாழ்வு தன்னை
காட்டுவோர் பெற்றோர் ஆணை
கூட்டினான் கொண்டான் அங்கு
குறிப்பிடும் குணத்தோ னானான்.

5. சொன்னமன் னவனின் சொல்லாய்
சொல்லவும் வேண்டு மோதான்
அன்னைதன் அறிவிப் பென்றால்
அதட்டிடும் அளவில் இல்லை
என்னவன் மகிழ்வு கொண்டான்
இராச்சியம் இளையோர்க் கென்றான்!
அன்னவன் இயல்பு கம்பன்
ஆக்கிய அருமை தானே!!

6. ஏசிடும் இயல்பு மில்லை
ஏனெனும் எதிர்ப்பு மில்லை
கூசிடும் மொழியு மில்லை
கொண்டுமே வாடி டாத
பேசிடும் வரைபி லுள்ள
பேறுதா மரையே போல
வீசிடும் விதத்தி லேதான்
விரிந்ததாய்க் காட்டி னானே!

7. பட்டிடாப் பயிர்ப்பின் பாவை
பாங்கதாம் சீதை தன்னை
தொட்டிடாத் தூய்மை ஓங்கத்
தூக்கியோன் இலங்கை வேந்து
முட்டிடா முறையி லேதான்
முகிழிடத் துடனே கூட்டி
ஏட்டிடா தெடுத்த தென்று
இயம்பினான் எங்கள் கம்பன்.

8. பட்டிடத் தொட்டுத் தூக்கிப்
பதைத்திடப் பாவை தன்னை
கட்டியும் பிடித்துக் கொண்டு
காவியே சென்ற தென்று
தட்டியும் கேட்க இந்தத்
தரணியோர்க் குரைத்த மற்றோச்
ஒட்டியும் உணரச் சொன்ன
உரையிற்பெண் பண்பொன் றில்லை.

9. மாற்றியே புதுமை செய்தான்
மாண்பதெம் பண்ப தோடு
சாற்றியே வைத்த தானே
சாதனை தன்னை இங்கு
போற்றியே புவியும் நாளும்
புகழ்வோர் புனிதங் காட்டி
ஏற்றியே இயம்பி னானே
இவனுக்கார் இணையா வாரே!

10. வெல்லுயர் விருத்தத் தாலே
விளம்பிடும் விதத்தி னோடு
சொல்லுயர் சொல்லில் சொன்ன
சொல்லொரு பொருளு மாக
நல்லுயர் திறத்தி னோடு
நவிலரும் புதுமை கூட்டிப்
பல்லுயர் திறத்தோர் வாழ்த்தப்
பாடினான் பாவின் வேந்தன்.

மு. பாலசுப்பிரமணியம்
அதிபர்,
மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்

## Thoughts

A man's conversation is the mirror. Of his heart.
மனிதனின் உரையாடல் இதயத்தின் கண்ணாடி போன்றது.

Love is sharing.
அன்பு என்பது பகிர்தல்.

Love is invisible but cannot be hidden.
அன்பைப் பார்க்க முடியாது. ஆனால் மறைக்க முடியாது.

Love is danger make it sweet.
அன்பு ஆபத்தானது இனிமையாக மாற்று.

Love is perfect only when we shared.
பகிரும் போதே அன்பு முழுமை பெறுகின்றது.

Smiles cost nothing but gives rich.
புன்னகை இலவசமானது. வளங்களை நிறையத்தரும்.

One minutes late – late, two minutes late – too late, three miutes late absent.
ஒரு நிமிடம் பிந்தினால் ஒரு நிமிடம் தாமதம். இரு நிமிடம் பிந்தினால் இன்னும் தாமதம். மூன்று நிமிடம் பிந்தினால் வரவின்மை.

Education is the mirror of socity.
கல்வி என்பது சமூகத்தின் கண்ணாடி.

You become what you think
நீ என்ன சிந்திக்கிறாயோ அதன்படி மாறுவாய்.

U.Uthayaraj
A/L 2008

# தேர்ச்சி மையக் கல்வி



எமது நாட்டின் கல்வித்திட்டம் எமது நாட்டின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படவில்லை என்பதனை கல்விச் சமூகத்தினர் உணரத் தொடங்கிவிட்டனர். எமது நாட்டில் எழுத்தறிவு வீதம் உயர்மட்டத்தில் காணப்பட்ட பொழுதிலும் கல்வித்தர விருத்தி (Quality Education) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைத் தரவில்லை. இதனால் கல்வித்திட்ட மாற்றங்கள் புகுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பொதுக் கல்வி இலவசமாக வழங்கப் பட்டமையும் மனனம் செய்யும் கல்வித்திட்டமும் மாணவர்களிடம் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க வில்லை. கல்வியானது சமூகப் பொருத்தப்பாட்டை ஏற்படுத்தத் தவறிவிட்டது. மேலும் தனிப்பட்ட திறன்களை வளர்ப்பதிலும் பெருமளவு தன் பணியைச் செய்யவில்லை.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1998, 1999ம் ஆண்டுகளில் ஆரம்பிக் கப்பட்ட இம்முயற்சியானது 2007ம் ஆண்டில் மேலும் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. 2007ம் ஆண்டு தொடக்கம் 1ம், 6ம், 10ம் தரங்களில் அறிமுகப் படுத்தப்படுகின்றது. இக்கலைத்திட்டத்தின் பிரதான இலக்குகளாக அமைபவை

1. மாணவர்களின் தேர்ச்சியை மேம்படுத்தல்
2. செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல்
3. செயற்றிட்டங்கள் ஒப்படைகள் மூலமான கற்றல்.
4. மாணவர்களின் ஆக்கத்திறன் (Creative Skill), பிரச்சினை தீர்க்கும் திறன் (Problem Solving Skill), சமூகத்திறன் ( Social Skill), கற்பனை வளம் என்பவற்றை விருத்தி செய்தல்.
5. மாணவர்களுக்கு தேவையற்ற சுமைகளை ஏற்படுத்தாது உண்மையான விடயங்களுடன் கூடிய முதன்மையான கற்றல் எண்ணங் களுக்கு இடமளித்தல்.
6. அழுத்தங்களில் இருந்து விடுபட்டு பிள்ளை நேயச்சூழல் ஒன்றை விருத்தி செய்தல்.

இதுவரை காலமும் உள்ள கலைத்திட்டங்களில், முன்னரே தீர்மானித்தவற்றை கற்ற மாணவர்கள் 2007ம் ஆண்டு கலைத்திட்ட மாற்றத்தின் மூலம் இதுவரை அறிந்திராதவற்றை கண்டறியவும், எதிர்காலத்திற்குத் தேவையானவற்றை கட்டியெழுப் பவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வடிப்படையில் கலைத்திட்டம் மூன்று முக்கிய வகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன

1. தேர்ச்சிமையக் கல்வி – Competency Based Education
2. ஆசிரியர் வகிபாகம் - Role of Teacher
3. செயற்பாட்டு ரீதியிலான கற்றல், கற்பித்தல் அணுகுமுறை - Activity Based Teaching Learning Process

இவற்றுள் தேர்ச்சி மையக் கல்வி மிகவும் முக்கியமானது.

தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு ஒன்று சேர்ந்து கட்டி எழுப்பப்படும் வாழ்நாள் முழுவதற்குமான பழக்கமாகும். தேர்ச்சி ஒவ்வொரு பாடங்களிலும் பகுத்தாராயப்பட்டு அத்தேர்ச்சி பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன. தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் என்பனவற்றின் அடிப்படையில் தான் புதிய கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது அறிவு, திறன், மனப்பாங்கு என்பன ஒன்று சேர்ந்து வாழ்க்கைக்கான பயிற்சியை வழங்க வேண்டும் என்பது தான் தேர்ச்சிமையக் கல்வியின் முக்கிய நோக்கமாகும். இதற்காக K.A.S.P மாதிரியுரு பயன்படுத்தப்படும்.

1. K – Knowledge – அறிவு

2. A – Attitude – மனப்பாங்கு
3. S – Skill – திறன்
4. P – Practice – பயிற்சி


அறிவைப் பெறும் பொழுது தேர்ச்சி உருவாகிறது. அறிவை மாணவர் பல வழிகளில் பெறமுடியும் ஒருவர் கற்கும் போது மூளை போஷிக்கப்பட்டு மனதினில் சலனம் ஏற்படும். அச்சலனத்தின் மூலம் மனப் பாங்குகள் நல்லவையாகவும் அமையலாம், தீமையா கவும் அமையலாம். அதன் மூலம் தத்தம் மனப்பங்கு களுக்கு ஏற்ப குறித்த திறன்களை விருத்தி செய்ய தாமாகவே முன்வருவர். திறனின் விருத்தி பயிற்சியாக மாறும் பொழுது தேர்ச்சி மையக் கல்வி நிகழும். அக் கல்வி நீண்டகாலம் நிலைத்தும் நிற்கும்.

தேர்ச்சி மையக்கல்வி மாணவரை வாழ்க் கைக்கு கல்வி பயன்பட வேண்டும் "ஏட்டுச்சுரைக்காய் கல்வியாக" இருக்கக்கூடாது என்ற நோக்கில் புகுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மையக்கல்வி வெற்றி பெற வேண்டுமாயின் ஆசிரியரின் வகிபாகமும் மாற வேண்டும். பரிமாற்ற வகிபாகத்தில் (Transaction Role) இருந்து நிலைமாற்றுதல் வகிபாத்திற்கு (Tronsformation Role) ஆசிரியர் மாறவேண்டும்.

செயற்பாட்டு ரீதியான கற்றல் கற்பித்தல் அணுகுமுறையில் பாடத்திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். அதாவது செயற்பாட்டு ரீதியான பாடத் திட்டமிடலாக (Activity Lesson Plan) பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். கற்றலில் சுயமாகக் கற்பதற்கும், தாமாகத் தேடிக்கற்பதற்கும் ஏற்ற முறையில் புதியவற்றை கண்டறியவும் கற்பித்தல் அணுகுமுறை மாறவேண்டும் மேலும் தேர்ச்சி மையக்கல்வி இலக்கினை அடைய வேண்டுமாயின் செய்து பார்த்தல், கலந்துரையாடல், தர்க்கித்தல், நியாயப்படுத்தல், பிரச்சினை தீர்த்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் ஆழமாகக் கற்க முடியும்.

கற்றல் கற்பித்தல் அணுகுமுறையில் பின்பற்றப்பட வேண்டிய 5E தேர்ச்சிமையக் கல்வி தன் இலக்குகளை அடைய உதவும் என நம்பலாம் (E-1-Engagement, E-2-Exploration, E-3-Explanation, E-4-Elaboration, E-5-Evaluation) மேற்குறிப்பிட்ட பாடத்திட்டமிடலும், ஆசிரியர் வகிபாகத்தின் மாற்றமுமே தேர்ச்சி மையக் கல்வியின் பயனுறுதியை தீர்மானிக்கும். எதிர்காலத்தில் மாணவர்கள் கல்வியை வாழ்நாள் கல்வியாகவும் மாணவர் அனுபவிப்பதற்கு தேர்ச்சி மையக் கல்வியே உதவும் என்பதில் ஐயமில்லை.

தேர்ச்சிகளை முக்கியமாக இரண்டு வகைப்படுத்தலாம்.




1. தொடர்பாடல் தேர்ச்சி
2. தகவல் தேர்ச்சி
3. சிந்தித்தல் தேர்ச்சி
4. தனியாள் தேர்ச்சி
5. ஆளிடைத் தேர்ச்சி
6. சூழல் தேர்ச்சி

திருமதி. ஜெ. கலாதரன்
ஆசிரியர்

# காந்திஜி ஒரு வேதம்

ஆ... J.சிவகுமார்
*A/L 2008*

மகாத்மாகாந்திஜி இந்தியாவிலே போர்ப் பந்தர் என்னும் இடத்திலே பிறந்தார். காந்தியின் சேவையானது பாரதத்தோடு நிற்காது பூமி எங்ஙனுமே வேதகீதமாக ஓங்கி ஒலித்தது.

சத்தியம் காந்தியை ஆட்கொண்டது. இம்சைக்கு முன்னால் 'அகரம்' தோன்றி அகிம்சை என்றாகி அவரது வாழ்வை எளிமையாக்கியது. அவரது கண்கள் சத்தியமாயும் அகிம்சையாயும் ஒளி வீசின. 'உழைப்பு' வந்து அவரது கைகளானது ராட்டை யாக அவர் சுழன்றார். ராட்டை அவரோடு சுழன்றது. இந்தியக் கூரையின் கீழ் சாதி, சமயம், இந்து, முஸ்லீம், மொழி, இனம் பிரதேசம் எழுந்தறிந்தது. கூலி நிறம் என்ற ஒரே தலையங் கத்தின் கீழ் அவை ராட்டையால் செய்து கொள்ளப்பட்ட இறுக்கமான தனியொரு கைத்தறிப் போர்வை யாகின. பிரித்தாளப் பிரித்தானிய அரசுக்கு முடிய வில்லை காந்தி சத்திய அகிம்சைக் கனல்கள் சத்தியம் கக்கிய கனல்க ளாகின. இதன் முன்னால் பிரித்தானி யப் பீரங்கிகள் மௌனமாகின. இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதிலே தனியே காந்தியின் அந்தக் கண்களுடனேயே பிரித்தானியப் பெரிய அரசு பேச வேண்டியிருந்தது.

உலகத்தை உசுப்பிய பெருந்தலைவர் களுள்ளே காந்திஜி தனித்துவமானவர் அவருக் கூடாகப் புதிய சிந்தனைகள் உலகு தெரிந்து கொண்டது. 'சத்தியாக்கிரகம்' அவற்றுள் மிகவும் புதியது இந்தியாவின் தலைவிதியை உருவகப்படுத்து வதிலே அது மிகவும் செறிவான ஒரு மருந்தாக இருந்தது அது தாராளமாகவே காந்தியின் கைகள் வசமிருந்தது ஆபிரிக்க சிறைகளிலே 249 நாட்களும் இந்திய சிறைகளிலே 2089 நாட்களுமாக மொத்தம் 2338 நாட்கள் காந்தி சிறை வைக்கப்பட்ட போதெல் லாம் அது புதிதாகிப் புதிதாகி நின்று நீடிக்கும் திறனிலே வீரியப்பட்டுக்கொண்டது என்றெல்லாம் ஆங்கிலேயர்கள் (வெள்ளையர்) அவரைப்பற்றி அகிம்சையைப் பற்றி வெளியிட்டு காந்தி அகிம்சை யின் பெரும் குரு என போற்றிக் கொண்டனர்.

சத்தியாக்கிரகம் (உண்மை விசை) இன்னும் சிலர் காந்தியின் அகிம்சை என்ற இதற்கு பெயர் இட்டார்கள். ஒவ்வொரு முறையும் அகிம்சையின் பால் கிம்சை இடைவினைப்படும் போதெல்லாம் இடை வினை உறவுகளினால் கெட்டதைக் கெட்டால் அது எதிர்ப்பதில்லை அகிம்சையின் அகராதியினுள்ளே தோய்ந்து கொள்கின்ற நிலைமைகள் அகரத்தைத் தனது முதுமைக்கு இடம் மாற்றிக் கொள்ளும் நிலைமை கள் கைகூடிக் கொள்ளும் வாய்ப்புக்களை இது அதிகரிக்க வைக்கின்றது. அகிம்சையின் விளைவு களினுள்ளே தன்னையு மறியாது இம்சை அகிம்சா ஆவர்த்தனமாகிக் கொள்ளுகின்றது.

ஒரு ஆத்மீக வலிந்த அதிர்வு என்று தான் இந்த அகிம்சை அதிர்வைக் கருதவேண்டும் போல இருக்கின்றது. இம்சை இந்த வலிந்த அதிர்வுக் குட்படுகின்றது முதலிலே தனது சொந்த முயற்சியோடு ஏனோ தானோவென்று அதிர்வடைந்து ஈற்றில் அகிம் சையின் மீடிறன் வீச்சுக்கு உயர்ந்து கொள்கின்றது. அகிம்சை இம்சையை வெல்வது என்பதல்ல அகிம்சை வெல்வதுமில்லை தோற்பது மில்லை இம்சைக்கும் கிம்சைக்கும் சூழலுக்குப் பதிலாக அகிம்சை சூழலைக் கொடுக்கின்றது. இம்சையை அகிம்சையாக்கிக் கொள்கின்றது. அகிம்சை இந்த அகிம்சையான இம்சையின் சேருமியால் தனது அளவில் வலுவில் அதிகப்பட்டுக் கொண்டு ஏனைய

இம்சைத் தொகுதியை எதிர்நோக்க வல்ல ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது.

இந்த தத்துவத்தைத்தான் காந்தி என்கின் றோம் கட்டுரையாளரிற்கு ஊடாக பார்க்கும் அவரது ஆசிரியர்களினது கண்கள் எல்லாம் அதை வேதம் என்கின்றன. சைவர்கள் முகமதியார்கள் கிறிஸ்த வர்கள் பௌத்தவர்கள் எல்லோரையும் சிந்துவெளி நாகரீகம் இந்துக்கள் என்றே கொள்ளும் இந்துக்கள் வேதமென்றால் அது உபதேசிக்கப்படுவது என்பதாக கொள்வார்கள். வாழ்க்கையைத் தான் கல்வி என்பது பூமிப் புகைவண்டியின் பயணிகளின் கல்வி மறுசீராக் கத்தைத் தேவைகளிலே இந்த வேதம் உபதேசமாகிக் கொள்கின்றது. அகரம் கஸ்தூரி பாயினூடாகத்தான் காந்தியை வந்தடைகின்றது. இதைக் காந்தி அன்பு என்கின்றார்.

இன்றைய தலைமுறை இதைப்பற்றி சிந்திக்க வேண்டும் வாழ்ந்தால் சுவாமி விவேனாகந்தர் போல வாழ் என்று வாழ்த்துகின்றோம் உயர்ந்தால் கோபுரம் போல உயர்.

அகிம்சையை அனாதி சோதித்துப் பார்த்த சம்பவம் இது வந்தனத்தின் வணக்கம் அடை யாளத்தை கைகள் குவித்துக் காட்டி மூன்று முறை காந்தியை சுட்டானே ஒரு இந்து இந்தியன் அங்கே தான் அகிம்சை வேதம் புடம் போடப்பட்டது பிடி, அடி இவனைச் சுடு என்ற வார்த்தைகளை கூறியிருந் தால்? காந்தி யூடு ஜெயராம்! ஜெயராம்! இவனை மன்னித்துக் கொள் என்று தான் வார்த்தைகள் வெடித்தன. அகரம் அகிலமயமானது அகிம்சையோடு இது இறுக்கமான பிடிப்புக்களைப் பூண்டுள்ளது. செப்பமும், சீலமும் எளிமையும் தன்னை மையப் படுத்தாமையுமாக நின்று பூமிப்புகை வண்டியி லிருந்து ஒரு ஐப்பசி 2 இலே அவர் காணாமற் போய் விட்டார் என்றல்ல நாங்கள் அவரைக் கண்டு கொள்ளாமலிருக்கின்றோம்.

---

A thing of beauty is a joy for ever.
அழகான பொருள் எப்பொழுதும் ஆனந்தமானது.

The best way to serve god is to serve humanity.
மக்கள் சேவையே மகேசன் சேவை

There are two good man one is dead and the other is unborn.
இரண்டு நல்லவர்கள் இருக்கின்றார்கள். ஒருவன் செத்துப் போனான் மற்றவன் இன்னும் பிறக்கவில்லை.

---

# Library

✍... S.Pirashnika
*Grade 10*[A]

The Library is a place where books are kept. The person who looks after these books is called a Librarian. Some libraries are small and some libraries are big like the British Museum Library. The British Museum Library has a collection of books about 18,000,000 in number.

Today most of our schools have Libraries. If you have a class library it will enrich your knowledge. All the class teacher and the students must try their best to start a class library of their own. Today each and every town or village has Public Libraries. There are large collections of books in these libraries. If we want to borrow books from these libraries first of all we have to get the membership. It is very easy to be a member in these libraries. We have to pay a small sum of money to join the library as a member. The officer – in – charge will help you in many ways. How to join?, how to use the library?, how to borrow books from the library?

The library is a place of clam and silence. We should not speak inside a library. We should not disturb others while reading or using the library. There are two main sections in a library. They are "The Reference Section", and "The Lending Section". We can not take away the books in the Reference Section. We can make use of these books inside the library. We can take books home from the lending section. The books in the library are arranged in order and they are given numbers too. Now a days most libraries follow the " DEWEY DECIMAL SYSTEM" in arranging their books.

"Learning takes place through out our life time". Therefore we must make use of the best from the libraries.

"Let's read and enrich our knowledge".

**The Importance of English**

We all know that there are many languages in the world. But we consider the English Language as the International Language. It is spoken throughout or every where in the world.

English Language is know as the language of Trade, Diplomacy and Advanced knowledge. Most countries in Asia and Africa teach English in Asia and Africa Teach English as a second language in their schools. Some other countries teach English as their first language.

In SriLanka we learn English from grade 1 up to University Education. A good knowledge of English would help us to follow higher education as well as to get good employment.

English Language is a gift to us from Britain. The British rulers ruled SriLanka for many years and as a result we were introduced English Language. Today some schools teach their students in the English medium. English makes us full, increases our knowledge, helps to better our skills and helps us to find good jobs anywhere in the world.

Therefore it is important that we must learn good and better English for a bright future we must learn English. If we fail we will become backward and our future will be in dark.

Let's learn English, enrich our knowledge and have a good future.

# சுனாமி

ஆ... நீ.மயூரன்
தரம் 11B

சூலம் பிடித்த காலனாய்
"வேலை" தன்னில் வேங்கையாகி
காலைப் பொழுது நேரத்திலே நீ
பாய்ந்தெழுந்ததன் காரணமென்ன?

இரக்கமற்ற கடலே நீயும்
ஒருமுறை எண்ணிப்பார்
தாயின் மடியில் பால்குடித்த
பச்சிளம் பிஞ்சுதான் உனக்கு
என்ன பாவம் செய்தது.
யுத்தத்தின் கொடுமையில் ரத்தத்தில்
ஊறிய நம் இனத்தைக் கொன்று
சாகரம் எங்கும் பொங்கி
சரித்திரத்தில் நீ இடம் பெற்றதென்ன.

வேலியே பயிரை மேய்ந்தாற் போல
காலமெல்லாம் உன்னை நம்பியிருந்த
கரையோர வாழ் மக்களுக்கு
கவலை தனை கொடையாக கொடுத்து
உயிரையும் உடமையையும் அபகரித்தது
நீதியோ? நெறியோ? தருமமோ?

காலத்தின் கெடு பிடியிலிருந்து மீண்டிருக்கும்
இலங்கை மீது காலனாய் வந்து
சூலத்தைக் கொண்டு வதைத்த தென்ன?

சூட்டிய மனைவி தொட்டிலில் குழந்தையாய்
கடலில் கணவனை விட்டு
கண்ணிமையாக பார்த்துக் கொண்டிருந்த வேளை
பேரலையாய் பெருக் கெடுத்து
பெரும் உயிரை விழுங்கிய தென்ன?

அலைவீசும் அன்னையே நீதான்
தஞ்சம் என்றிருந்த வேளை
கொலை வெறியோடு
கொன்றழித்த தென்ன?

சுமாத்திராத் தீவில் பிறந்த நீ
சுனாமி எனும் பெயர் பெற்று
சரித்திர வரலாற்றில் இடம்பிடிக்க
சூறாவளியாய் உருவான தென்ன?

அடம் பிடித்த அன்பு செல்வத்திற்கு
உன்னைக் காட்டி உணவூட்ட
என்னைப் பார்த்து ஏளனம் செய்கிறியா என்று
எரிமலையாய் பொங்கிய தென்ன?

இத்தனை துன்பங்களையும் செய்துவிட்டு
இருநாளில் நீ மறைந்தாய்
இரக்கமற்ற கடலே உன்னை
ஏழேழு ஜென்மத்திலும் நாம் மறவோம்.

# இந்து சமயி ஆகிய நாம் கடைப்பிடிக்கும் விழுமியப் பண்புகள் சில



"இந்தச்சாரீம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற ஆறுமுகநாவலர் கூற்றுக்கு இணங்க இந்த உடம்பை பெற்ற நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெற வேண்டும். இது இறைவன் எமக்குத் தந்த இவ் உடம்பு நோய் இன்றி நீடித்த காலம் நிலைக்க வேண்டும். நாம் இறைவனுடன் இணைவதற்கான யோகஞ் செய்வதற்கு இந்த உடம்பே கருவியாக உள்ளது.

"உடம்பால் அழிபவர் உயிரால் அழிவார் அவர் திடம்பெற மெய்ஞ்ஞானம் தேடவும் மாட்டார்" அரிதற் கிடைத்த இந்த உடம்பினை நாம் நல் வழிப்படுத்தி இறை அருளைப் பெற வேண்டும்.

வாழ்வாங்கு வாழும் காலத்தில் நாம் கடைப் பிடிக்கும் நற்பழக்க வழக்கங்களே எமக்கு நல்வழி காட்டியாக அமைகிறது. குடும்பம் என்ற அன்புப் பிணைப்பில் ஊறிய நாம், கண்ணால் காண முடியாத இறைவனை எவ்வாறு உள்ளத்து இருத்துவது என வினா எழுகின்றது. இறைவனை கண்ணால் காண இயலாது உண்மைதான். நாம் ஒவ்வொருவரிடத்தும் அன்பை எவ்வாறு வெளிப்படுத்துகிறோம். உள்ளத்தி னால் வெளிப்படுத்துகிறோம். அதேவேளை அதே அன்பை கண்களினூடாகவும் செலுத்த முடியும். அவ்வாறே ஈசன் உறை கோயில்களான பிற உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல் சாலச் சிறந்தது. இதனை சிவஞான சித்தியார் எனும் நூலில் " ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கு அன்பில்லார்" என கூறப்படுகிறது. இதனையே திருமந்திரத்தில்

"உன்னை ஒருவன் வணங்கில் உன்னுள் உறையும் இறைவனையே என்று நினை" என கூறுவதிலிருந்தும் அறியலாம் இன்று இந்நிலை அரிதாகி வருகிறது. அன்பு தான் சிவம் என போற்றும் நாம் சிறியவர்கள் பெரியவர்களை கைகூப்பி வணங்கும் பொழுது ஒரு ஆன்மீக, கலாசாரம் வெளிப்படுத்தப்படுகின்றது. அது மட்டு மல்ல எம்மைச் சூழவுள்ளவர்களும் எம்மை பின்பற்றுவர். இச் செயற்பாடு எமது பாரம்பரியம் நிலைக்க வழிசெய்கின்றது.

அறிவான மனிதன் பேசமுடிந்த காரணத் தினால் எண்ணம் சொல் செயல் மூன்றையும் ஒருமித்து செயற்படுத்த முடியாத நிலையில் தனது கடமையை தவறாவிடுகின்றான். சொல்லும் செயலும் மாறுபடும் போது ஐம்பொறிகளும் நிலைதளர்ந்து விடுகின்றன. அவனது செயற்பாடுகள் சிதைவுறு கின்றன. நாம் எமது கடமையிலிருந்து தவறுவதற்கு காரணமானவை நாம் எண்ணும் மனமும் அதனை வெளிக்கொணரும் வாக்கும் அவை ஒருமித்த செயலுமே என்பதை நாம் உணர்ந்து அவரவர் கடமைகளை நன்றே புரியின் நற்பலன்களையும் ஆன்மீக திருப்தியையும் பெறலாம்.

அவ்வாறே பணிவு என்பது எம்மிடையே தேவையான ஒன்று. செல்வந்தன் ஒருவன் தனது செல்வத்துடன் பணிவு என்ற பண்பினையும் கொண்டு இரட்டிப்பான செல்வத்தை பெறுகிறான். அவ்வாறே கல்வியிற் சிறந்த ஒரு மாணவன் தனது கல்விச் செல்வத்துடன் பணிவு எனும் பண்பினைச் சூடிக்

கொள்ளும் போது வாடாத மணமுள்ள மாலையினை அணிந்து கொண்டவனாக காட்சி தருகிறான்.

ஆற்றங்கரை பனை மரமும் அறுகம்புல்லும் என்ற கதையில் வீரம் கொண்டு நிமிர்ந்து நின்ற பனைமரம் சரிந்தது.அறுகம்புல் பல்வேர் ஓடிக் கொண்டு பற்றிப் படர்ந்து கொண்டும் பணிந்து நின்று, இன்று மக்கள் வாழ்த்துவதற்கு உவமையாக நிற்பதை நாம் அறிவோம். நாயன்மார்களில் சிந்தனைகள் நல்வனவாக இருந்ததால் அவர்கள் வார்த்தைகள் தோத்திரங்களாயின. தோத்திரங்கள் அற்புதங்க ளாயின. பல நூற்றாண்டுகளின் பின்னரும் அவை புதுப்பொலிவுடன் பயன் கொடுக்கின்றன.

சித்தர்கள் வார்த்தையில் மெய்மை இருந்தது அது நடந்தது நடக்கிறது நடக்கும். இன்று நாம் யோகர்சுவாமிகள்

"பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமடி"

இன்று யாழ்ப்பாண மக்கள் படும் அவலத்தை எக்கண்கொண்டு அன்று அவர் கண்டார் என நாம் வியந்து பார்க்கவில்லையா? நடக்கவில்லையா? நடந்து கொண்டிருக்கவில்லையா?

அடுத்து நாம் பிறரில் நிறைகாணும் பண்பு, அறிவு அற்றவர்களுடைய குறைகள் ஏற்படும் போது நிறைவாக அவற்றைக் காணவேண்டும். சுவாமி விவேகானந்தர் இளைஞருக்கான மிடுக்குடனும் எதனையும் ஆய்வு செய்தே தீர்மானிக்கும் துடுக்கு டனும், தியானத்தில் ஆழ்ந்திருக்கும் இராமகிருஷ்ண பரமகம்சரை சிறு நெருப்பு துகள் கொண்டு சுட்டார். நெருப்பு பரமகம்சரின் உடலை தீண்டியதே தவிர தியானத்தை குழப்பவில்லை. விவேகானந்தர் பரமகம்சர் கால்களை கட்டி அழுதார்."ஐயா பரிசோதனை நடத்தினேன்" என்றார் ஆம் உனது பரிசோதனை முடிவு கிடைத்ததா? என கேட்டார் பரமகம்சர் ஆத்திரம் கொள்ளவில்லை கோபம் கொள்ளவில்லை அவர் உலகம் போற்றும் நவயுக சங்கரரை ஆக்கவில்லையா? நாம் சிவ சின்னங் களை அணிந்து ஆலய வழிபாடு செய்துவிட்டு மறுகணமே எமக்கும் சமுதாயத்திற்கும் வேண்டாத செயல்களை விடுத்து எமக்குரிய விழுமியப் பண்புகள் சிலவற்றையேனும் கடைப்பிடிப்போமானால் எமக்கும் எமது சமுதாயத்திற்கும் எமது சமயத்திற்கும் ஆற்றும் பணி ஆகும்.

திருமதி. தி. இராஜேஸ்வரன்
ஆசிரியர்.

> வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையம் பெரும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடாமுயற்சி பெற்றவன், 'சமுத்திரத்தையே குடித்துவிடுவான்', 'எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும்' என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை, அத்தகைய மன உறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.
>
> - விவேகானந்தர்

# வீரம் விளையாடிய சங்ககாலம்

✍... ச.சுதர்சனா
*A/L 2008*

சங்கத் தமிழ் அன்னையின் இரு கண்களாக காதலும் வீரமும் ஒளிவீசியது. அந்த வகையில் காதல் சார்ந்த ஒழுக்கங்களை அகத்திணை என்றும் வீரம் சார்ந்த ஒழுக்கங்களை புறத்திணை எனவும் திணை வகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் சங்கால புறத்திணை மரபு பற்றி எடுத்து நோக்குதலே இக்கட்டுரையின் பிரதான நோக்காகும். அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழ்வது புறம் ஆகும். இதனை வெளியே பிறரிற்கு எடுத்து விளக்க முடியும். சங்கப் புறத்திணையில் முடியுடை மூவேந்தர்கள், கடையெழுவள்ளல்கள், குறுநில மன்னர்கள் என்போரது வீரம், போர்ச்சித்தரிப்புக்கள், கொடை, பண்டைத்தமிழர் பண்பாடு, தொழில்சார் நடை முறைகள், வாழ்க்கை முறைகள், தத்துவங்கள் பற்றிய கருத்துக்களே இழையோடிக் காணப்பட்டன. சங்ககாலத்தை வீரயுகம் என்றழைப்பர். இதனூடகவே சங்ககாலப்புறத்திணை பற்றி நன்கு விளங்கிக் கொள்ளலாம். புறத்திணையில் வீரமே தலையாய ஒன்றாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல போர்ச்சித்திரிப்புகளும் முக்கிய அம்சமாகக் காணப் படுகின்றது. அரசர்கள் மட்டுமன்றி மக்களும் பெருவிருப்புடையோராகக் காணப்பட்டனர்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்கு கடனே
நன்னடைநல்கள் அரசர்க்கு கடனே
ஒளிருவாள் அருஞ்சமர் முறுக்கி – களிறு
எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே.

என்ற சங்க காலப் பாடலினூடாக மக்கள் ஒவ்வொரு வரும் போர் என்கின்ற கடமை உணர்வு பெற்றவர் களாக காணப்பட்டனர் என்பதனை அறியக்கூடியதாக உள்ளது.

வீரமரணம் அடைதல் பெரும் பேறெனக் கருதப்பட்டது. இதனால் மரணம் அடைந்தோரிற்கு நடுகல் நாட்டி வழிபட்டனர். குழந்தையொன்று இறந்து பிறந்தாலும் பிறந்து இறந்தாலும் வாளால் வெட்டிப் பிளந்த பின்னரே புதைக்கின்ற வழக்கம் காணப் பட்டது. இக்காலத்தில் போர் நிகழ்ந்த போர்க் களங்களிற்கு புலவர் நேரடியாகச் சென்று போர்க் காட்சியைக் கண்டு வீரர்களின் மெய்ப்பாடு தோன்ற அவற்றை வர்ணித்துப் பாடியுள்ளனர். இதனால் இப்போர்ப் பாடல்கள் இயற்கை ததும்புவதாகக் காணப்படுகிறது. உதாரணமாக கீழ்வரும் பாடலைச் சான்று காட்டலாம்.

"கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்.........
வரிவயம் பொருத வயக்களிறு போல......" என அழகாக கூறப்பட்டுள்ளது.

அதாவது போர்க்களத்திலே பகை அரசர்க ளுடன் போர் செய்து வெற்றிவாகை சூடி நின்ற போது தனக்கு அழகான குழந்தை கிடைத்த செய்தி கேட்டு அக்குழந்தையைப் பார்க்கச் செல்லும் போது கையிலே வேலையும் காலிலே கழலையும் அணிந்து உடலிலே வியர்வை சிந்த கழுத்திலே சிறிய காயமும் காணப்படவே சென்றான். போர்க்களத்திலே எவ்வாறு வீரோடு காணப்பட்டானோ அக்கோபம் அவனது வாரிசை சென்று பார்த்த போது தணியவில்லை. இதனூடாக விளங்கிக் கொள்வது என்ன வென்றால் மன்னர்கள் போர்வெறி மிக்கவர்களாகவே காணப்பட்டனர்.

சங்ககாலத்தை " ஆயுதம் தரித்த நிறுவன காலம் என பேராசிரியர் க.கைலாசபதி குறிப் பிட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

சங்ககாலப் போர் அணிகள்,ஆயுதங்கள் என்பன எவ்வாறு காணப்பட்டது என்பதை பின்வரும் பாடல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

“வாள் வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன
தாள் களங்கொளக்கழல் மறைந்தன ......”

என்னும் பாடல் சளைக்காத வீரத்திற்குச் சான்றாகும்.

அதாவது
“உன்னுடைய வாள் குருதிக் கறை தோய்ந்து காணப்படுகிறது வீரக்கழல்கள் உராய்ந்து உராய்ந்து அரும்பு வேலைப்பாடுகள் மறைந்து கொல் ஏற்று போல் உள்ளன. கேடயங்கள் அம்பு துளையிட்டு துளையிட்டு நிலையில் தப்பாத இலக்கம் போல் உள்ளன. குதிரைகளின் இடதுசாரி, வலதுசாரி கட்டப்பட்ட முகக்கருவி உராய்ந்து குருதி குடித்த புலிவாய் போன்று உள்ளன. யானைகள் மதிற் கதவுகளை குத்தி மழுங்கிய தந்தங்களுடன் வரும் காட்சி கூற்றம் போல் உள்ளது. இவ்வாறிருக்க நீ கிழக்குத்திசையிலே தேர் ஏறி வருகின்றாய் அக்காட்சி செஞ்ஞாயிற்றின் உதயம் போல் உள்ளது. இவ்வாறு இருக்க உன்னைப் பகைப்பவர் யார்? அவ்வாறு பகைத்தவரின் நாடு பசியால் அழுது புலம்பும் குழந்தைகளை உடைய நாட்டைப் போன்றதாகும்” என்ற போர்ச்சித்தரிப்பானது வீரத்தின் மிகைத் தன்மையை வடித்தெடுக்கின்றது.

சங்க காலத்தில் ஆண்கள் மட்டும் வீரர்களாக திகழவில்லை. பெண்களும் வீரம் உடையவர்களாகக் காணப்பட்டனர். அதாவது புறநானூற்றில் முன்னை நாள் நடந்த போரில் கணவனை இழந்தவள் இன்றும் போர்ப்பறை கேட்டு விருப்பத்தோடு பள்ளி சென்றிருந்த தனது ஒரேயொரு பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனை சென்றழைத்து வந்து தலைக்கு எண்ணெய் வைத்து தலைவாரிவிட்டு வேலைக் கையிலே கொடுத்து போரிற்கு அனுப்பி வைக்கின்றாள். போரிலே இறந்த மகனின் முதுகில் ஈட்டி பாய்ந்து இறந்தானா? என்பதையே முதலில் ஆராய்ந்து நெஞ்சிலே ஈட்டி பாய்ந்து இறந்தானா? என்பதையே முதலில் ஆராய்ந்து நெஞ்சில் ஈட்டி பாய்ந்து இறந்து வீரசொர்க்கம் எய்திய மகனைப் பார்த்து பெருமிதப் படும் வீரத்தாயாக அக்காலப் பெண்கள் காணப் பட்டனர்.

சங்க காலத்தில் நடந்த போர்களும் நில இயற்கையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது. தத்தமது நிலத்திலே இயற்கையாக மலர்ந்துள்ள மலர்களை சூடிக்கொண்டு போரிற்கு செல்வது வழக்கம். அவ்வகையில் அந்நில புற ஒழுக்கம் அப்பூவின் பெயரால் அழைக்கப்பட்டது. உதாரண மாக குறிஞ்சி நிலத்தின் புறவொழுக்கம் வெட்சி. ஏனெனில் அவ்வீரன் போரிற்குச் செல்லும் போது வெட்சிப் பூவையை சூடிச்செல்வான்.

சங்ககாலத்தில் போரின் மீது நாட்டங் கொண்ட மக்கள் அதில் ஈடுபடுவது தமது கடமை யெனக் கருதியமையை அறிகின்றோம். அப்போரும் அறத்தின் பாற்பட்டதாகவே அமைந்திருந்தது. இதனைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் சித்திரிக்கின்றது.

“ஆவும் ஆனின் பார்ப்பன மக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் – பேணித்
தென்புலம் வாழுநர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போற் புதல்வரைப் பெறாதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்”

இவ்வாறாக சங்ககாலத்தில் வீரம் தலை தூக்கிக் காணப்பட்டது. வீரம் என்கின்ற கடலில் நீந்தி விளையாடிய வீரர்களாக சங்ககால மக்கள் விளங்கினார்கள். அவர்களாது இரத்தத்திலே வீரம் ஊறிக் காணப்பட்டது. “வீரயுகம்” என்ற பெருமையுடன் சங்ககாலம் விளங்கிக் காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# ஆசிரியர்

✍... ச.பிரசங்கா
தரம் 10A

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாய்ச்
சார்ந்திருப்பது ஆசிரியர் கூட்டம் - அது
அமுதான கவிகாட்டும் அந்திவண்ணப் பூந்தோட்டம்
அறிவுமனம் நின்ற கலைக் கோட்டம்

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டுத் தாம்கீழே
இருப்பாரே இதுவன்றோ புதுமை – அந்த
மேனிநிலம் பாராத மேதையரைப் பாடாமல்
மேதினியில் இருக்கிறதா கவிதை?

அன்னவரின் நெஞ்சிலே ஆனந்தம் நின்றால்தான்
அறிவுநதி தேனாக ஓடும் - துன்பக்
கண்ணீரின் கரையோரம் கதை கேட்டு நின்றாளா
கவிதை மயில் எங்கெழுந்து ஆடும்?

தெய்வமணி மாளிகையில் தீபமெனத் தாமிருந்து
தெளிவான ஒளியறிவு தருவார் - ஆமாம்
நெய்யிழந்த பின்னாலும் நின்றெரிந்து மெய்கருகி
நெஞ்சொடிவார் யார் எண்ணெய் தருவார்?

பட்டையில் பாட்டையிடப் பனியொளியை சிந்துமெனப்
பலர் வைரம் தன்னைப்பற்றிச் சொன்னார் - வறுமை
சுட்டெரிக்க சுட்டெரிக்கத் தூவுஒளி தருமிவர்க்குச்
சுவையாக யாருவமை சொன்னார்

கரைசேர்ந்த பின்னாலே கவலையலை மோதிதினம்
கண்கலங்கி நிற்கிறதே தோணி? – அறிவுக்
குறை போக்கும் ஆசிரியர் குறைதீர்க்கச் சமுதாயம்
கொடுக்கிறதா சரியான தீனி?

ஆசிரியர் பணியொன்றே அறப்பணி என்றே தம்மை
அர்ப்பணித்துக் கொண்டவரைத் தொழுது – தென்றல்
வீசிவரும் வேளைகளில் வித்தாரக் கவிதையெனும்
விதையிடுவோம் அறிவு நிலம் உழுது

# ஆசிரியரும் விளைதிறன் கற்பித்தல் முறையும்



"எழுத்தறியத் தீரும் இழிதகைமை என்பது முதுமொழியாகும். சிறார்களுக்கு எழுத்தை அறியச் செய்து உயர்ந்த ஞானத்தை புகட்டுபவர்கள் ஆசிரியர்கள். எமது நாட்டின் எழுத்தறிவு வீதமானது உயர்ந்த மட்டத்தில் இருப்பதாகக் குறிகாட்டிகள் மூலம் அறிய முடிகிறது. நாமும் எமது நாட்டின் எழுத்தறிவு வீதம் அதிகரித்துள்ளது எனப் புகழ் பாடிக் கொள்கின்றோம். ஆனால் எமது பாடசாலைகளின் இடைவிலகல் அதிகரித்தல், பண்புத்தர விருத்தி குறைவாயிருத்தல், மீளக் கற்போர் தொகை அதிகரித்துச் செல்லுதல் போன்றவற்றை நோக்கும் போது விளைவுகள் மனதிற்கு திருப்தியைத் தரவில்லை. எமது நாட்டின் கல்விக்கான செலவினங்கள் அதிகரித்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் பாடசாலைகளில் தரமான மாணவர்கள் உருவாகவில்லை.

பாடசாலை என்ற சமூகச் சக்கரத்தின் மையச் சக்கரமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே பாடசாலையின் தொழிற்பாடுகளில் கல்வி அமைச்சு, புதிய கல்விச் சீர்திருத்தங்கள், பாடசாலை அதிபர், பெற்றோர் போன்ற பலவகைப்பட்ட பொறுப்பு மிக்கவர்கள் பங்கேற்கின்றனர். எனினும் அவர்கள் அனைவரையும் விட ஒருபடி உயர்ந்தவர்களாக ஆசிரியர்கள் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆனால் அண்மைக் காலங்களில் அரசியல்வாதிகள் சமூக உளவியலாளர்கள், பொருளியலாளர்கள், கல்வித்திட்டமிடலாளர்கள் போன்ற அனைவரும் பாடசாலைக் கல்வி முறைமையின் குறைபாடுகள் பற்றி அதிகமாக விமர்சிக்கின்றனர். அத்தகைய விமர்சனங்கள் யாவும் "ஆசிரியர்களின் பலவீனங்கள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டனவாக அமைந்து விடுகின்றன. சமூக நிறுவனங்களான பாடசாலைகள் சமுதாயத்துக்காகவே பிள்ளைகளை உருவாக்குகின்றன. இந்த வகையில் ஆசிரியர் தமது பணியினை நிறைவேற்றும் பொழுது விழிப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

இன்று கற்பித்தல் பணியானது அரச பாடசாலைகளில் மட்டும் நடைபெறுவதில்லை. தனியார் கல்விநிறுவனங்களிலும், வியாபார நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் உயர் கல்வி நிறுவனங்களிலும் மேற்கொள்ளப் படுகிறது. மாறிவரும் உலகில் தகவல் தொழிநுட்பம் காரணமாக கல்விச் சந்தர்ப்பங்கள் (Opportunities) உருவாகிக் கொண்டிருப்பதுடன் சவால்களும் (Threats) தோன்றுகின்றன. அச் சந்தர்ப்பங்களிலிருந்து பயனைப் பெறுவதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் ஆசிரியர்களுக்கு நவீன அறிவுடனும் திறனும் அவசியமாகிறது. சவால்களை சந்திப்பதற்கு பொருத்தப்பாடான மாணவர்களை உருவாக்க வேண்டும்.

இன்று பாடசாலைக்குச் செல்லும் சிறார்களில் ஒரு சிலர் நன்மை அடைவதும் பலர் நன்மை அடையாது விடுவதும் பெரும் பிரச்சினையாக விளங்குகிறது. ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் விடயங்கள் சகல மாணவரையும் சென்றடைய வேண்டுமெனப் பிரயத்தனம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் கற்பிப்பவை எல்லாம் ஒரு சில மாணவரைச் சென்றடைவதில்லை. இதற்கு காரணம் மாணவரிடம் காணப்படும் பலம் (Strength) பலவீனங்களுக்கும் (Weaknesses) ஆசிரியர் பின்பற்றும் கற்பித்தல் முறைகளுக்குமிடையே தொடர்

பின்மை காணப்படுதல் ஆகும். இதனாலும் மாணவரின் அடைவு பாதிக்கப்படலாம்.

சிறந்த ஆசிரியர் ஒருவர் தனது இலக்கு களை நிறைவேற்றுவதற்கு பின்வரும் எண்ணக் கருக்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. செயற்றிறன்
2. வினைத்திறன்
3. விளைதிறன்

Peter Drucker என்பவரின் கூற்றுப்படி செயற்றிறன் என்பது செயற்பாடுகளைத் திருத்தமாகச் செய்தல். அதாவது பாடசாலையில் இருந்து உள்ளீடுகளிற்கு ஏற்ப தரமான வெளியீடுகள் பெறப்படுமானால் செயற்பாடுகள் செயற்றிறன் கொண்டவை எனலாம். வினைத் திறன் என்பது திருத்தமானவற்றைச் செய்தல். குறித்த கருமம் குறைவான வளங்களுடன் வீண்விரயங்கள் இன்றி குறித்த காலத்தில் செய்து முடித்தலைக் குறிக்கும்.விளைதிறன் என்பது குறைவான உள்ளீடுகளுடன் அதிக மான விளைவு பெறப்படுதலாகும். இம்மூன்று செயற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பா னவை. இவை மூன்றினையும் நிறைவேற்றும் பொழுது ஆசிரியரின் இலக்கு நிறைவேறிவிடும்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் பிரதான இலக்கு வகுப்பிலுள்ள சகல மாண வரினதும் அடைவு மட்டத்தை உயர்த்துவதாகும். அதற்காக அண்மையில் வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் (Teaching for successful intelligence) என்ற புதிய அணுகு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது பாரம்பரிய கற்பித்தல் முறையிலிருந்து வேறு படுகிறது. "பொருத்தமான இலக்குகளும் பொருத்தமான சந்தர்ப்பங்களும் வழங்கப்படும் ஒருவனுக்கு வாழ்க்கையில் வெற்றி பெறுவதற் கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ஆற்றல் இருப்பின் அதுதான் வெற்றிகரமான நுண்ண றிவு எனப்படும். எனவே வெற்றிகரமான நுண்ணறிவு பாடசாலைக்கு அடிப்படையாக அமைவதோடு வாழ்க்கையில் சாதனை படைக் கவும் உதவும். வெற்றிகரமான நுண்ணறிவு உடையோர் புதிய சூழலுக்கு விரைவில் இசை வாக்கம் அடைவர். புதிய சூழலுக்கு தம்மை மாற்றிக் கொள்வர் அல்லது தமக்கேற்ப சூழலை மாற்றுவர்.

வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல் நான்கு பிரதான அம்சங்களைக் கொண்டது. அவையாவன

1. ஞாபகக் கற்றலுக்கான கற்பித்தல் (Teaching for memory learning)
2. பகுப்பாய்வுக் கற்றலுக்கான கற்பித்தல் (Teaching for analytical learning)
3. ஆக்கக் கற்றலுக்கான கற்பித்தல் (Teaching for creative learning)
4. செய்முறைக் கற்றலுக்கான கற்பித்தல் (Teaching for practical learning)

ஞாபகக்கற்றலுக்கான கற்பித்தல் என்பது ஆசிரியர்கள் மனனம் செய்யும் முறையை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தலை அல்லது ஒரு விடயம் தொடர்பாக அறிவைப் பெற்றுக்கொள்வதே கற்றலிற்கு அவசியமானதாகும். ஒரு விடயம் பற்றி எதுவுமே தெரியாது, பிரயோகம், பகுப்பாய்வு போன்ற உயர்திறன்களைப் பெறமுடியாது யார்?, என்ன? எங்கே? என்ற வினாக்களை எழுப்புவதன் மூலம் ஞாபகக் கற்றலைத் தூண்டலாம்.

பகுப்பாய்வுக்கான கற்றலுக்கு கற்பித்தல் என்பது மனனம் செய்து ஒப்புவிப்பதில் அக்கறை காட்டாத மாணவர்களுக்கு சிந்தனையைக் கிளறி அவ்விடயத்தைப்பற்றி பகுப்பாய்வு செய்யத் தூண்டுவதாகும். இம்முறை ஒப்பிடுதல், தீர்மானித்தல் போன்ற உயர் திறன்களைப் பெறுவதற்கு உதவியாகும்.

ஆக்கக்கற்றலுக்கான கற்பித்தல் என்பது மாணவர்களின் ஆக்கச்சிந்தனை ஆற்றல்களை விருத்தி செய்வதும் ஊக்குவிப்பதும் ஆன கற்பித்தல் முறையாகும். சுயகற்றலில் ஈடுபடும் பொழுதுதான் உச்சக் கற்றல் நடைபெறுகின்றது என்பது ஆய்வுகளின் முடிவாகும். "கற்றலை கற்கும் மாணவனிடம் விட்டுவிடு" என்பது புதிய சிந்தனையாகும். ஆசிரியர்கள் மாணவர் களுக்கு தகவல்களைத் திரட்டிக் கொடுப்பவராக இல்லாது "தேடல்" முயற்சிகளில் ஈடுபடுவார் களேயானால் சிந்தனை விருத்தியடையும்.

செயல்முறைக் கற்றலுக்கான கற்பித்தல் என்பது மாணவரில் பலர் செயல்முறைக் கற்றலையே விரும்புவர் தாம் கற்கும் விடயங்கள் தமது நாளாந்தக் கருமங்களுக்கு உதவும் என மாணவர் உணர்வாராயின் அவர்கள் அவற்றை விரும்பிக்கற்பர். இதுவே இன்றைய தேவை யாகும்.

அண்மைக்காலத்தில் மேற்கொண்ட ஆய்வுகள் வெற்றிகரமான நுண்ணறிவுக்கான கற்பித்தல், பாரம்பரிய கற்பித்தலை விட மிகுந்த பயன் அளித்துள்ளதென்பதை எடுத்துக்காட்டு கின்றன. எனவே மாணவர் படித்தவற்றை நினைவில் வைத்துக் கொள்வதற்கான கற்றலில் ஈடுபட வேண்டும் அவர்கள் பகுப்பாய்வுக்கற்றல், ஆக்கக்கற்றல், செயல்முறைக்கற்றல் ஆகிய வற்றில் ஈடுபடுவதற்கான கற்பித்தல் வகுப்பறை யில் நிகழுதல் அவசியம் இதன்மூலம் மாண வரது அடைவு மட்டத்தை ஆசிரியரால் அதிகரிக்க முடியும். ஆய்வுகளின் முடிவுப்படி 2007ம் ஆண்டு கல்விச்சீர்திருத்தம் ஆசிரியரின் விளைதிறன் மிக்க கற்பித்தலையே வலியுறுத்தி நிற்கிறது. எனவே விளைதிறன் மிக்க கற்பித்தல் மூலம் செயற்றிறன் மிக்க மாணவர்களை உருவாக்குவோம்.

திருமதி. க. முத்துக்கிருஷ்ணன்
ஆசிரியர்

## நற்சிந்தனை

- எப்போதுமே தோல்வியை பிரித்துப் பார்க்காதீர்கள். அது வெற்றியின் அம்சம் என்பதை உணருங்கள்
- நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானல் உன்னுடைய கால்களால் நடந்து போ, மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.
- உண்மையை பேசுங்கள், கொஞ்சமாக பேசுங்கள், அன்புடன் பேசுங்கள், இனிமையாக பேசுங்கள், சகல வழியிலும் உங்களுக்கு முன்னேற்றம் உண்டு
- எல்லா உறவுகளையும் அன்பின் வடிவமாகக் கண்டு நேசிக்கப் பழக வேண்டும் அதனால் உங்கள் வாழ்வு மலரும்
- கஷ்டங்களை இறைவனிடம் மட்டும் முறையிங்கள் அவன் தீர்ப்பது போல் யாராலும் நம் கஷ்டங்களைத் தீர்க்க முடியாது.

# என் மன ஊற்றில் இருந்து

செ.ஷாமினி
தரம் 10A

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் மகுட வாசகத்தின் கீழ்இயங்கும் எங்கள் பாடசாலை காலத்தால் வரலாறு படைத்தது.

இன்று எமது பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுபவர் திருமதி. எஸ்.விஸ்வலிங்கம்

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக'

எனும் பொய்யா மொழிப்புலவனின் வாக்கிற்கிணங்க கற்றதன் வழி ஒழுகும் பண்பு மிக்கவர். பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல் என்பதற்கேற்ப களமறிந்தொழுகும் திறமையாளர் எவ்விடயத்திலும் தற்துணிவுடன் செயற்படும் ஆளுமைமிக்கவர்.

இக்கல்லூரியை நடத்திச் செல்லும் துணிவு அவரிடம் நிறைவாகவே உள்ளது. கண்டிப்பும் தியாக உள்ளமும் கொண்ட எம் அதிபர் மாணவரின் நிலையறிந்து வழிநடத்தும் தியாக உள்ளம் கொண்டவர். விடாமுயற்சியோடு செயலாற்றும் திறமை படைத்த இவர் என்றும் ஆசிரியரை விட்டுக் கொடாது அவர்களது சுய மதிப்பைக் காப்பதில் அக்கறை உடையவர்.

தாம் எடுத்த பணியில் எந்த அளவுக்கு இடையூறு ஏற்பட்டாலும் தடைக் கற்களையும் படிக்கற்களாக ஆக்கி செயற்படுத்துந் திறமை உடையவர். இவரது காலத்தில் தான் எமது பாடசாலை கல்வியாலும், மாடிக் கட்டடங்களாலும் உயர்ந்தது. மேலும் எமது பாடசாலையில் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு செயற்படுபவரும் இவரே. எத்தகைய பிரச்சினைகள் துன்பங்கள் வந்துள்ள வேளையிலும் வாடா மல்லிகையாய் எம்முள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்.


அவரது இன்முகமும், புன்சிரிப்பும் ஒரு நோக்கும் எமது இதயங்களில் என்றும் குடி கொண்டிருக்கும்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்றும் பொய்யாமொழியில் வாக்கிற்கமைய எமது அதிபர் எமைகாத்த தன்மையினை நாம் என்றும் மறவோம் நினைவுடன் நன்றி கூறுவோம்



செங்குந்த இந்துக் கல்லூரி மாணவ முதல்வர் சபை



செங்குந்த இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியம்

# போரே! நீ போ

✍... பு.ரசீதா
*A/L 2008* கலை

நாங்கள் சிதைக்கப்படுகிறோம்
சிறுபான்மையினர் என்பதாலா?
நாங்கள் அழிக்கப்படுகிறோம்
ஆண்டவனின் சித்தத்தாலா?
விடியல்கள் எமை விட்டு
விலகிச் செல்கின்றனவே
மடிதல்கள் மட்டுமா
எமக்குச் சொந்தம்?
சோகங்கள் தானா
எங்களின் தேசிய கீதங்கள்
ஆதலால் - போரே! நீ போ
இத்தனைக்கும் கர்த்தா நீ தானே!

வாழ்விலே தீயை மூட்டி
வசந்தத்தின் வரவிற்கு வரம்பிடாதே!
பிணங்களின் மணங்களில்
உன் வாசம் - மரண ஓலமே
உந்தனின் வேத கீதம்
உன்னால் - இமைப்பொழுதில் இமை மூடும்
இளம் சிட்டுக்கள்
அழிப்புக்கள் மட்டுமே
உந்தன் தொழிலாதலால்
போரே! நீ போ
இத்தனைக்கும் கர்த்தா நீ தானே!

பூபாளங்கள் கேட்கும் வேளையிலே
முகாரிகள் - எங்களின்
நெஞ்சுகளில் முட்டி மோதுகின்றன.
மானிடம் மெல்ல மரிக்கின்றது
மரணங்கள் மண்ணிலே மலிகிடன்றன
கொலைகளும் இங்கேதான் குவிகின்றன
இழப்புக்கள் தாங்காது இதயங்கள் பிளக்கின்றன.
இனிமேலும் வேண்டாம் மானிடவாழ்க்கை
கிழக்கிலே வரவில்லை சூரியன்
வடக்கிலே இருள் மெல்ல படர்கிறது
ஆதலால் - போரே! நீ போ
இத்தனைக்கும் கர்த்தா நீ தானே!

# பொருளாதார வலுவில் ஐரோப்பிய ஒன்றியம்

✍... S.ராகுலன்
*A/L 2008*

தனிமனித சுதந்திர உரிமைகள் அடக்கப் படுகின்ற போது அங்கே பிரிவினைகள் தோன்றுவது இயல்பு என்பதை வரலாறுகள் நிரூபித்திருக்கின்றன. மாறாக மனித உரிமைகள் இன மத பேதமின்றி மதிக் கப்படுகின்ற போது மனிதர்களுக்கிடைய ஒருமைப் பாடுகள் தோற்றுவிக்கப்படுவதையும் உலக வரலாறு கள் எடுத்துக்காட்டியுள்ளன.

இன்று உலகில் பொருளாதார விழுக்காடு மற்றும் அரசியல் ஆக்கிரமிப்பு போன்ற காரணங் களினால் சமுதாயங்களுக்கிடையில் நாடுகளுக் கிடையில் பேதங்கள் உருவாகி பிரிவினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. இது தவிர வளர்ச்சி அடையும் நாடுகளில் இன, மத, மொழி வெறிகளும் மக்களிடையே அந்நியத்தன்மையும் ஏற்படுவதற்கு தகைமையற்ற அரசியல் யாப்புகளும் தகுதியற்ற அரசியல்வாதிகளும் ஆளுமைகளை மேற்கொள்வதனால் மக்கள் வாழ்வில் சுமூக நிலையைப் பேண வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

இன்றைய உலக நாகரிக நடப்பில் மனிதன் இவ் வடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய அவசியங்கள் அற்றுப்போய் உள்ளது. மனித உரிமைகள் உயர்வாக பேணப்படும் இடங்களாக இன்று மேற்குலக நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. தனிமனித சுதந்திரங்கள் மதிக்கப்படும் நாடுகளில் மக்கள் ஒருமைப்பாடுகள் மேலோங்கியே இருக்கும்.

இதன் அடிப்படையில் தான் ஐரோப்பிய ஒன்றியம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பாவில் வலுமிக்க பொருளாதார பலத்தை கொண்ட நாடுகள் கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய ஐரோப்பிய ஒன்றியம் தன் பலத்தை மேம்படுத்து வதற்காக கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் இலகுவாக இணைத்து வருகிறது ஐரோப்பாவில் மட்டுமல்ல உலக அரங்கில் ஜேர்மன் நாடு கடந்த 60 வருடகாலத்தில் ஒரு விசித்திரமான பேக்குக் கொண்ட நாடாக இருந்திருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு (1939-1945) முக்கிய தாதாவாக இருந்த சர்வாதிகாரியும் நாத்திகக் கொள்கையும் கொண்ட அடல் ஹிட்லர் தன் கொள்கைப்படி ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் தன் காலடியில் கொண்டுவர நினைத்ததால் பல கோடி மக்களின் உயிர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தான். உலகம் முழுவதுமாக 56, 125, 262 மக்கள் கொல்லப் பட்டார்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுக்கு வந்த காலத்தில் இருந்து ஜேர்மனிய நாட்டுக்கு இராணுவ யுத்திகள் சம்பந்தமான காரியங்களை செய்வதற்கு ஏனைய வல்லரசுகள் ஐக்கிய நாடுகள் சபை ஊடாக தடைவிதித்தன. இக்கால கட்டத்தில் வேறு வழியில் லாத ஜேர்மனி தனது பொருளாதாரபலத்தை முன்னெடுத்து அதில் வெற்றி கண்டது. இதே ஜேர்மனி தான் இன்று ஐரோப்பிய ஒன்றியம் தலை ஓங்குவதற்கு முக்கிய நாடாக இருந்து வருகிறது.

எவை எப்படி இருப்பினும் அடக்குமுறை மற்றும் இராணுவ கட்டவிழ்ப்புகள் இனத்துவேசப் பொறிகள் அனைத்தையும் விட பொருளாதார பலத்தினால் பலவற்றைச்சாதிக்கலாம் என்பதற்கு இன்று ஜேர்மனிய நாடு எமக்கு உதாரணமாக வுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமானது 1957ம் ஆண்டு ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்ற பெயருடன் 'றோம்' சமாதான உடன்பாடிக்கையின் போது ஆரம்பிக்கப்பட்டது ஐரோப்பாவில் ஒரு பொதுவான

பொருளாதார அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் ஆரம்ப காலத்தில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனியக் குடியரசு இத்தாலி லக்ஸ்ஸம்பேக், நெதர்லாந்து ஆகிய 6 நாடுகள் கைச்சாத்திட்டு தொடங்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து (ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து, டென்மார்க் 1973ல்) (கிரீஸ் 1981ல்) (ஸ்பெயின், போர்த்துக்கல் 1986ல்) (ஒஸ்ரியா, பின்லாந்து, சுவீடன் 1995ல்) ஆகிய நாடுகளும் இணைந்து 1995ம் ஆண்டு புதிய பரிணாமமாக ஐரோப்பியக் குடியுரிமை அதிகூடிய சுதந்திரம், பாதுகாப்பு, புதிய சட்டநீதி பொருளாதார, சமூக மேம்பாடு என்ற கொள்கைகளுடன் உருவெடுத்த EU உலகம் முழுவதும் தன் நலன்களை பங்கிட வழிவகை செய்துள்ளது தன்பால் நாடுகளுக்குமாக பொது நாணயமாக Euro தற்போது உலக அரங்கில் அதி கூடிய வலுப்பெற்ற நாணயமாக விளங்கி வருவதும் ஏனைய வல்லரசுகளை கதிகலங்கவே வைத்துள்ளது.

குறிப்பாக சர்வதேச நாணயம் எனக் கருதப்படும் அமெரிக்க டொலரின் இடத்தை Euro பிடித்து விடுமோ என்ற ஐயப்பாடு இன்றைய மகா வல்லரசான அமெரிக்காவுக்கு எழுந்துள்ள தடுக்க முடியாத பிரச்சினையாகவுள்ளது.

மேலும் Euவுடன் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சேராதிருக்க பல புதிய வர்த்தக ஒப்பந்தங்கள், திட்டங்களையும் தீட்டிய அமெரிக்காவுக்கு தோல்வியே கிடைத்துள்ளது.

பிரித்தானியா EUவில் இணைந்திருந்தாலும் Euro நாணயத்தை பொதுவாக இன்றும் தயங்கி வருகிறது. தற்போதைய காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் பொருளாதார நகர்வுகளில் பிரித்தானியாவே முன்னணியில் திகழ்கிறது.

அத்துடன் ஆங்கில நாணயமான ஸ்ரேலிங் பவுணையும் அதில் அச்சிடப்பட்டிருக்கும் மகாராணியார் எலிசபத்தின் படத்தையும் நாணயத்தில் இருந்து இழக்க பிரித்தானிய மக்களுக்கு விருப்பமில்லை. மற்றும் அமெரிக்க வல்லரசின் அதி நேசநாடாக விளங்கும் பிரித்தானியாவுக்கு அந்நாட்டு உறவுகளில் பாதிப்புக்கள் வரலாம் என்கின்ற அச்சப்பாடும் உள்ளது. இம்மாத நடுப்பகுதியில் பிரித்தானியாவில் நடந்த தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டாம் என்கின்ற அரசியல் கட்சிகள் அமோக வெற்றி பெற்றிருந்தமையும் எதிர்காலத்தில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கான வழிகளே தென்படுகின்றன. நீண்டகாலப் போக்கில் பார்க்கும் போது பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுமானால் பல பாதகமான விளைவுகளையும் எதிர்நோக்கவேண்டியே வரும்.

மற்றும் மத்திய ஐரோப்பாவில் உயர் நிலையில் இருக்கும் சுவிட்சர்லாந்து நோர்வே நாடுகள் Euல் இணைவதற்கு மறுத்தே வருகின்றன. இதற்கு முக்கிய காரணமாக அந்நாடுகளின் பொருளாதார வலிமையும், மக்களின் பாரம்பரிய அபிலாசைகளுமே 2004ம் ஆண்டின் கணிப்பின் படி நோர்வே உலகில் ஆள்வீத வருமானத்தில் இரண்டாம்மிடத்தில் உள்ளது. இந்நாட்டில் ஒரு நபரின் வாழ்க்கைத்தரம் 37020ம் அமெரிக்க டொலர்கள் ஆகும் கடந்த காலங்களில் வாழ்க்கைத் தரத்தில் முதலாமிடத்தில் இருந்த சுவிட்சர்லாந்து தற்போது 5ம் இடத்தில் உள்ளது. (34,920 அமெரிக்க டொலர்கள் ஆகும்) 2003 கணிப்பின் படி இலங்கையின் வாழ்க்கைத்தரம் நபருக்கு 3,700 அமெரிக்க டொலர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள வறியநாடான கொங்கோ எதியோப்பியா போன்ற நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் 100 அமெரிக்க டொலர்கள் மட்டுமே இந்நிலையில் பல கிழக்கு ஐரோப்பிய தென்ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான விண்ணப்பங்களை தொடர்ந்தும் சமர்ப்பித்து வந்தபோதும் இந்நாடுகள் Euல் இணைவதற்கான தகமையைப் பெற்றிருக்காமையினால் கடந்த 10 வருடங்களாக இந்நாடுகளை தங்களுடன் இணைப்பதில் ஆரம்ப

Eu நாடுகள் தயக்கம் காட்டியே வந்துள்ளன. Euல் இணையும் நாடுகள் தராதரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பொருளாதார நிலையில் மேம்பட்டும் சமூக, அரசியல் நிலைகளில் சுமுகமான தரத்தையும் மற்றும் மனித உரிமைகளை மீறாமலும் இருக்க வேண்டும்.

இதற்கிணங்க பல வழி முறைகளை மாற்றி மேலும் 10 நாடுகள் Euல் இவ்வருடம் ஏப்ரல் மாதம் இணைந்து Euவை மேலும் விஸ்தீரணம் அடைய வைத்துள்ளன. புதிய நாடுகளாக Cyprus, Czech, Rephblic Estonis, Hungary, Latvia, Lithuania, Molta, Poland, Slovakia, Slovenia ஆகி இணைந்துள்ளன.

தற்போது 25 நாடுகளைக் கொண்ட Eu, Euro நாணயத்தை மேலும் வலுப்பெறவைத்துள்ளது. இறுதியாகச் சேர்ந்த 10 நாடுகளின் பொருளாதார வலுவானது முன்பு இணைந்த நாடுகளை விட குறைவாக இருந்தாலும் அனைத்து அங்கத்துவ நாடுகளையும் ஒருங்கிணைத்து தன் முழுமையான குறிக்கோளை அடைவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நாட்கள் எடுக்கும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றே. பொருளாதார நலன்களைப் பெற்று சுகவாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்காக Eu நாடுகளில் இணைந்து கொண்ட புதிய கிழக்கு ஐரோப்பிய நாட்டு மக்கள் Eu நாடுகளாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கள் வாழ்க்கையை நகர்த்த விரும்புவதாகவும் இங்கிலாந்து நாளேடுகள் தகவல் வெளியிட்ட வண்ணம் உள்ளன. Euன் சாசனப்படி மக்கள் எந்த அங்கத்துவ நாடுகளிலும் தங்கள் எதிர்காலத்தை நகர்ந்த முடியும் என்ற சட்டம் முன்னணியில் இருக்கும் நாடுகளுக்கு பாதகமாகவே இருக்கும் Euல் இருந்து பிரித்தானிய மக்கள் விலகிச் செல்ல விரும்புவதற்கு இப்படியான காரணிகளும் உள்ளது. பிரித்தானியா உலகில் பிரபல்யமான ஒரு நாடு Euல் இணைவதினால் நீண்டகால நோக்கில் தனிப்பட்ட செல்வாக்கை இழக்கவும் வாய்ப்புகள் அதிகம் என்பதும் பிரித்தானிய மக்களின் எண்ணங்களாகும். எதிர்காலத்தில் வல்லரசுகள் அவர்களின் ஆயுதபலம் என்ற செல்வாக்குகள் குறைந்து பொருளாதார பலமும் அதன் யுத்திகளும் என்ற தலைப்பில் உலகு தலை எடுக்கும் என்பதில் ஐயமில்லை என்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய சைகை காட்டி நிற்கும்.

| | | |
|---|---|---|
| உயர்ந்த தவம் | - | பொறுமை |
| உயர்ந்த இன்பம் | - | திருப்தி |
| உயர்ந்த அறம் | - | கருணை |
| உயர்ந்த ஆற்றல் | - | மன்னிப்பு |


சுடரொளிக்கு மனதார வாழ்த்துகின்றோம்.
Wella Hair Dressing
கலறிங், கிறேல், சிகை நேராக்குதல்,
பேமிங், பேசியல்,
இமை ஒழுங்கமைத்தல்.
Sales For Saloon Items
வெலா சலூன்
இல.8, நல்லூர் சந்தை,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.


சுடரொளி தொடர்ந்தும் வலம் வர வாழ்த்தும்
ஒளி அழகன்
போட்டோ அன் வீடியோ
Digital Vidio & Photo, Video Edit, VHS-CD,DVD,
Audio ,Mp3 Recording, Lamination Album,
Paste Album, Glass Framing, Stand Framing
Makeup, Set, Dressing, Icing.
OLI ALAKEN
Studio & Video
No.76 Adiyapatham Road,
Thirunelvely.
077-9587256.

சுடரொளியின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

# K.T.M யில்

## எள்ளு தேங்காய் எண்ணெய் போன்றன பிளிந்து கொடுக்கப்படும்.

## பருத்தித்துறை வீதி,
## கல்வியங்காடு.

*சுடரொளியே உன் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.*

Sri Lanka Insurance

**ஆயுட் காப்புறுதியா? பொதுக் காப்புறுதியா?**

உங்கள் காப்புறுதித் தேவைகளுக்கு நாட வேண்டிய ஒரே காப்புறுதி நிறுவனம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

1962ம் ஆண்டில் இருந்து இன்றுவரை இடைவிடாது யாழ்மண்ணிலும் தமது சேவையை தொடர்ந்து வழங்கிவரும் ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் இலங்கை காப்பறுதி நிறுவனம் கூட்டுத்தாபனம். ஆயுட்காப்புறுதியில் குறைந்த கூட்டுத்தாபனத்தில் நிறைந்த இலாபங்களை. வழங்கும் ஒரே நிறுவனம்

இளைஞர் / யுவதிகளே க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியா? உடனடியாக காப்புறுதித்துறையில் இணைவதன் மூலம் வேலை வாய்ப்பினையும் மேலும் பல சலுகை களையும் பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு : திரு.பெ.ஜெனியூட்
அமைப்பாளர்.
கேணியடி
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
தொ.பே.இல: 0777-563781

# மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு உதவுவது விளையாட்டு துறையாகும் அதில் கோ ... கோ ...



பாடசாலைகளில் இணைப் பாடவிதானங்களில் முக்கியம் வாய்ந்த ஒன்றாக இவ் உடற் கல்வித்துறை காணப் படுகின்றது. அதாவது மாணவர்களின் மன ஆதங்கங்களை வெளிக்காட்டுவதாகவும் சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை விருப்பப்படும் ஒரு துறையாக விளையாட்டுத்துறை காணப்படு கின்றது.

அவ்வகையில் விளையாட்டில் பல்வேறு சிறு விளையாட்டுக்கள், பெரு விளையாட்டுக்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள் என பல வகைப்பட்டதாக காணப்படுகின்றது. இவைகள் சிறுவயதில் இருந்து நமது பிரதேசங்களில் விளையாடப்பட்ட சிறுவிளையாட்டுக்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. பின்னர் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களாக வந்தவுடன் அவர்கள் பாடசாலையில் பல விளையாட்டுக்களை கற்பதுடன் சட்டதிட்டங்களுடன் இணைந்த பல பெருவிளையாட்டுக்களையும் கற்கின்றன. இவ்வாறாக மாணவர்கள் மத்தியிலும் ஏனையோர்கள் மத்தியிலும் மிகவும் விரும்பி விளையாடப்படும் பாரம்பரிய விளையாட்டுகள் பலவுண்டு. அதாவது கிளித்தட்டு, சடுகுடு, கோ... கோ... என்பனவாகும். அத்தவகையில் கோ...கோ... பற்றி நோக்குவோமெனில் தற்போதைய நவீன கற்றல் கற்பித்தல் முறைகளில் ஒன்றாக மகிழ்ச்சிகரமான கற்றல் முறை திகழ்கின்றது. மாணவர்களை உற்சாகம் ஊட்டி கற்றல் செயற்பாடுகளில் மகிழ்வுடன் ஈடுபட தூண்டக்கூடிய விளையாட்டாக இந்த கோ.. கோ.. விளக்குகின்றது . மிக குறுகிய ஆயத்தத்துடன் இடவசதிக்கேற்ப அளவுத் திட்டங்களில் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தி ஆடவல்ல ஓர் சிறு விளையாட்டா கவும் இது காணப்படுகிறது.

இவ்விளையாட்டு 1914 களில் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறப்பு எடுத்து பின்னர் இந்தியா முழுவதிற்கும் பரவி அப்படியே தெற்காசிய நாடுகளான இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. அத்துடன் இலங்கையின் பல பகுதிகளிலும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது.

கோ..கோ ஆடுகளத்தின் குறியீடுகளின் அளவுகள்

ஆடுகளத்தின் எல்லைகள் நீளம் - 34 m, அகலம் 16m

நடுச்சந்து – நீளம் 24.40 m, அகலம் 30 cm

குறுக்கச்சந்து – நீளம் 16m , அகலம் 30 cm

| | |
|---|---|
| சதுரம் | - 30 cm X 30 cm |
| நீள் சதுரம் | - 16m X 4.80 m |
| கம்பத்தின் உயரம் | - 1.20m |

இம் மைதானத்தின் ஒவ்வொரு பகுதிகளின் பயன்கள்.

**தாழ்வாரம்** *(Lobby)*

நடுவர் இதில் சென்று ஆட்டத்தை கண் காணிப்பர். ஆட்டத்தினுள் நுழைய வேண்டிய ஓட்டக் காரர்கள் தாழ்வாரத்தின் நீளப்பகுதி வழியாக நுழைய வேண்டும்.

**நடுப்பகுதி** - இருகம்பங்களுக்கும் இடையேயுள்ள ஆடுகளத்தை நீளமாக இரு சம பாகங்களாக பிரிக்கிறது.

துரத்துபவன் இவ் நடுப்பகுதியை தொடுதலோ கடத்தலோ கூடாது.

**எல்லைக் கோடுகள்** - ஓடுபவரின் இரு கால்களும் எல்லைக்கோட்டிற்கு வெளியே செல்லக்கூடாது.

வெளியில் சென்றால் foot out என தீர்மானித்து அவுட் ஆவார்.

## குறுக்குக் கோடு (*Cross Lane*)

- சதுரத்திலிருந்து துரத்தக் கிளம்புபவன் குறுக்குக் கோட்டை கடந்து விட்டால் கடந்த பக்கமுள்ள திசையிலேயே செல்ல வேண்டும்.
- துரத்தில் இருந்து துரத்தக் கிளம்புபவன் குறுக்குக் கோட்டின் சந்தியிலேயே இருந்து எக்கம்பப் பக்கம் திரும்புகின்றானோ அத் திசைக்கே ஓட வேண்டும்.

## சதுரம்

- துரத்தும் குழுவில் உட்காரவேண்டிய ஆட்டக் காரர்கள் இதனுள் தான் உட்கார வேண்டும்.
- அடுத்தடுத்த சதுரத்திலுள்ளோர் ஒரே திசையை நோக்கி உட்காரக் கூடாது. அடுத்தடுத்து மாறி மாறி உட்கார வேண்டும்.

## நீண்ட சதுரம்

- துரத்துபவன் திசைக்கணக்கு இல்லாமல் இந்த நீண்ட சதுரத்தினுள் ஓடுபவனை துரத்தலாம்.
- ஒரு கம்பம் இருக்கும் திசை நோக்கித் துரத்து பவன் எதிர்கம்பத்தை நோக்கி ஓட விரும்பின் நீண்ட சதுரத்தை தொட்டு திரும்பியோடலாம்.

## கம்பக்கோடும் கம்பமும்

- ஒரு திசையில் ஓடித் துரத்துபவன் அத்திசை யிலுள்ள கம்பத்தை தொட்டுத் திரும்பலாம்
- துரத்துபவன் நடுக்கோட்டிற்கு மறுபக்கம் செல்ல விரும்பினால் அவன் கம்பத்தைச் சுற்றிச் செல்ல வேண்டும்.
- விரைவாக ஓடுபவர்களுக்கும், துரத்திச் செல்பவர் களுக்கும் நடுச்சந்தின் (கோட்டின்) ஒரு பக்கத்தி லிருந்து மறுபக்கத்திற்குச் சுற்றிச் செல்ல கம்பம் ஒரு தாங்கு கோலாகப் பயன்படுகின்றது.
- பார்வையாளர்கள் இதனுள் நுழையக்கூடாது.

ஆட்டக்காரர்கள் – 9 போ், மாற்றாட்டம் காயப்பட்டால் அனுமதிக்கப்படும்

ஆட்டங்கள் - ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒவ்வொரு குழுவும் ஒருதடவை ஓடவும் ஒரு தடவை துரத்தவும் முடியும். இவ்வாறு இரண்டு ஆட்டங்கள் நடைபெறும். ஆட்ட நேரம் 7 (2) 7(5) 7(2) 7 நிமிடங்கள்

## நடுவர்கள்

- நடுவர் - ஒருவர்
- துணை நடுவர் - இருவர்
- நேரக்கணிப்பாளர் - ஒருவர்
- புள்ளி கணக்காளர் - ஒருவர்

## ஆட்டம் ஆடும் முறை


காசை சுண்டியதில் ஜெயித்த குழு ஓடுதற்கோ அல்லது துரத்துவதற்கோ தனது விருப்பத்தைத் தெரிவிக்கும். துரத்தும் குழுவில் எட்டு பேர் ஆடுகளத்தி னுள்ள எட்டு சதுரங்களிலும் திசைமாறி மாறி உட்கார்ந்து கொள்வர். ஒன்பதாவது நபர் ஒரு கம்பத்தின் பக்கமாக நின்று கொண்டிருப்பர். ஓடுபவர்கள் தாங்கள் ஓடும் வரிசை முறையை புள்ளிக்கணக்காளரிடம் தெரிவிப்பார் பின்பு முதல் 3 ஓட்டக்காரர்கள் ஆடுகளத்தினுள் வருவர். நடுவர் குழல் ஊதிச் சைகை செய்தவுடன் ஆட்டம் நடைபெறும். முதலில் நுழைந்த 3 பேரும் அவுட் ஆனவுடன் அடுத்த மூவர் உள்ளே புக வேண்டும். முதல் மூவரின் மூன்றாவது ஆளை அவுட் செய்த வருக்கு உள்ளே புகும் அடுத்த மூவர்களை உடனே தொட உரிமை கிடையாது. அவர் உடனே "கோ" கொடுக்க வேண்டும். இம் மாதிரியாக ஆட்டம் 7 நிமிடங்கள் வரை நடக்கும். 7 நிமிடங்களுக்குள் எத்தனை பேர் அவுட் ஆனார்களோ அத்தனை புள்ளிகள் துரத்தும் குழுவிற்கு தரப்படும். மேற்கூறிய வாறு நான்கு முறை (இரு ஆட்டங்கள்) மாறி மாறி ஆடியதில் எக் குழு மிகுதியான புள்ளிகளைப் பெறுகின்றதோ அதுவே வெற்றிக் குழுவாகத் தீர்மானிக்கப்படும்.

## தவறுகள்

1. ஆடுகள எல்லையை விட்டு வெளியே சென்றால்
2. துரத்துபவரால் முறையாகக் கையினால் தொடப் பட்டாவிடின்

3. கோ கொடுப்பதை உரத்த குரலில் உட்கார்ந் திருக்கும் ஆட்டக்காரருக்குப் பின்புறமாக அவரைத் தொட்டு கொடுக்காது விடல்
4. கோ பெறாமல் இருப்பவர் எழும்புதல்
5. கோ கொடுத்தவர் உடனே அவ்விடம் உட்காராமல் விடுதல்
6. துரத்துபவர் ஆடுகளத்திற்கு வெளியே ஓட நேரிட்டாலும் அது தவறு அல்ல. ஆனால் அங்கு அவர் திசைமாறின் தவறு.

## கோ... கோ... விளையாட்டு மைதானத்தின் அமைப்பு





திருமதி. ஜா. தர்மஜீலன்
உடற்கல்வி ஆசிரியர்

# சங்கமருவிய காலம் அறநெறிக்காலம்

✍... பு.ரசிதா
*A/L 2008*

தென்னிந்திய தமிழிலக்கிய வரலாற்றிலே சங்ககாலத்தை அடுத்து தமிழ்நாட்டை களப்பிரர் எனும் அந்நியர் ஆட்சி செய்த கி.மு 4.-6 வரையிலான காலப்பகுதி சங்கமருவிய காலம் எனப்படும். சங்ககாலத்தில் நிகழ்ந்த அதீத காதல் தந்த ஏமாற்றங்களும், நித்தமும் நிகழ்ந்த போரினால் ஏற்பட்ட இழப்புக்களும் மக்களை வாழ்வில் விரக்தி கொள்ளச் செய்தது. மனோநிலை விரக்தியுற்ற மக்களுக்கு விழுமியக் கருத்துக்கள் விருப்பமாயின. இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சமண, பௌத்தத் துறவிகள் சங்கங்களும் பள்ளிகளும் அமைத்து அவற்றினூடாக அறவழிப் போதனைகளை மேற்கொண்டனர். இப்போதனைகள் நோயுற்ற சமுதாயத்திற்கு மருந்து போலாகின.

இதனால் இக் காலத்தில் வாழ்ந்த சமண, பௌத்த துறவிகள் மக்களைத் தம் வசப்படுத்த அற நூல்களை ஆக்கியளித்தனர். திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திருகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, முதுமொழிக்காஞ்சி, பழமொழி நானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் பதின்மூன்று நூல்கள் அறக்குருத்தை செப்பியுள்ளன. இவ்வாறாக அறவழிப் போதனையின் பொருட்டு பெருவாரியான அறநூல்கள் எழுச்சி பெற்றமையால் சங்கமருவிய காலம் ஓர் அறநெறிக் காலம் எனப்படுகிறது.

இந்நூல்கள் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவையாகும். சீர்கெட்ட மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தவும், சமண, பௌத்த பிரசாரப் போக்கிற்காகவும் அறக்கருத்துக்கள் இலக்கியங்களில் பெரிதும் ஆளப்பட்டன.

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என ஔவையார் போற்றப்பட்ட திருக்குறளும், நாலடியாரும் அறக்கருத்துக்களை முப்பாலாக வகுத்துரைத்துள்ளன.

திருக்குறளில் அறத்துப்பாலில் புத்தர் போன்ற ஞானியின் போதனைகளைக் காணலாம். மனத்துக்கண் மாசு இலனாதல் அறம் எனக் கூறும் திருக்குறள் தனது கருத்துக்களை கடுமையாகக் கூறாது உலக நடைமுறையுடன் பொருந்தக் கூறியமை சிறப்பாகும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" எனும் ஈரடி வெண்பாவில் பொருள் பொதித்த போதனைகளைக் கூறியமை வள்ளுவனின் திறனேயாகும்.

நாலடியார் யாக்கை, செல்வம், இளமை என்பவற்றின் நிலையாமை பற்றி வலியுறுத்துகிறது. நாம் செய்யும் அறமே எமக்கு இறுதியில் துணையாகும் எனவே விரைந்து தர்மம் செய்ய வேண்டும் என்பதை மேல்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென்றெண்ணி – ஒருவமின்
தீயவை ஒல்லும் வகையால் மருவுமின்
மாண்டார் அறம்"

நான்மணிக்கடிகை எனும் நூல் நான்கு மணிகளாலான தோள்வளை அணிபோல் நான்கு உயர்ந்த உண்மைகளை பாடல் தோறும் உணர்த்துகிறது. 'நிலத்துக்கு அழகு தருவது நெல்லும், கரும்பும், குளத்துக்கு அணியளிப்பது தாமரை, பெண்மைக்கு பெற்றியளிப்பது நாணம். தனக்கு சிறப்பைத் தருவது அறம்' என்ற செய்தியினை மேற்படி பாடல் உணர்த்துகிறது.

'நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை – பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம் – தனக்கணி
தான் செல் உலகத்து அறம்'

திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்ச மூலம் என்னும் மருந்துப்பெயர்கள் கொண்டமையும் இலக்கியங்கள் உடலுக்கு உரந்தரும் மருந்தினைப் போன்று உள்ளத்துக்கு உரந்தரும் அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

திரிகடுகத்தில் வரும் மேற்படி பாடல் மக்களின் மன இருளைப் போக்கி, இம்மை, மறுமை இன்ப நலன்களை அளிக்கவல்ல முப்பெரும் உறுதிப் பொருட்களைக் கூறுகிறது.

'ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேதங்குச் செய்க பெருநூலை யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை இம்மூன்றும்
இருள் உலகம் சேராதவாறு'

இன்னா நாற்பது வாழக்கைக்கு இன்னாத வற்றை எடுத்தியம்புகிறது.

'ஆற்றலில்லாதான் பிடித்த படை இன்னா
நாற்றமிலாத மலரின் அழகு இன்னா
தோற்றமிலாதான் துணிவின்னா
மாற்ற மறியார் உரை'

மேலும் இனியவை நாற்பது வாழ்க்கைக்கு வேண்டியவற்றை கூறுகிறது.

'மானமழிந்த பின் வாழாமை முன் இனிதே
தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே
ஊன மொன்றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடர்க் கெல்லாம் இனிது'

ஆசாரக்கோவையானது தூய்மை ஒழுக்கம், ஆசாரம் முதலிய தமிழர் ஆசார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒவ்வொருவரும் வாழ வேண்டிய நாளாந்த நடைமுறைகளை உரைத்துள்ளது உணவு உண்ணும் முறை பற்றி இடம்பெறும் பாடல் ஆசாரத்தை நவின்றுள்ளது.

'நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ் செய்து
உண்டாரே உண்டார் எனப்படுவார் – அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வர் – அடுவெடுத்துக்
கொண்டார் அரக்கர் குறித்து'

மேலும் பழமொழி நானூறு முதுமொழிக் காஞ்சி என்பன பழமொழியாகவும், முதுமொழி யாகவும் அறக்கருத்துக்களை உரைத்துள்ளன.

'பழம் பகை தமக்கு நட்பாதல் இல
நசையிற் பெரியதோர் நல் கிரவில்லை'

இவை தவிர இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிரமும், மணிமேகலையும் அறக்கருத்தை நீண்ட தொடர் நிலைச் செய்யுட்களாலாய கதைகளில் அமைத்து காப்பியவடிவில் எழுந்துள்ளன. இவற்றில், 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர்! ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்' எனச் சிலப்பதிகாரமும்,

'அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாதிது கேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உறையுளும் அல்லது கண்டதில்லை'
எனவும்

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது – பின்னது
அற்றோர் உறுவது அறிக' என மணிமேகலையும் அறக் கருத்துக்களை சிறப்பித்துக் கூறியுள்ளன.

இவ்வாறாக சங்கமருவியகாலத்தில் பெருந் தொகையான நூல்கள் அறக்கருத்துக்களைப் பாடுபொருளாகவும், ஊடு பொருளாகவும் கொண்டு எழுந்தமையால் சங்கமருவியகாலம் ஓர் அறநெறிக் காலம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

# விடியலின் தேடல்கள்

✍... தே. கார்த்திகா
*A/L 2009*

அசைந்து திரியா ஜடங்களிடம்
அலைந்து தேடுகிறேன் கண்ணீரை
ஆறுதலற்ற மனங்களில் என்றும்
அரிதாய் தேடுகிறேன் அமைதியை

ஒற்றுமையாய் இருக்கும் காகத்திடம்
ஒருநொடி தேடுகிறேன் வேற்றுமையை
கலைந்து போகும் மேகமதில்
கலந்து தேடுகிறேன் ஒற்றுமையை

ஒருநாள் வாழும் பூவிடத்தில்
ஒளிந்து தேடுகிறேன் வாழ்க்கையை
வறுமையில் வாடும் மக்களிடம்
வலிந்து தேடுகிறேன் வசந்தத்தை


தோல்வியைக் கண்ட உள்ளமதில்
தொலைந்து தேடுகிறேன் இன்பத்தை
விடியலைத் தேடிடும் விழிகளிடம்
விரைந்து தேடுகிறேன் இலட்சியத்தை

நவநாகரிகம் உள்ள மங்கையரிடம்
நலிந்து தேடுகிறேன் பாரம்பரியத்தை
பருவத்தை இழக்கும் இளைஞரிடம்
பரந்து தேடுகிறேன் சீரான பண்பினை

ஆட்சியை நடத்தும அரசிடம்
அமைதியாய் தேடுகிறேன் ஜனநாயகத்தை
நியாயத்துக்கு எதிராய் செயல்படுபவரிடம்
நிதானமாய் தேடுகிறேன் நீதியை

சீரழிந்து நிலைகுலையும் மாந்தரிடம்
சிந்தித்து தேடுகிறேன் மௌனத்தை
இரக்கமற்ற இரும்பு மனிதரிடம்
இறங்கியே தேடுகிறேன் மனிதத்தை

விளக்கினைத் தேடும் விட்டிலாய்
விரிவாய் தேடியும் கிடைக்கவில்லை
இவற்றின் பதிலைக் காணும்வரை
இறவாது எந்தன் விடியலின் தேடல்கள்




செங்குந்த இந்துக் கல்லூரி ஆசிரிய நல்லுறவு மன்றம்




செங்குந்த இந்துக் கல்லூரி சாரணர் குழு

# இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகள்



மனிதனை மனிதனாக வாழ வழி காட்டுவது இந்து சமய தத்துவங்களும் கோட்பாடுகளும் அதன் விதிகளுமேயாகும்.

♦ உண்ணும் விதி

கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும்
சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்
இதற் கொன்றும் தின்னற்க நன்று.

உண்ணும் பொழுது தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் இருந்து உண்ணுதல் வேண்டும். இருந்து அருந்தவும் ஆசனம் போசனம் Seat Eat எனவும் எல்லோராலும் கைக்கொள்ளப்படும் உண்மையே. நோயாளிகள் படுத்திருந்தும் கட்டில் மேலிருந்தும் உண்ணுவர் உறங்குமிடத்தில் இருந்து உண்ணக் கூடாது. ஏனெனில் "உறங்குவது போலும் சாக்காடு" என்ற விதிக்கிணங்க "கட்டில் சுடுகாட்டிற்கு நிகரென்பார் பெரியோர்" நோயாரும் பேயாரும் சேயாருக்கும் இவ்விதி கையாளத் தேவையில்லை. வடக்கு நோக்கி வளையொக்க உண்ணார் எனவும் ஒரு பழமொழி உண்டு. வளைக்கு கீழாகவும் வாசற் படியிலும் இருந்து உண்ணக் கூடாதாம். உண்மைக் கருத்தென்னவெனில் ஊர்வனவால் சில சிரமங்கள் ஏற்படும். வடக்கு நோக்கி உண்ணும் பொழுது கருவிருத்தம் குறைவதே இதற்கு காரணம். இருதய நோயாளிகள் மரணிப்பது பெரும்பாலும் உண்ணும் பொழுதும் இரு புலன் இயற்றும் பொழுதும் மாடிப்படி ஏறும் பொழுதுமே. இதற்கு காரணம் நிலக்காந்த சக்தியாகும்.

உண்ணும் பொழுது இரையாது, உரையாது, சிரியாது, சினக்காது, சிந்தாது உண்ணல் வேண்டும். "பாலோடாயினும் காலமறிந்து உண்" என்ற விதிக்கிணங்க சூரியன் உதித்து ஐந்து நாளிகைக் குக்குள்ளும் உச்சிக்கு வந்து ஐந்து நாளிகைக் குள்ளும் அஸ்தமித்து ஐந்து நாளிகைக்குள்ளும் காலை, மதியம், இராப்போசனம் உண்ணக்கடவர்.

"கூழேயாயினும் குளித்துக் குடி" என்ற கூற்றுக் கிணங்க நீராடியும் வாயலம்பி கால் கழுவியும் உண்ணும் இடத்தை சுத்தம் செய்தும் உண்பரே உண்டவர்க்கு சமமானவர். அப்படி செய்யாது உண்டவர்களின் உணவை பிதிர்கள் உண்ணுமாம். கால் கழுவி நீர் காயமுன்னர் உண்ணல் வேண்டும் கால் கழுவி நீர் காய்ந்த பின்னர் உறங்க வேண்டும். "மீதூண் விரும்பேல்" ஔவை மொழிகேற்ப அளவிற்கு தகுந்த உணவும் நீராகாரம் எடுத்தல் வேண்டும். உண்ணும் பொழுது மென்று மென்று உண்ணல் வேண்டும். இடையில் நீர் எடுக்காது உண்ணல் வேண்டும்.

"இடையில் குடியேல், கடையில் மறவேலன" வைத்திய நூல் சான்று பகருகின்றன.

"மென்று மென்று உண்டவனும்
வின்று நின்று நூறடி உலாவினவனும்
சென்று சென்று நூற்றாண்டு வாழ்வன்" என விதியாகும்.

"உணவு குறைந்தால் உயிர் போகும்
உணவு கூடினால் உணர்வு மிகும்"

போதும் என்ற சொல்லை எதிர்பார்ப்பது உண்ணும் உணவில் ஒன்றிலே தான். எனவே வேண்டா வெறுப்புடனும், சினத்துடனும் உண்ணக்கூடாது. வேண்டாமென்ற பதத்திற்கு பதிலாக போதும், திருப்தியென சொல்ல வேண்டும்.

♦ உறங்கும் விதி

வடதிசை நீக்கி எங்கும் தலை வைத்து சயனிக்கலாம். "வடக்கொடு கோணம் தலை நீட்டார்" வடக்கே தலை வைக்காதே வாசலுக்கு கால் நீட்டாதே என்ற பழமொழிக்கிணங்கவும் வடக்கை நீக்க வேண்டும். தன்மனை கிழக்கதாகும்

தரணியெங்கனுத் தெற்கே
பிறர்மனன மேற்காம்
பெரியார் கொள்ளார் உத்தரம்

உத்தரம் (வடக்கு):- வடக்கே தலை வைத்துறங்கினால் வாழ்நாள் குன்றும் என்னும் பிறிதொரு வாக்கியம் உண்டு. வடக்கே தலை வைத்து உறங்கினால் நிலக் காந்த சக்தி இரும்புச் சத்தை ஈர்த்துவிடும். இதனால் ஆயுள் குன்றி விடும்

பின்னிரவு ஐந்து நாளிகைக்கு உரிய காலம் பிராமிய முகூர்த்தமாகும். இதனை வைகறை, புலரி என தமிழில் வழங்குவர். இக்காலத்தில் உறங்காது எழும்பி உலாவினாலும், படித்தாலும் நான்றாம். புலரி என்பது புலமைக்குரிய காலமாகும். ஆங்கிலத்தில் இதனைவுறடைபைாவ என்பர். இராவொளியும், பகலொளியும் சந்திக்கும் இருவொளிக்குரியதாகும்.

இக்காலத்தில் எழுந்து படித்தால் அழுக்கற்ற உடுப்பில் சாயம் படிவது போன்று அறிவு பெருகும். "வைகறைத் துயிலெழுவன" ஆத்திசூடி சான்று பகரும்.

### ♦ வீடு கழுவுதல்

"பொல்லாதவன் வீட்டில் புதன் கழுவுகவென்றும் வெள்ளாளன் வீட்டில் வெள்ளி கழுவுகவென்றும் சண்டாளன் வீட்டில் சனி கழவக வென்றும்" முதியோர் மொழிகள் உள.

வெள்ளாளன் என்பது வெறுமையானவன். வெள்ளி, வெள்ளாட்டி, வெள்ளை, வெள்ளாடு முதலான சொற்களால் நன்கறியலாம். இந்துக்கள் வெள்ளி, புதன்கிழமைகளை இலட்சுமி நாராயணன் என போற்றி வருவது வழக்கம். இவ்வாரங்களில் இல்லம் கழுவினால் இலட்சுமி தரிக்கமாட்டார் என்பதாகும். வீடு கழுவுவதற்கு உத்தமமானது. ஞாயிறு, திங்கள், வியாழன் முதலான மூன்று நாட்கள் சிறப்பானது. மற்றும் மரண காலங்களிலும் இவ் விதி கையாளத் தேவையில்லை.

### ♦ உடுக்கும் விதி

கோடி உடுப்பு உடுப்பதற்கு வாரபலன் உண்டு. பொன்றுக்கு வாங்கி புதனுக்கு உடு என்பார்கள். வியாழக்கிழமை வாங்கி புதன்கிழமை உடுக்க என்பதே இக்கருத்தாகும்.

புதன் கோடி உடுக்கபுதுக்கோடி வருமென பிறிதொரு வாக்கியம் சான்று பகரும். சனிக்கோடி உடுக்க இனிக்கோடியில்லை என்பர். எனவே திருமணம், ருதுசாந்தி வைபவங்களை சனியில் தவிர்த்தல் வேண்டும். பெரியோரிடமும், ஆலயங் களுக்கும் போகும் பொழுது குறுகிய உடுப்புடன் போவது முறையாகும்.

| | |
|---|---|
| ஞாயிறு | - விரைவில் கெடும் |
| திங்கள் | - நனையும் |
| செவ்வாய் | - ஆயுத, அக்கினி பீடை |
| புதன் | - தள, வஸ்திர இலாபம் |
| வியாழன் | - மதி, நிதி விருத்தி |
| வெள்ளி | - போகம் |
| சனி | - அழுக்கடையும் |

வருட, அயன, தீபாவளி அரச பரிசு முதலியவற்றிற்கு வாரதோஷம் பார்க்க தேவையில்லை.

**மயிர் களைவின் வாரபலன்**

| | |
|---|---|
| ஞாயிறு | - பிணி |
| திங்கள் | - அழகு |
| செவ்வாய் | - ஆயுள்குன்றும் |
| புதன் | - அறிவு பெருகும் |
| வியாழன் | - அழகு மிகும் |
| வெள்ளி | - வாழ்வுமிகும் |
| சனி | - கேடு |
| ஞாயிறு | - அரசருக்கும், வேதியருக்கும் |

நன்றான காலப்பிரகாசிகை கூறுகின்றது.

**மங்கல காரியம்**

மங்கல காரியங்களுக்கு மஞ்சள் நிறத்தைக் கைக்கொள்கின்றோம். பித்தளை, செம்பு, உலோகப் பாவனைப் பொருள்கள், பட்டுவேட்டி, கூறை, நெல் முதலினயனவாகும்.

வீட்டுப்பொங்கலுக்கு செம்பானை, செப்புச் சருவம் உபயோகித்தல் சிறப்பாகும்.

முற்காலத்தில் மங்கலத்திற்கு அமங்கலத் திற்கும் பொருள்கள், அமைப்புக்கள் வலம், இடம் என்பன வற்றை ஏற்றவாறு அமைத்துள்ளார்கள். மங்கலத் திற்கு வலமும் அமங்கலத்திற்கு இடமும். வலம் என்ற பதம் கல்யாணம், திருவிழா இரண்டிற்கும் முறையே கல்யாண ஊர்வலம், சுவாமி வீதி வலம் என்று பொருள் செறிந்து காணப்படுகின்றது. ஓமத்திற்கு வலமும் ஈமத்திற்கும் இடமும் கையாளப்படுகிறது. வலம் வருவதையும், இடம் இன்னலையும் குறிக்கும்.

றோமன் எண்ணில் வலப்பக்கம் வந்தால் பெறுமானம் கூடும். இடப்பக்கத்தில் என்றால் குறையும். ஆங்கிலத்தில் இடத்தைக் குறிக்கும் சொல் left ஆகும்.

தொலைந்தது என பிறிதொரு பொருளாகும். Left is less and loss.

ஆக்கம் : திரு .தி. ரவீந்திரநாதன்
ஆசிரியர்
*Sp.Trained (English)*
*Dip.in.Accountancy*
*Dip.in. English*

# பொன் மொழிகள்

*வருவதும் போவதும் இரண்டு*
*இன்பம், துன்பம்*
*வந்தால் போகாதது இரண்டு*
*புகழ், பழி*
*போனால் வராதது இரண்டு*
*மானம், உயிர்*
*தானாக வருவது இரண்டு*
*இளமை, முப்பு*
*நம்முடன் வருவது இரண்டு*
*பாவம், புண்ணியம்*
*அடக்க முடியாதது இரண்டு*
*ஆசை, துக்கம்*
*தவிர்க்க முடியாதது இரண்டு*
*பசி, தாகம்*
*நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு*
*பந்தம், பாசம்*
*அழிவைத்தருவது இரண்டு*
*பொறாமை, கோபம்*
*எல்லோர்க்கும் பொதுவானது இரண்டு*
*பிறப்பு, இறப்பு*

# சேவையின் சின்னம் அன்னை தெரேசா

✍... ச.பிரியதர்சினி
தரம் 13, கலைப்பிரிவு

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வமாகவும் கருணையின் வடிவமாகவும் கர்த்தரின் அருட்கொடை என்றெல்லாம் போற்றப்படும் பெருமை மிக்கவராக அன்னை தெரேசா விளங்குகின்றார். இவர் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அல்போனியா என்ற இடத்தில் விவசாயக் குடும்பம் ஒன்றில் 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் பிறந்தார். இவர் அவ்வூர் அரசினர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். இவர் தனது இளமைக் காலத்திலிருந்தே குழந்தைகள், பெரியோர்கள், நோயாளிகள் என்ற வேறுபாடின்றி எல்லோருடனும் அன்பாகவும், மரியாதையாகவும் பழகிவந்தார்.

இவர் கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த உறுதியும் பற்றும் கொண்டவர். யேசுபெருமானைப் போன்று தாமும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென விரும்பினார். இதனால் மக்கள் சேவைக்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். 1925ம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து அல்லற்படும் மக்களுக்குத் தொண்டாற்றுவதற்காக "கிறிஸ்தவ மத பொது நலச் சேவை என்னும் அமைப்பில்" தன்னை இணைத்துக் கொள்ள விரும்பினார். ஆனால் அங்குள்ள தலைமைப் பாதிரியார் இவரது இள வயதை காரணம் காட்டி அனுமதி வழங்க மறுத்து விட்டார். அதன்பின் இவர் 1928ல் "லோரோட்டா கன்னிய மடத்தில்" சேர்ந்தார். சிறிது காலத்தின் பின்னர் மீண்டும் இந்தியா வந்து "டார்ஜிலின்கில்" ஆசிரியர் பயிற்சி பெற்றார். அதன் பின் கல்கத்தா வந்து அங்குள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினராக சேர்ந்து கொண்டார்.

கல்கத்தா வீதிகளில் அன்னை கண்ட காட்சிகள் அவரது உள்ளத்தை பெரிதும் பாதித்தது. பசிக்கொடுமையாலும், நோய்களாலும் மக்கள் வருந்துவதைக் கண்டு மனம் வருந்தினார். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உணவு அளிக்கவும் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வியளிக்கவும் அவரது கருணையுள்ளம் விரும்பியது. ஆனால் கன்னியர் மடத்து விதிகள் இவற்றை மேற்கொள்ள இடமளிக்கவில்லை. இது குறித்து ரோமாபுரியுள்ள தலைமைப் பீடத்திற்கு பலமுறை கடிதம் எழுதினார். இவரது விடா முயற்சி பலனளித்தது. 1948ம் ஆண்டு ரோமாபுரி தலைமை மதகுருவிடமிருந்து அனுமதிகிடைத்ததும் அன்னை மிக்க மகிழ்ச்சி யடைந்தார்.கன்னியர்மடத்து உடைகளைக் களைந்து விட்டு வங்காளப் பெண்கள் போல் உடையணிந்து கொண்டார். சாதாரண நீலக் கரையுடன் கூடிய வெள்ளைப் புடவையையும் வெள்ளை முழுக்கைச் சட்டையையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இடது தோளில் உலோகத்தால் ஆன சிலுவைச்சின்னம் தொங்க காலுக்குச் சாதாரண செருப்பும் அணிந்து கொண்டார்.

முதலில் சேரியில் தனக்கு ஓர் குடிசையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பின் அச்சேரியைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டார். இச்சேரி வாழ் மக்கள் அன்னையிடம் அன்புடனும், மரியாதையுடனும் பழகி அவரது பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். சேரிச் சிறுவர்களுக்கென பள்ளிக் கூடமொன்றை ஆரம்பித்துப் பாடங்கள் சொல்லிக் கொடுத்தார். அத்துடன் உணவும் உடையும் வழங்கினார்.

1950ம் ஆண்டு "அன்பின் தூதுவர்கள்" என்று பொருள்படும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இவ்வியக்கம் மக்கள் ஆதரவுடன் வளரத் தொடங்கியது. சாதி, மத பேதமின்றி இவ்வியக்கத்தில் பலர் உறுப்பினர்களாச் சேர்ந்தனர். பாடசாலைகள் அமைத்தல், மருத்துவ வசதி இல்லாத இடங்களில்

மருத்துவமனைகள் அமைத்தல் குழந்தைகக் காப்பங்கள், அநாதை இல்லங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை நோக்கமாகக் கொண்டு இவ் வியக்கம் செயற்பட்டது.

அநாதைக் குழந்தைகளை ஆதரித்து வளர்க்கும் பொருட்டு "நிர்மல் கெனடி இல்லம்" என்ற இல்லத்தை நிறுவினார். தொழுநோய்யாளர் களுக்காக தொழுநோயாளர் இல்லத்தை தொடங்கி னார். சாவின் விளிம்பில் தவிர்க்கும் அநாதைகளின் பொருட்டு தர்மசாலையை ஏற்படுத் தினார். இந்த இல்லங்களை நடாத்துவதற்காக அன்னை தாமே வீதியில் இறங்கி நிதி திரட்டினார். அவரது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் பலவுள்ளன.

40 ஆண்டுகளின் முன் ஒரு நாள் கல்கத்தாவின் அழுக்குத் தெருக்களின் முன் அன்னை நின்று கொண்டிருந்தார். அவர் தொடங்கிய நிறுவனத்திற்கு நன்கொடைக்காக கையேந்தி நின்று கொண்டிருந்தார். கல்கத்தாவில் பெண் துப்பரவுத் தொழிலாளிகளின் சீருடையில் நின்று கொண்டிருந்த அன்னையை அருவருப்போடு பார்க்கின்றான். ஒரு நகை வியாபாரி "ஐயா! அநாதைக் குழந்தை களுக்காக ஏதாவது கொடுத்து உதவுங்கள்" ஏந்திய கைகள் அவன் முன் நிற்கின்றன தம்முன் நீண்ட உள்ளங்கைகளில் காறி உமிழ்கின்றான் அவன். அன்னையின் முகங்களில் புன்னகை மாறவில்லை ஐயா! இப்பொழுது நீங்கள் கொடுத்ததை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் அநாதைக் குழந்தை களுக்கு ஏதாவது கொடுத்துதவுங்கள் என்றார் அன்னை அதிர்ச்சியில் அவன் தலைகுனிந்து கொள்கின்றான்.

இதற்கு நேர்மாறான மற்றொரு காட்சி அன்னையின் வாழ்வில் 1960ல் நிகழ்ந்தது. அப்போது அமெரிக்க நாட்டின் செனட்டர்களின் ஒருவரான ரோபேட்கனடி அன்னையைக் காண அவரது ஆச்சிரமத்துக்கு வந்தார். அந்த நேரத்தில் அன்னை தொழுநோயாளர் பிரிவில் துணி துவைத்துக் கொண்டிருந்தார். அவர் நேரே அந்த இடத்திற்கே செல்கின்றார். துணிதுவைத்துக் கொண்டிருந்த அன்னையிடம் கைகுலுக்கும் பொருட்டு கையை நீட்டுகின்றார். பதிலுக்கு கையை நீட்டாமல் என்கை அழுக்கடைந்துள்ளன ,என்கின்றார் அன்னை. "அன்னையே சேவையினால் அழுக்கடைந்துள்ள இந்தக் கரங்களை நான் தொட விரும்புகின்றேன் அதை என் பேறாகக் கருதுகின்றேன்". என்றார் கனடி. அன்னையின் புகழ் உலகெல்லாம் பரவியும் அவர் நிலை மாறவில்லை. வறுமையை விரும்பி வரித்த அன்யைாகவே விளங்கினார். தன் ஆடை கிழிந்தால் தானே தைத்து உடுத்தினார்.

மக்கள் சேவையையே மகேசன் சேவை எனக் கருதினார்.

அன்னையின் அரும்பணிகளை உலகம் போற்றிய வேளையில் அவரை நாடிப் பல பரிசுகள் வந்தன. பாப்பரசர் விலையுயர்ந்த மோட்டார்க் காரினை பரிசாக வழங்கினார். இம்பீரியல் இராசயன தொழில் நிறுவனம் பதின்மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சொத்தைக் கொடுத்துதவியது. 1977ல் அன்னைக்கு நோபல் பரிசு கிடைத்தது. 1979ல் 3 இலட்சம் டொலர் பெறுமதியான "பாலசான் சர்வதேச விருது "வழங்கப்பட்டது. மேலும் அன்னையின் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு "பாரதரத்னா" என்ற விருதையும் , இவரின் தபால் தலைகளையும் வெளியிட்டு கௌரவித்தது.

அனைத்து உயிர்களிடத்தும் அன்பையும், நம்பிக்கையையும் துளிர்க்கச் செய்த அன்னை தெரேசா தனது 87வது வயதில் 1997ம் அண்டு செப்ரெம்பர் 5ம் திகதி காலமானார். கருணை பொழியும் அத்திருவடிவம் மறைந்து விட்டது. ஆனால் அன்னாரின் திருநாமம் அனைத்துலகிலும் என்றும் நின்று நிலவும் என்பது திண்ணம்.

# சமயமே மாணவ சமுதாயத்தை வழிப்படுத்தும்



அன்பே சிவம்

இறைத்துவம் மிக்க வாழ்க்கையே இன்னல் அறுக்கும். இன்று உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஏதோ ஒரு வழியில் இன்னல்களுக்கு உட்பட்டுத்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை. இந்நிலை மாறி அன்பு நெறி கொண்ட மக்கள் உருவாக வேண்டுமானால் அந்நெறியை உருவாக்கக் கூடிய ஒரே ஒரு சாதனம் சமயமே ஆகும். அல்லல் அறுத்து ஆனந்தம் அளிப்பது சமயநெறியேயாகும்.

சமயநெறி என்பது ஒருவனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைப்பது. எவனொருவன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு சத்தியம், தர்மங்களுக்கு ஏற்ப நீதிநெறியின் வழிவந்து பல்லுயிரும் தன்னுயிர் போல் ஓம்பும் மனப்பாங்கு கொண்டு இறைவனை நெஞ்சில் இருத்தி இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற வாக்கிற்கிணங்க எவருக்கும் தன்னால் எதுவித பாதகங்களும் ஏற்படா வண்ணம் மற்றவர்களையும் நன்நெறிப்படுத்தி மேன்மையான வாழ்வு வாழ வழிப்படுத்துவதே சமய நெறியின் தலையாய கடனாகும்.

அன்றுதொட்டு இன்றுவரை எத்தனையோ மாமனிதர்கள் தோன்றி பல இலக்கியங்களையும், பல சமய நூல்களையும் யாத்து வையகம் வாழ்வு பெற வழங்கியுள்ளார்கள்.

"கற்றது கைமண் அளவு. கல்லாதது உலகளவு". எவருமே உலகத்தில் எல்லா வற்றையும் கற்றது கிடையாது. எம் கைவசம் கிடைக்கும் கற்கத் தகுந்த நூல்களைக் கற்று கற்றபடி ஒழுகுதலே சாலச்சிறந்தது.

கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க கற்கத் தகுந்த நூல்களைக் கற்று வாழ்வை வளம்படுத்த வேண்டும். இன்றைய மாணவ சமுதாயம் தான் எதிர்காலராய்ச்சியத்தின் தலைவர்கள். நிலத்தில் போட்ட உரத்தின் தன்மைக்கு ஏற்ப பயிர் செழித்து வளர்ந்து பயனைக் கொடுப்பது போன்று பாடசாலையிலே வளரும் பயிர்களாகிய சின்னஞ் சிறுவர்களுக்கு கல்வி என்னும் உரத்தைப் போடும் போதே அதற்குப் பக்கபலமான சமயநெறிகளை வாழ்வில் கடைப் பிடித்து ஒழுகக்கூடிய முறையில் நீருற்றவேண்டும். அந்தச் சமய நீருற்றுத் தான் மாணவ சமுதாயத்தை மலர்ந்து மணம் வீசும் வாசனை மலர்கள் போல எதிர்கால வாழ்வில் கல்வியும் சமயமும் ஒருங்கு சேர்ந்து மாணவரை மனிதநேயத்துடன் வாழ வழி காட்டும்.

சமயக்கொள்கைகளை மாணவர் மத்தியில் கைக்கொண்டுவர பல வழிகள் பாட சாலையில் உண்டு. நற்சிந்தனைகள் மூலம் நல்ல அறிவுரைகளை நாள்தோறும் மாணவர்களுக்கு கூறுவதால் மாணவரின் உள்ளம் சிந்தித்துச் செயற்பட வழி வகுக்கலாம்.

பல சமய விழாக்களையும், அடியார்களது குருபூசைத் தினங்களையும் தவறாது கைக்கொள்வதால் அடியாரின் பக்தியின் பயன்களை அறிந்து தாமும் தர்மம், தொண்டு, சேவை, தன்னல மில்லா உழைப்பு போன்ற பல நற்கருமங்களில் ஈடுபடும் வாய்ப்பு மாணவர்களுக்கு தானாகவே ஏற்படுகின்றது. பெரியோரை மதிக்கும் பண்பு, ஆலய தரிசனம், அன்பு, அருள், இரக்கம் உயர்ந்த நல்லெண்ணங்களையே எண்ணுதல் போன்ற பரந்த நோக்கு மாணவர் மத்தியில் பரவ வாய்ப்பு உருவாகின்றன. விருந்தோம்பல், சைவப் பாரம்பரியங்களை விளங்கி அதன்படி நடத்தல், மாதா, பிதா, குரு,

தெய்வம் என்ற கூற்றுக்கு இணங்க வாழுதல் வேண்டும். மனித விழுமியக் கருத்துக்களை தன்னகத்தே கொண்டு செயற்பட மாணவர் மத்தியில் சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதுடன் அவர்களை சிறந்த பக்தியாளர்களாகவும், சிறந்த கல்வியாளர்களாகவும் ஆக்க இச்சமயமே சிறந்த சாதனமாகும்.

இன்றைய போர்ச் சூழலில் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. அன்பு, கருணை, இரக்கம் என்ற சொல்லிற்கு அர்த்தமே இல்லாதது போல் எங்கும் அழிவும், அல்லலும், தொல்லையும், துன்பமும் இயற்கையாலும் செயற்கையாலும் விளைகிறது. இதற்குக் காரணம் மனிதனிடம் மனிதத்தன்மையும், இறைசிந்தனையும் குறைந்து வருவதே காரணமாகும். இந்நிலை மாறவேண்டும். இனமத பேதமின்றி ஒற்றுமையும் சமாதானமும் உலகத்திலே நிலைத்து ஓங்கவேண்டும். இதற்கு ஒரே ஒரு வழி சமயநெறியை உலகம் போற்றி வாழ வேண்டும். எல்லாச் சமயமும் நன்நெறியை எடுத்துக் கூறுகின்றன. அவரவர் தம் சமயக் கொள்கைளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் சிறந்த பயன் அடையலாம்.

இறைவனை அன்புடன் அழைக்கும் அடியவனுக்கு அவன் அழைத்ததும் வந்து அருள் புரிவான் என்பதை மாணவர்கள் பல புராணக் கதைகள் மூலம் அறிந்துள்ளனர். தந்தையைக் காணாது அழுத சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்து ஞானக்குழந்தை ஆக்கினார் இறைவன். சூலை நோயால் வருந்திய நாவுக்கரசர் இறைநாமம் பாடியவுடன் சூலை நோய் மாறியது. இது மட்டுமல்ல கல்லோடு கட்டி கடலில் இட்டபோது கூட "நற்றுணையாவது நமச்சிவாயவே" என நாவுக்கரசர் பாடியவுடன் கல்லைத் தெப்பமாக மிதக்கவிட்டு கரைசேர்த்தார் இறைவன். இவ்வாறு தன்னை வணங்கும் அடியவருக்கு இடுக்கண் வருங்கால் இறைவன் வந்தருள் புரிவான் என்ற நம்பிக்கை மாணவர் மத்தியில் எழ வேண்டும். நற்கருமம். நற் செயலுக்கு இறைவன் என்றுமே துணைபுரிவான் என்ற தளராத நம்பிக்கையை மாணவருக்கு ஊட்ட வேண்டியது சமயமாகும். இவ்வாறு சமயத்துடன் கல்வியில் ஈடுபடும் மாணவன் எதிர்காலத்தில் பல வகையிலும் வெற்றியீட்டுவான். எனவே மாணவ சமுதாயம் எதிர்காலத்தில் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவேண்டுமானால் சமயமே அதற்கு ஊன்றுகோலாக அமையும்.

நல்லதை எண்ணுதல் வேண்டும்.
எண்ணியதை செய்தல் வேண்டும்.
அன்புரு நட்பு வேண்டும்
ஆத்மீக உணர்வு வேண்டும்
மனிதன் மனிதனாக வாழ வேண்டும்
மாண்புரு குணங்கள் ஓங்க வேண்டும்
இன்னலில்லா வாழ்வு வேண்டும்.
இவ்வுலகம் இன்புற வேண்டும்

திருமதி. ஸ்ரீ. தனசீலன்
ஆசிரியர்

நேர்மை வலிமை மிக்கது.

நேர்மையானதையே செய்தால், எவருக்கும் அஞ்சவேண்டியது இல்லை.

# நாளைய உலகம்

அ... R. சுவேந்தா
தரம் 11A

இடர்படும் வாழ்க்கையூடே
இனியதோர் உணவை ஊட்டி
சுடர்மிகும் அறிவுக்கு
சுந்தரமாயப் பணி செய்யும்
கலை மகளே உனக்கு – என்னுள்ளங்
கனிந்த வந்தனங்கள்

நாளைய உலகை எட்டிப்பார்க்கும்
நரசிம்மர்கள் நாமல்ல
சிறப்புடனே உலகைச் சீராக்க
சிந்தை வளம் கொண்டவர்கள்
இன்னும் இனியும் வேண்டுமா
இந்தக் கொடிய யுத்தம்?....

நாடி ஓடியே கல்வியும் கற்கிறோம்
நாங்கள் மோசங்கள் தூசென ஏற்கிறோம்
பாடி ஆடியே பசுமைகள் சேர்க்கிறோம்
பாவமாய் நாமும் பரிதவிக்கிறோம்.

இடிந்திடக் கடிந்திட குமுறிடும் கொட்டில்கள்
இன்னமும் எங்களின் துணிவினைக் காட்டிடும்
விடிந்திட விடிந்திட அறிவினைத் தீட்டியே
வேர்கள் நிலைத்திட வேண்டியே நிற்கிறோம்

இன்றைய சமுதாயம் – அது
இளைய சமுதாயம்
நாளைய உலகை ஆளப் போகும்
நாத்திறம் கொண்டவர்கள் நாம்
வாலிப நெஞ்சங்களே
வாய்மை இழந்துவிட்டீர்களா?

கணனி உலகைக் கணித்திடவே – இன்னோர்
கணிப்பொறி ஒன்று வேண்டும்
நாளைய உலகைக் கணித்திட
நாமொரு கணிப்பொறி ஆக்கிடுவோம்
"கண்மூடிப் பால் குடிக்கும் பூனையைப் போல்"
கள்ளத்தனம் கொண்டவர்கள் நாமல்லர்
புத்தி தெரிந்ததும் உலகம் தெரிந்தது
போன திக்கெல்லாம் புரட்சிகள் வெடித்தது
நித்தமும் துயர் எங்கும் விரிந்தன
நீண்டதோர் உணர்வுகள் கூண்டை உடைந்தன

மூங்கில் போல் இடைநித்தம் வலித்திட
இரண்டு சக்கரம் சுற்றியே செல்கிறோம்
எம்மைப் படைத்ததை உணர்கின்றோம்
என்றும் நாளையுலகை வளமாக்குவோம்

நல்ல நல்ல ஜீவராசிகள்
நாளை உலகிற்கு வேண்டும்
கள்ளத்தனம் மிக்க
கயவர்களை ஒழிக்க
கற்றுத் தேறியே வாரீர் – எம்
கரம் பற்றும் இளைஞர்களே!

இன்றைய உலகில்
இளம் பெண்கள் படும்பாடு
நாளைய உலகிலும் – அது
நடக்க வேண்டுமா?........
நன்றியுள்ள மானிடமே
நச்சரித்துக் கூறிவிடு! ..............

"பெண்பாவம் பெரும்பாவம்" என்பார்களே
அச் சீதாவின்
பெரும்பாவம் தான் ஆட்டுகிறதோ நம் நாட்டை
சின்னஞ் சிறு பிள்ளைகள்
சிறு உரிமைகள் இன்றித் தவிக்கிறார்கள்

இன்றைய உலகின் இடர்களைக் கைவிட்டு
இன்பமுடன் வாழ்வோம் இளைய
சமுதாயமே! .............
நாளைய உலகை ஆளப் போகும்
நாயக நாயகிகளே! ..........

## சதீஸ் பல்பொருள் வாணிபம்




பாடசாலை உபகரணங்கள்
பலசரக்கு பொருட்கள்
போன்றவற்றை
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்:- முருகையா

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

## ஸ்ரீ கிருஸ்ணா சேவிஸ் ஸ்ரேசன்




மோட்டர் சைக்கிள்,
ஓட்டோ என்பவற்றை சேவிஸ்
செய்து கொடுக்கப்படும்.



உரிமையாளர்:- காந்தன்

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.


## மதன் மோட்டார் வண்டி திருத்துமிடம்



அனைத்து வகையான மோட்டார்
வண்டிகளையும் திருத்திக்
கொடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

## குமார் ரயர் சொப்



அனைத்து வகையான வாகனங்களிற்கும்
ரயர் மாற்றியும்
ஒட்டியும் கொடுக்கப்படும்.


பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

## பியூட்டி செலக்ஷன் பாணிசு அன் எலக்ரொனிக்ஸ்



**சகல விதமான எவர்சில்வர் பாத்திரங்கள்**
**அலுமினியப் பாத்திரங்கள்**
**பாடசாலை உபகரணங்கள் மற்றும்**
**வீட்டுப் பாவனைக்குரிய**
**பொருட்களைப் பெற்றுக்கொள்ள**
**நீங்கள் நாடவேண்டிய இடம்**




உரிமையாளர் :- மு.அனந்தன்

**பரமேஸ்வராச்சந்தி,**
**திருநெல்வேலி.**


சுடரொளி தொடர்ந்தும் அழகுற மிளிர வாழ்த்தும்

## ஸ்ரீ ராம் சேவிஸ் ஸ்ரேசன்



மோட்டார் சைக்கிள் அன்
ஒட்டோ சேவீஸ்
போடவும் மற்றும் திருத்தியும்
கொடுக்கப்படும்

உரிமையாளர். S. கோகுலன்



பருத்தித்துறை வீதி,
3ம் கட்டை,
கல்வியங்காடு.

சுடரொளி பணிசிறக்க வாழ்த்துகின்றோம்

## டினேஸ் அச்சகம்



**புத்தகம் கட்டுதல்,**
**திருமண, பூப்புனித நீராட்டுவிழா,**
**பிறந்தநாள் அழைப்பிதழ்கள்**
**கல்வெட்டுக்கள், ஆய்வுக்கட்டுரைகள்**
**மற்றும் றோணியோ, ஸ்கிறீன் பிறிண்டிங்,**
**ஒவ்(f) செற் பிறிண்டிங் அனைத்தும்**
**சிறந்த முறையில் பெற்றிட.**

உரிமையாளர்:- துரைசிங்கம்.

பருத்தித்துறை வீதி,
3ம் கட்டை,
கல்வியங்காடு

சுடரொளியே நீ என்றென்றும் நலமாக வாழி!

## நியூ ரஞ்சன் சலூன்



**ஆண், பெண் சிகை**
**அலங்காரம் பேசியல் என்பவற்றை**
**செய்து கொள்ளலாம்.**

உரிமையாளர்:- ரஞ்சன்

பருத்தித்துறை வீதி,
3ம் கட்டை,
கல்வியங்காடு.

# ஜனநாயகம்

✍... R.அகில்ராஜ்
*A/L 2008*

நவீன காலத்தில் உலகியல் வாழ்க்கையிலும் சரி அரசறிவியல் பாடநெறியிலும் சரி அதிக முக்கியத்துவம் பெற்றதும் அனைவராலும் உச்சரிக்கப் படுகின்றதுமான எண்ணக்கருக்களில் ஒன்றாக ஜனநாயகம் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் ஆட்சி முறை சமூக மற்றும் குடும்ப வாழ்க்கை முறையிலும் ஜனநாயகத்தை காணக்கூடியதாக உள்ளது.

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சியைக் குறிக்கின்றது. ஜனநாயகம் என்பது ஆங்கிலத்தில் 'Democracy' என்று அழைக்கப்படுகின்றது. Democracy கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். Demo என்பது கிரேக்க மொழியில் மக்கள் என்றும் ஊசயவயை என்பது அதிகாரத்தையும் குறிக்கின்றது. இரண்டும் இணைந்தே Demo Cracy என்ற சொல் உருவாகியது. ஜனநாயகம் என்பதற்கு பல்வேறு அறிஞர்களும் பல்வேறு வகையான வரைவிலக் கணங்களைக் கொடுத்துள்ளனர். 'மக்களால் மக்களுக்காக மக்களினால் ஆளப்படும் ஆட்சியே ஜனநாயகம்' என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிடு கின்றார். 'ஒவ்வொருவரும் அரசாங்கத்தில் பங்கு பெறுவதே மக்கள் ஆட்சி' என்று சீலர் என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். 'சாதாரண மனிதர்களும் அரசியல் தலைவர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தைப் பெற்றுள்ள ஆட்சிமுறை ஜனநாயகம்' என்று ஒரு கருத்தும் வழங்கப்படுகிறது.

ஜனநாயகம் எங்கு எப்போது முதன்முதலில் தோற்றம் பெற்றது என்பது தொடர்பாக அரசியல் அறிஞர்களுக்கிடையே ஒருமித்த கருத்து காணப்படுவ தில்லை. வெவ்வேறு வகையான அறிஞர்கள் வெவ்வேறு நாட்டை இனங்காட்டியுள்ளனர். இருப்பி னும் இன்று நவீன ஜனநாயகத்தின் பிறப்பிடமாக கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரம் காணப்படுகின்றது.

அன்றைய காலகட்டத்தில் சனத்தொகை குறைவாக இருந்தமையால் மக்கள் ஓர் இடத்தில் கூடி தீர்மானங் களை எடுத்து அனைத்து மக்களும் நடைமுறைப் படுத்தக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதைவிட கிராம பஞ்சாயத்து முறைகளும் ஜனநாயக தன்மைகளை கொண்டு காணப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். இக்கிராம பஞ்சாயத்து முறைகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளை மக்கள் ஏற்றுக் கொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகத்தை 2 வகைப்படுத்தலாம். அவையாவன நேரடி ஜனநாயகம், மறைமுக ஜனநாயகம் என்பனவாகும். ஜனநாயகம் எனப் படுவது யாதெனில் ஆரம்பகால கிரேக்க நகர அரசு களில் காணப்பட்டது. மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி தீர்மானங்களை எடுத்தலைக் குறிக்கும். மக்கள் தொகை, நிலப்பரப்பு சிறிதாக இருப்பது அவசியம். இன்று நேரடி ஜனநாயகம் நடைமுறையில் பெருமளவு இல்லை.

மறைமுக ஜனநாயகம் அல்லது பிரதி நிதித்துவ ஜனநாயகம் எனப்படுவது யாதெனில் மக்கள் அரசியல் தீர்மானங்களில் நேரடியாக பங்கு பற்றாமல் தமது பிரதிநிதிகள் மூலம் மறைமுகமாக பங்குபற்றுகின்றனர். மக்கள் தொகை அதிகமாகவும் நிரப்பரப்பு பெரிதாக இருக்கும் போது இம்முறை பின்படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் உலகநாடுகளில் மறைமுக ஜனநாயக முறை பின்பற்றப்படுகின்றது. மறைமுகம் பின்வரும் அரசாங்க முறைகளை கொண்டிருக்கின்றன.

1. பாராளுமன்ற முறை
2. ஜனாதிபதித்துவ முறை
3. பாராளுமன்ற முறை கலந்த ஜனாதிபதித்துவ முறை

ஜனநாயகத்தில் 2 வகையான பண்புகள் உண்டு. அவையாவன சுதந்திரம், சமத்துவம் ஆகும். மக்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். ஒருவரின் சுதந்திரம் இன்னொருவரை பாதிக்கக்கூடாது. 3 வகையான சுதந்திரங்கள் உண்டு.

1. அரசியல் சுதந்திரம்
2. பொருளாதார சுதந்திரம்
3. சிவில் / சமூக சுதந்திரம்

சமத்துவம் எனப்படுவது யாதெனில் எல்லோரும் சமம் என்பதாகும். அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் 'மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை சம உரிமை உடையவன்' என்பதன் மூலம் சமத்துவம் விளக்கப்படுகிறது.

ஜனநாயகத்தின் வெற்றிக்குதவும் காரணிகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1. நேர்மை உண்மை உள்ளவர்களாக மக்கள் இருத்தல் வேண்டும் (சுதந்திரம், சமத்துவம் பங்கிட வேண்டும்)
2. மக்கள் விழிப்புணர்வு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. அமைதியான சூழல் அவசியம் வன்முறைகள் இருத்தல் கூடாது
4. மக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும்
5. மக்கள் கல்வி அறிவு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்
6. நல்ல தலைவர்கள், தலைமைத்துவம் இருத்தல் வேண்டும்.
7. சுதந்திரம் இருத்தல், பத்திரிகைச் சுதந்திரம் அவசியம்
8. சமுதாய பொருளாதார துறைகளில் சமத்துவம் வழங்க வேண்டும். சிறுபான்மை ஓர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
9. சிறந்த கட்சிமுறை அவசியம்
10. பெரும்பான்மை இனர் சிறுபான்மையினரை அடக்காது இருத்தல் வேண்டும்.

ஜனநாயக ஆட்சி மூலம் ஏற்படும் நன்மைகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1. மக்களின் பொது நன்மைக்கு முன்னுரிமை வழங்கப்படுதல்
2. மக்களை மதித்து நடக்கின்ற சுதந்திரம் வழங்கப்படுகின்றது
3. ஆண், பெண் இருபாலருக்கும் சமத்துவம் வழங்கப்படுகின்றது.
4. மக்களுக்கு ஆட்சியாளர்கள் பொறுப்பு சொல்ல வேண்டும்.
5. மக்கள் நன்கு அரசியல் பயிற்சியைப் பெறுகின்றனர்
6. பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்
7. சூழ்ச்சிகள், வன்செயல்கள் ஏற்பட வாய்ப்புக் குறைவு
8. நிர்வாக இயந்திரத்தில் மக்களின் பங்களிப்புக் கிடைக்கின்றது.

அதேவேளை இவ் ஜனநாயகத்தினால் தீமைகளும் ஏற்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவையாவன :

1. திறமையற்ற ஆட்சிமுறையாக மாறுகின்றது. திறமையற்றவர்கள் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.
2. ஊழல் மோசடிகள் ஏற்படுகின்றன.
3. திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாது காலதாமதம் ஏற்படுகின்றது.
4. பணச்செலவு ஏற்படுகின்றது பொதுச் கூட்டங்கள் தேர்தல் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு நிதி அதிகம் செலவிடப்படுகின்றது.
5. வாக்குக்களின் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்படல், மக்களின் நன்மைகள் புறக்கணிக்கப்படல்
6. நேர்மை ஒழுக்கம் இல்லை, பேச்சாற்றலுள்ளவன் வெற்றி பெறுகின்றான்.
7. பொய்ப்பித்தலாட்டம் ஏமாற்றுவேலை ஏற்படுகின்றது.

8. பலர் ஆட்சியில் பங்கெடுப்பதால் பொறுப்புணர்வுடன் செயற்படுவதில்லை. பொறுப்பு தட்டிக் கழிக்கப்படல்
9. நிரந்தரமற்ற ஆட்சி அரசாங்க நிர்வாகம் குழம்பி விடும்


இவ்வாறு இருப்பினும் கூட இன்றைய உலகில் சில நாடுகளில் சிறப்பான ஜனநாயகம் நிலவும் அதேவேளையில் வேறு சில நாடுகளில் குறிப்பாக பங்களாதேஷ், பாகிஸ்தான், மியன்மார் போன்ற நாடுகளில் தோல்வி அடைந்தமைக்கு முக்கிய காரணிகளை நோக்குவோமாயின் அந்நாடுகளை வழிநடத்திச் சென்ற தலைவர்களின் பண்பிலும் முன்மாதிரியான செயற்பாட்டிலுமே தங்கியிருந்தமை அவதானிக்கலாம். அவர்கள் சர்வாதிகாரிகளாக மாறும் போது மக்கள் விழிப்புணர்வு அற்றவர்களாக வாய் பேசாமல் மௌனிகளாக இருப்பது தலைவர்களின் சர்வாதிகாரத்துக்கே துணைபோகின்றனர். ஆனால் மாறாக அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அவை வெற்றிபெற்றமைக்கு ஆட்சியாளரின் முன்மாதிரியான செயற்பாடும் மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்கும் அடிபணியும் தலைமைத்துவம் காரணமாக அமைந்தன.

ஜனநாயகம் தொடர்பான எதிர்கால நிலையினை இங்கு ஆராய்வது அவசியமாகும். அமெரிக்க போன்ற மேலைத்தேய நாடுகள்நமது நாட்டில் சனநாயகத்தை வலியுறுத்துகின்ற போது சர்வதேச ரீதியாக அதனை ஆதரிப்பதில்லை. எவ்வாறெனில் ஈரான், வடகொரியா, சிரியா போன்ற நாடுகளில் மக்களின் பெரும்பான்மையாளருடன் தெரிவு செய்யப்பட்ட அந்நாட்டின் தலைவர்களை பதவியி லிருந்து அகற்றுவதற்கு சதிவேலைகளிலீடுபட்டு அவர்களைக் கொலை செய்வதிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமல்லாமல் தமது நலன்களை பாதுகாக்கக் கூடிய தமது பொம்மையாட்சியாளர்களை இந்நாட்டின் தலைவர்களாக மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் எங்கெல்லாம் சர்வாதிகார ஆட்சியும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத ஆட்சியாளர்களும் அந்நாட்டின் தலைமைத்துவப் பதவியில் காணப்படும் போது சர்வதேச ரீதியாக அமைப்புக்கள் குரல் கொடுப்பதுடன் அந்நாடுகளுடனான தொடர்புகளைத் துண்டித்து உண்மையான ஜனநாயக ஆட்சியாளருக்கு உறுதுணையாக இருப்பது அவசியமாகும்.

எத்தொழிலை நாம் புரிந்தாலும் அதனை நேர்மைப் பற்றுடன்
அணுகி, கடவுளுக்கு ஆற்றுகின்ற வழி பாடாகக் கருதி,
அர்ப்பணிப்புடன் எம்மை ஒப்படைத்துச்
செய்து முடிக்க வேண்டும்.

# பாடசாலை முகாமைத்துவம்



சகலருக்கும் உரித்தான பொதுவான நடத்தைகள், கோலம், பழக்கம், சொற்பாடு என்பவற்றைவீட்டுக்கு வெளியே சகல பிள்ளைகளுக்கும் கற்பிக்கும் ஓர் நிறுவனமே பாடசாலையாகும். அஃது அறிவு திறன் மனப்பாங்கை விருத்தி செய்தல்,சமூகம் பற்றிய கண்ணோட்டத்தை உருவாக்கல், கலாசார தேசைப்பற்றை வளர்த்தல், வாழ்வுக்கும் தொழிலுக்கும் வழிகாட்டல், மனிதவள விருத்திக்கு உதவுதல் போன்ற இன்னோரன்ன குறிக்கோளடிப்படையில் செயற்படும் ஓர் ஒழுங்கமைப்பே பாடசாலை ஆகும்.

ஆனால் இன்றோ பாடசாலை பற்றிய எண்ணக்கரு மாற்றமுற்று அவை இன்று தொழில் நிறுவனம் போன்றவை என்றும் அங்கு கல்வி ஓர் வனிகப்பண்டம் என்றும், மாணவர்கள் வாடிக்கையாளர் என்றும் எனவே அவை பொருளாதார நிறுவனங்களின் சட்டவிதிகளுக்கமைய பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் நிறைகிறது. முன்பு பாடசாலை பிறகொடை மூலம் கிடைக்கும் வளங்களைக் கொண்டு நற்பணியேற்று கல்வி வழங்கும் நிறுவனங்களாக தொழிற்பட்டது. ஆனால் இந்த பாடசாலை முறைமை என்பது அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு புதிய எண்ணக்கருக்களை உள்வாங்கி வளர்ச்சி பெற்று வருகிறது. இந்தவகையில் பயன்கருதாத சேவை நிலையமாக பாடசாலை தொழிற்பட நிலமைகள் படிப்படியாக மாற்றமுற்று சேவையிட வழங்கும் நிறுவனங்கள் அவை சிறப்பாக நீண்ட காலத்திற்கு அவற்றை வழங்கவேண்டுமாகில் அவை நவீன கம்பனி மாதிரியாக ஒழுங்கமைப்பு நிர்வாக முறைமை போன்றவற்றை கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. Peter Drucker என்ற முகாமைத்துவ விஞ்ஞானிகூட சேவை நிறுவனங்களின் முகாமை நவீனகம்பனி மாதிரியானதாக அமைய வேண்டும் என்றார்.

இந்தவகையில் பாடசாலை பற்றிய சிந்தனைப்போக்கு மாற்றமுறுவதால் அதனை நிர்வாகிக்கும் அதிபர் பதவி தொடர்பான எண்ணக்கருவிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பாடசாலையை பொறுத்தமட்டில் அதன் கற்றல் கற்பித்தல் சொல்முறையாலும் மற்றும் ஏனைய எல்லாத் துறையிலும் தரவிருத்தியினை ஏற்படுத்தும் மாற்றல்களை உண்டுபன்னும் முதல் தரமானவரே அதிபராவார். இவர்களது பாடசாலையின் முழுப் பொறுப்பையும் தனது தோள்களில் சுமந்து எதிர்பார்க்கும் இலக்கை நோக்கி இட்டுச் செல்வதால் அதன் உயர்வும், தாழ்வும் இவரின் ஆற்றலிலே தங்கியுள்ளது. மேலும் பாடசாலை நோக்கம், குறிக்கோள், வளங்கள் தொழிற்பாடுகள் தொடர்பான இலட்சியங்களையும், கொள்கைகளையும் அவை சார்ந்த உயர் முடிவுகளையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அவர் கல்வி முகாமைத்துவம் பற்றிய கோட்பாட்டறிவுடன் புலமைத்துவ தேர்ச்சியும் கொண்டமையைப் பெற்று தேர்ச்சிமிக்கவராக ஆற்றுகைத்திறன் கொண்டவராக கோட்பாட்டை காட்டிலும் நடைமுறையில் நம்பிக்கை கொண்டவராக இருத்தல் வேண்டும் கோட்பாட்டறிவை பொருத்தமான வழியில் சூழலுக்கேற்ப நெருக்கடிக்கேற்ப பயன்படுத்துகையிலேயே கல்வி முகாமை இலக்கை அடைய முடியும்.

முகாமைத்துவ விஞ்ஞானம் என்ற எண்ணக்கரு உற்பத்தி நிறுவனங்களிலிருந்து வளர்ச்சி பெற்ற ஓர் எண்ணக்கருவாகக் கொள்ளப்படுகிறது. அது கைத்தொழில் இயந்திர பொறியியலாளர்களே முகாமைத்துவசிந்தனையின் அடிப்படைகளை உருவாக்கியவர்களாகக் காணப்படுகின்றார். இந்தவகையில் கட்டடம், பொறிகள், இயந்திரங்கள்

பற்றிய அறிவு மட்டுமன்றி அவற்றுடன் இணைந்து பணியாற்றும் மனிதவளம் பற்றிய சிந்தனை வளர்ச்சியே முகாமைத்துவ சிந்தனை வளர்ச்சியாகும். இவ்வாறு தொழில்துறையில் அவற்றின் அனுபவங் களினூடாக வளர்ந்த முகாமைத்துவ கோட்பாடுகளை பாடசாலையில் பிரயோகிப்பது பாடசாலை முகாமைத் துவமாகும்.

பாடசாலை முகாமைத்துவம் என்பதனை நாம் பல்பரிமாணங்களில் வரையறுக்கலாம். இந்தவகையில் 'பாடசாலை தனது குறிக்கோளை விளைதிறனுடனும், விளைத்திறனுடனும் அடையும் வகையில் தனது வளங்களையும் ஒழுங்கமைப் பையும் திட்டமிட்டு. வழிப்படுத்தி, ஒழுங்கமைத்து, மேற்பார்வை செய்து ஒருங்கிணைத்துக்கொள்ளும் உபாயங்களும், நுட்பங்களும்' என வரையறுக்கப் படுகிறது. இங்கு பாடசாலையின் கல்வியின் விரிவாக்கம், தரமேம்பாடு என்பவற்றிற்கு அதன் முகாமைத்துவம் விளைதிறன் வாயந்ததாக அமைதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பொதுவாக முழுமையான அதிகாரம் தலைமைத்துவத்திடம் இருக்கிறது எனக்கூறும் அத்தலைமைத்துவம் ஒரு தனியாளாக அல்லது ஓர் முகாமைத்துவ குழுவாக அமைய வேண்டும் என்ற ரீதியில் பாடசாலையின் முகாமைத்துவம் தனித்து அதிபரிடம் மாத்திரமன்றி அதிபர், பிரதிஅதிபர், பகுதித் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதி, பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி போன்றோரை உள்ளடக்கியதான முகாமைத்து குழுவிடம் காணப்பட வேண்டும்.

பொதுவாக இன்று பாடசாலையில் தனிப்பட்ட ஓர் ஆசிரியரை நோக்குவோமாயின் அவன் தனது தொழில் துறையிலுள்ள அனைத்து வாய்ப்புக் களையும், பதவிநிலை உயர்வுகளையும் அறிந்து அவற்றின் மீது நாட்டம் கொண்டு செயற்படுவதுடன் அதற்கான தகுதியை உறுதிப்படுத்தும் வகையில் பாடசாலை முகாமைத்துவம் குறித்தான கல்வி பெறுதல் இன்றியமையாததாகின்றது.

மேலும் பாடசாலையை பொறுத்தமட்டில் அங்குள்ள எல்லா நிலைப்பணியாளர்களிடமும் இயல்பான ஆற்றல் அறிவு புதைந்துள்ள நிலையில் அவற்றை நிறுவனத்தினதும், தனிப்பட்டவரதும் முன்னேற்றத்திற்கான பிரயோக தகைமைகளாக மாற்றுவதற்கு பாடசாலை முகாமைத்துவம் பற்றிய கல்வி அவசியமாகின்றது.

அடுத்து பாடசாலையானது மனித, சமூக, பொருளாதார அபிவிருத்தியில் வகிக்கும் பங்கினடிப் படையில் நோக்குவோமாயின் குடும்பத்தில் பிறந்த ஓர் குழந்தையை சமூகத்தில் பொருந்திக் கொள்ள, தேவையான அறிவும், திறனும், நேர்மனப்பாங் கையும் பாடசாலையே வழங்குகிறது. இந்த வகையில் பெற்றோர் பாடசாலையை நாடி அதன் செயற்பாட்டில் பங்கேற்று தேவையான வளங்களை வழங்கு கின்றன. இதன் விளைவாக அவர்களும் பாடசாலை முகாமைத்துவத்தில் அதீத அக்கறை கொள்கின்றனர்.

மேலும் இன்றைய பொருளாதாரம் அறிவு மையப் பொருளாதாரம் இங்கு அறிவு தான் சக்தி, அறிவு தான் ஆற்றல் எனவே இப்பொருளாதாரத்தில வாழ சிறந்த அறிவும் நுட்பமும் கொண்ட மனிதவளம் தேவை எனவே இங்கு இவற்றை பாடசாலைகள் தான் உருவாக்க வேண்டும்.

மேற்போந்த சிறப்பார்ந்த தேவைகளின் பொருட்டு பாடசாலை சிறந்த முறையில் முகாமை செய்யப்பட வேண்டும் என்பதால் பாடசாலை முகாமைத்துவம் என்ற எண்ணக்கரு பின்வருவன வற்றை அதன் கூறாகக் கொள்கிறது.

1. பாடசாலையின் குறிக்கோள் நோக்கம் மற்றும் அதனை அடைவதற்கான வழிமுறைகளை தீர்மானித்தல்

பாடசாலை முகாமைத்துவமானது அதன் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்தும் வகை

யில் செயற்பட வேண்டும். பாடசாலையை பொறுத்த வரை அதன் பொதுவான குறிக்கோள் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதன் தொழிற்பாட்டிற் கான குறிக்கோளிடையே வேறுபாடு காணப்படுகிறது.

2. நிறுவனமட்ட திட்டமிடல்

நடைமுறையில் அதிபர் கொள்கை வகுப்பில் பங்கேற்பதில்லை எனவும் அவை மேலிருந்து கசிந்து வருபவை என்றும், கசிந்து வரும் தீர்மானத்திற்கமைய முகாமையாளர் செல்கின் றனர் என்ற கருத்தும் நிலவுகையில் இன்று இந்நிலைமை மாற்றப்பட்டு புதிய பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கமைய பாடசாலையின் பிரதான பொறுப்புதாரரின் மதியுரை, உதவி, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்டைப்பெற்று நிறுவன குறிக்கோள், செயற்திட்டம், நடவடிக்கைகளை தாமாகவே மேற்கொள்ள வேண்டும்.

3. வளங்களை ஒழுங்கமைத்தல்

பாடசாலையை பொறுத்தவரை அதன் குறிக்கோளை அடைய பௌதீக, மனித, நிதி, நேர, தகவல் வளம் தேவைப்பாடுகளில் அவற்றை எவ்வாறு குறிக்கோளை நோக்கி சிக்கனமாக பயன்படுத்துவதென்ற வகையில் ஒழுங்கமைத் தலை இது குறித்து நிற்கிறது.

4. செயன்முறையை கட்டுப்படுத்தல்

பாடசாலை அதன் வருடாந்த பாடசாலை திட்டங்களுக்கமைய செயற்படுகின்றனவா என கண்காணித்து தவறுகள், பிழைகள் ஏற்படுமிடத்து அவற்றை தவிர்த்தலுடன் அவற்றை கட்டுப்படுத்து வதற்கான ஆளணி மற்றும் பொறிமுறை ஒன்றை தீர்மானித்தலை இது குறித்து நிற்கிறது.

5. பாடசாலையின் தரத்தையும் நியமங்களையும் மேம்படுத்தல்

பாடசாலையின் வெவ்வேற மட்டங்களான ஆரம்ப வகுப்பு மட்டம், கனிஷ்ட இடைநிலைமட்டம், சிரேஷ்ட இடைநிலை மட்டம், கல்லூரி மட்டம் போன்ற மட்டங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நியமங்களைப் பேனுவதுடன் அவ் ஒவ்வொரு மட்டங்களிலும் தவறுகள், விரையங்கள் ஏதும் ஏற்படாவண்ணம் செயற்பாடு நடைபெறுவதையும் உறதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான எல்லா அம்சங்களிலும் பாடசாலையின் முகாமைத்துவ அணியினர் கவனம் செலுத்தி பாடசாலைகளை நிர்வகித்து வருவார்களாயின் அதன் முகாமைத்துவ விளை திறன் அதிகரித்து தூரநோக்கு எட்டும் கனியாகி விடும்.

S.ரவிச்சந்திரன்
ஆசிரியர்

முதல் நியாயத்திற்கு கீழ்ப்படியக் – கற்றுக்கொள்ளுங்கள்
கட்டளையிடும் அதிகாரம் உங்களிற்குத் – தானாக வரும்

– சுவாமி விவேகானந்தர்.

# கல்வியின் சிறப்பு

✍... இ. சரவணபவன்
தரம் $10^B$

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'
என்பது முதுமொழியாகும்.

இன்றைய மக்கள் சமுதாயம் இருபத்தோராம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞானயுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளனர். ஒரு நற்சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமூகத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் கல்வி மிக முக்கியமானது.

கல்வியை எல்லோரும் பெறுவதற்காக முனைகின்றார்கள் என்றால் அது தன்னகத்தே கொண்டுள்ள அழியாச்சிறப்பம்சமாகும். கடலாலும் காற்றாலும் மழையாலும் தீயாலும் மட்டுமன்றி சதியாலும் சூழ்ச்சியாலும் சண்டையாலும் அழியாதது, கல்வியெயும் நிரந்தரமான செல்வம் ஒன்றேயாகும்.

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன் மன்னர்க்குத்
தன் தேசமெல்லா சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு'

என்று மூதுரையிலே ஔவையார் கூறுகின்றார். ஒரு அரசனையும் கல்வி கற்ற ஒருவனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அரசனை விடக் கல்வி கற்றவன் சிறந்தவன். காரணம் அரசனுக்குத் தனது நாட்டில் மட்டுமே மதிப்புண்டு. ஆனால் கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு என்று மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

இது மட்டுமன்றி கல்வியின் இன்னோர் பெருஞ்சிறப்பு யாதெனில் சாதாரண மக்கள் சிலருக்கு இருக்கக் கூடிய அறியாமை, வெகுளித்தனம், கோபம், மூடநம்பிக்கை, அகங்காரம் போன்றவற்றை நீக்கி உண்மையினை விளக்கி நல்லது தீயதைப் பகுத்தறிந்து சீர்தூக்கிப் பார்த்துச் செம்மையான வழி நடக்கச் செய்வதாகும். கல்வியானது ஒரு விளக்கினை ஏற்றி அதிலிருந்து ஆயிரம் விளக்குகள் ஏற்றி ஊரெங்கும் ஒளிபெறச் செய்வது போன்றது

இக்கல்விச் செல்வம் கொடுக்கக் கொடுக்கப் பெருக்கிக் கொண்டே செல்லுமே தவிர ஒரு போதும் குறையவோ தேய்வடையவோ மாட்டாது.

பாடசாலையில் நாம் கற்கும் கல்வியானது எமது வாழ்க்கையில் பொருளாதார அடிப்படையில் முன்னேற உதவுவது மட்டுமல்லாமல் ஒழுங்கான பாதையில் எம்மை ஒழுக்கமுடன் செயற்பட வழி நடத்துகின்றது. பாடசாலையினைவிட்டு வெளியேறிய பின்னும் சமூகத்தில் பலருடன் சேர்ந்து வாழும் பக்குவத்தைக் கொடுக்கிறது. கல்வியானது பாடசாலைக் காலத்திலேயே எம்மைப் பாதுகாப்பதற்கும் மிக உதவி புரியும். இப்படியான கல்விச் செல்வத்தை இளமையிலே கற்க வேண்டும் 'இளமையிலே கல்' என்பது பெரியோர் வாக்கு இதற்குக் காரணம் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதேயாகும். அதாவது இளமையிற் கற்கும் கல்வியானது கல்லியானது சிலையிலே செதுக்கியது போன்று அழியாத்தன்மை பொருத்திய தாகும். இவ்வாறு இளமையிற் கற்கும் போது ஐயமேதுமின்றித் தெளிவாகக் கற்ற வேண்டும். இதனையே திருவள்ளுவப் பெருந்தகை 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குதக' என்கிறார். இவ்வாறு ஐயமின்றித் தெளிவாகக் கற்றபின் கற்றபடி ஒழுகுதல் வேண்டும். இல்லையேல் கல்வி அர்த்த மற்றதாகிவிடும். எனவே மாணவர்கள் அழியாத செல்வமாகிய கல்வியை நன்கு கற்றுணர்ந்து நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும்.

# முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள்

✍... இ. தர்சிகா
தரம் 8B

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்னும் கூற்றுக்கிணங்க விபுலானந்த அடிகளார் இலங்கை யில் பல பாகங்களிலும் இந்தியத் துணைக் கண்டத்தின் பல பிரதேசங்களிலும் நற்பணிபுரிந்த பெரியார் ஆவர். இவர் சமயம், கல்வி , தமிழ் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து விளக்கினார். இவர் மட்டக்களப்பு பிரதேசத்தில் தெற்கேயுள்ள காரைதீவில் 1892ம் ஆண்டு பங்குனி மாதம் 28ம் திகதி பிறந்தார். அவருடைய பெற்றோர் சைவபாரம்பரியத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள். அவரின் தந்தை பெயர் சாமித்தம்பி , தாயார் பெயர் கண்ணம்மை ஆவர்.

விபுலானந்த அடிகளார் குழந்தைப் பருவத்தில் சிறிது காலம் நோய்வாய்ப் பட்டிருந்தார். அப்பொழுது அவரின் நோய் நீங்குதல் பொருட்டு பெற்றோர் கதிர்காம முருகன் மீது நேர்த்தி ஒன்று வைத்து அவரைக் கொண்டு சென்றனர். அங்கே அவருக்கு கதிர்காம கந்தனின் அருளால் நோய் தீர்ந்தது. இதனால் அவருக்கு முருகக் கடவுளின் நாமமான "மயில்வாகனம்" என்ற பெயரை பெற்றோர் சூட்டினார்கள். இவர் இளமையிலே கலைமகளின் கடாட்சம் கிட்டியவராகத் திகழ்ந்தார். இவர் இளமையில் வைத்திலிங்க தேசியர், குஞ்சித்தம்பி ஆகியோரிடம் கல்வி பயின்றார். மயில்வாகனம் சமயத்துறையில் ஈடுபட்டு சாதனைகள் பல நிலைநாட்டினார்.

இவர் தான் இளமையில் பெற்ற தமிழ்க் கல்விப் பயிற்சியை விருத்திசெய்து மதுரை தமிழ்ச்சங்கம் நடாத்திய பண்டித பரீட்சையில் சித்திியெய்தினார். இப்பரீட்சையில் சித்தியெய்திய முதலாவது இலங்கை யர் என்ற பெயரை இவர் நிலை நாட்டினார். தொடர்ந்து தமது விடாமுயற்சியால் ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசிரியராகவும் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமானிப் பட்டதாரியாகவும் அவர் உயர் நிலை அடைந்தார்.

விபுலானந்தர் ஆசிரியராய் மட்டக் களப்பில் உள்ள புனித மைக்கேல் கல்லூரி, கல்முனைக் கத்தோலிக்கத் திருச்சபைப் பாடசாலை, யாழ்ப்பாணத் தில் உள்ள புனித சம்பத்திரிசியார் கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம் என்பவற்றில் வெவ்வேறு காலங் களில் பணிபுரிந்தார். 1920 இல் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபரானார். மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் துறவுமார்க்கத்திலும் சமயப் பணிகளிலும் நாட்டம் ஏற்பட்டது. எனவே அவர் 1922 இல் தென்னிந்தியா சென்று மயிலாப்பூரிலுள்ள இராமகிருஸ்ண மடத்தில் சேர்ந்தார். அப்போது அவருக்கு பிரபோதசை தன்னியர் என்னும் பிரமச்சாரியப் பெயர் வழங்கப் பட்டது. 1924 இல் துறவு நியமங்களில் பயிற்சி பெற்றபின் விபுலானந்தர் என்னும் பெயர் வழங்கப் பட்டது. 1925 இல் இலங்கை திரும்பிய விபுலானந்தர் இந்த தமிழ்ப்பிள்ளைகள் தமது சூழலில் கல்வி பயில வேண்டும் என்னும் நோக்குடன் கல்விப் பணி யாற்றினார். இராமகிருஷ்ண மிசனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளை அமைத்தார். அவற்றுள் தமது குருநாதர் சிவானந்தர் பெயர் தாங்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். சுவாமி விபுலானந்தர் பாடசாலை நிலைக் கல்வி மட்டத்தில் சமயக்கல்வி தொடர்பாகவும் பொதுக்கல்வி தொடர்பாகவும் பலபணிகள் புரிந்தார் வெள்ளிக்கிழமைகளில் கூட்டு பிரார்த்தனை நடத்துதல், பக்திப்பாசுரப் பாராயணம்

செய்தல், வார இறுதிச் சைவசமய வகுப்பு நடத்துதல், பண்ணிசைப் பயிற்சி நடத்துதல் முதலான சமயக் கல்வி முயற்சி களில் ஈடுபட்டு வந்தார்.

அத்துடன் இலங்கைக் கல்வித்திணைக் களத்தின் பாடநூற்சபை, கல்வி ஆய்வுச்சபை, தேர்வுச்சபை என்பவற்றின் உறுப்பினராக இருந்து ஆக்கபூர்வப் பணிகள் புரிந்துள்ளார். விபுலானந்தர் இலங்கை, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசியராகவும் கடமை புரிந்தார். இவர் சமயப்பிரசங்கம் புரிதல், ஈழகேசரி, விவேகானந்தன், கலைமகள், இராமகிருஸ்ண விஜயம் போன்ற சஞ்சிகைகளின் சமயக்கட்டுரைகள் எழுதுதல் ஆகிய பணிகளைப் புரிந்தார். இலங் கையிலும் இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மாநாடுகளிலும் கருந்தரங்குகளிலும் தலைமை தாங்கி கருத்துரை வழங்கி பணி புரிந்துள்ளார்.

விபுலானந்தர் சிறந்த புலமை நாட்டம் உடையவர். அவர் பல நூல்களை இயற்றி யுள்ளார். அவையாவன கணேச தோத்திர பஞ்சகம், கதிரை யம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டைமணி மாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டைமணி மாலை, குமரவேள் நவமணிமாலை, மகலாட்சுமி தோத்திரம், ஈசன் உவக்கும் இன்மலர்கள் என்பன அவற்றுள் அடங்கும், விபுலானந்தரின் கவிதைகளில் மிக உயர்ந்து நிற்பது ஈசன் உவக்கும் இன்மலர்கள் என்னும் கவிதை ஆகும் . ஒவ்வொரு மனிதரும் தமது உள்ளத்தை உள்ளன்போடு அர்ப்பணிப்பதே இறைவனுக்குகந்த பெரும் வழிபாடாகும். இப்பாடற் தொகுதியை இங்கு நோக்குவோம்.


"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்ந்த மலர் எதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

இவை விபுலானந்தரின் புலமையையும் பக்தி ஈடுபாட்டையும் காட்டுவன. விபுலானந்தர் 1926 இல் ஓர் அநாதை இல்லத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார்.பின்னர் இந்த இல்லம் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள சிவானந்த வித்தியா லத்திற்கு மாற்றப்பட்டது. அந்த அநாதை இல்லமானது நல்லொழுக்கமும், சமய பக்தியும் அறிவாற்றலும் மிக்க மாணவர் பலரை உருவாக்க உதவி வருகின்றது. பல துறைகளிலும் அரும்பணிகள் புரிந்த விபுலானந்த அடிகளார் தமது மாபெரும் படைப்பாகிய யாழ் நூலின் அரங்கேற்றம் நிறைவேறிய தினத்தின் (19.06.1947) ஒரு திங்களின் பின்னர் இம்மண்ணுலக வாழ்வைத் துறந்து புகழ் உடம்பு எய்தினார். தமிழ் இசை வளர்ச்சி யின் உயர் எல்லையை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கிறது.

இவரது சமாதி மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள சிவானந்த வித்தியால யத்திற்கு அண்மையிலுள்ளது. விபுலானந்தர் பெயர் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பரந்துள்ளது. அடிகளாரின் பணிகளை மதிப்பீடு செய்த சுவாமி நடராசாநந்தா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார். " ஆறுமுக நர்வலர் வட இலங்கையில் தோன்றி யாழ்ப்பாணத்தில் பல கல்வி நிலையங் களை நிறுவி அதன் மூலம் எவ்வாறு சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தாரோ அதே போன்று விபுலானந்த அடிகளாரும் கிழக்கு இலங்கையில் செயலாற்றினார். அத் தருணத்தில் அடிகளார் தோன்றியிராவிடின் நமது நாட்டின் சரித்திரத்தின் போக்கு விபரீதமாக இருத்திருக்கும்" என்று கூறியுள்ளார்.

அடிகளாரின் பணிகளை நினைவூட்டும் வகையில் மட்டக்களப்பில் நிறுவப்பட்ட "விபுலானந்த மணிமண்டபம்" இப்போது சமயக் கல்வியின் கேந்திர நிலையமாக விளங்கு கின்றது. அத்துடன் இலங்கை அரசு ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைத் தமிழ்த் தின அடிகளார் இறையடி எய்திய தினத்தில் கொண்டாடுவது அவரின் பணிகளை நினைவு கூறுவதற்காக எனில் மிகையாகாது

# தொழில்சார் நெருக்கீடுகளும் சம கால உளத்தாக்கமும்



நாம் வாழ வேண்டும் என்று துடிக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு தொழிலைக் கற்று அத்தொழிலில் தேர்ச்சி பெற்று அதற்கூடாக தனது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறான். அவனது ஜீவனோபாயமும் அதனிலே தங்கியுள்ளது. அவ் வாழ்வியல் ஒட்டத்திற்கு அவனது உடல், உளம் இரண்டும் ஒருமித்து செயற்பட வேண்டும் என்பதே நியதியாகும். இதற்கூடாக நோக்கும் போது சுகநலம் என்பது ஒருவர் நோயினைப் பீடிக்காத நிலை மட்டுமல்ல, அங்க வீனமான நிலையில்லாமல் இருப்பது மட்டுமல்ல உடல்ரீதியிலும், உளரீதியிலும் சமுதாய ரீதியிலும் ஆத்மீகரீதியிலும் நலன் முறையில் இருப்பதுதான் என உலகசுகாதார ஸ்தாபனம் போன்றன வரையறை செய்துள்ளது. இதிலிருந்து உடல் நலமானது ஒரு தனிமனித, குடும்ப சமூக நாட்டு ரீதியில் எவ்வளவு முக்கியம் பெறுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

ஒருவர் தனக்கும் தான் வாழும் சூழக்கு மிடையே சமநிலையினை ஏற்படுத்தி இயல்பாக வாழுகின்ற நிலையினை அவர் உளநலத்துடன் உள்ளவர் என குறிப்பிடலாம் எனக்கூறியுள்ளார்கள். இதிலிருந்து உளநலமென்பது மேற்குறிப்பிட்ட தனிமனித, குடும்ப, சமூக நாட்டு ரீதியில் முக்கியமானது எனும் கருத்து உரமூட்டடப்பட்டதுடன் அதன் அவசியமும் உணரக் கூடியதாகவுள்ளது. உள்ளத்தின் ஆதிக்கம் உடலை ஆட்டிப் படைக்கின்றது என்பதை விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட முடிவு உடலின் அசைவுகளைக் கட்டுப்படுத்தி உடலாறுதல் பெறலாம். ஆனால் உள்ளத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதென்பது கடினம் மட்டுமன்றி தொடர் நெருக்கீட்டு செயற்பாடுகளாம். உளமானது உள வியாதிகளுக்கு விளைநிலமுமாகிறது. இதனால் உடல் நலமும் பாதிக்கப்படுகின்றது. சமகாலத்தில் உளத்தாக்கமென்பது ஒரு சர்வதேச பிரச்சினையாகக் கருத இடமுண்டு.

உளநலம் - உடல்நலம் இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதனால் ஆரோக்கியமான சமுதாய உருவாக்கத்திற்கு இவைகள் பெரும் சவாலக உள்ளன. உளநலத்துடன் மனித ஆளுமை நெருக்கீடுகள் என்பன நெருக்கிய தொடர்பு கொண்டுள்ளன. மனித ஆளுமை உருவாக்கமானது. ஐந்து வயதுக்குட்பட்ட நிலையில் உருவாக்கப்பட்டு விடுகிறது என உளவியலாளர்கள் ஆய்வறிந்திருப்பினும் இக்காலத்துக்குள் ஏற்படும் சூழல் புறக்காரணிகள் என்பனவற்றிற்கு ஏற்ப ஆளுமை அளவு வேறுபடுவதுடன் இவ்ஆளுமை அளவுகாலப் போக்கில் ஏற்படுகின்ற தொடர் நெருக்கீடுகள், தொழில்சார் நிகழ்வுகள் என்பவற்றால் சிதைவடைய அலலது குன்றவடைய இடமுண்டு. இதனால் மனித ஆளுமை வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றது.

உளவியலாளர்கள் இவ் ஆளுமையை ஒருமனிதனை ஒப்பற்ற தனிமனிதாக பிரதிபலித்துக் காட்டும் உள்ளார்ந்த ஆற்றல்கள் நடத்தை பண்புகள் கலாச்சார நடத்தைகள் சமூக உறவுகள் ஆகியவற்றின் கூட்டுக்கலவை என குறிப்பிட்டுள்ளனர். எனவே இவ்வாளுமைச் சிதைவு அல்லது குறைவு மனித வாழ்வின் உளப் பாதிப்புகளுக்கு வழிகோலும் என்பதை அறிய முடிகின்றது. சமகாலத்தில் போாச் சூழல் அதன் பொருட்டு நெருங்கிய உறவுகளின் திடீர் இழப்பு, இடம்பெயர்வு, தொழில்இழப்பு இதனால் பொருளாதாரப்பாதிப்பு பயனிலைகள் என்பன இந்நிலைக்கு உத்வேகம் கொடுக்கின்றன.

சமகால நிகழ்வுகளை (நெருக்கீடுகள்) ஒரு புறமும், பொதுவான தொழில்சார் நெருக்கீடுகளை மறுபுறமும் வைத்து நோக்கும் போது இரண்டுமே ஒரு மனிதனின் உளநலத்தின் பாதிப்பை ஏற்படுத்துவதில் பெரும் பங்கெடுக்கின்றன.

ஆளுமைச் சிதைவு உளத்தாக்கத்திற்கு வித்திடுவதையும் இதற்கு வேகம் கொடுப்பதையும் முன்பு அறிந்தோம். இதிலிருந்து நெருக்கீடுகளின் பங்கைப் புரிந்து கொள்ளமுடியும். பொதுவாக நெருக்கீடுகள் எனும் போது வாழ்வின் அச்சுறுத்தலும் நிகழ்வுகளின் வழமையான சமாளிக்கும் வழிகள் தோல்வியடையும் நிலையை நெருக்கீட்டு நிலையெனக் கூறலாம். இந்நெருக்கீடுகளை அரசியல், பொருளாதார, கல்வி, சூழல் தொழில்சார் நெருக்கீடுகள் என ஓரளவு வகைப்படுத்தலாம். இந்நெருக்கீடுகளை இலோசன, மிதமான, தீவிரமான எனத் தரம்பிரித்துக் கொள்ளலாம். நெருக்கீட்டு வகைகளில் தொழில்சார் நெருக்கீடுகள் ஏறத்தாள 30% வரையிலான பங்கை வகிப்பதால் இதனை மிதமான நெருக்கீட்டு வகைக்குள் அடக்கலாம்.

ஒருவருக்கு அவரது தொழிலானது ஒரு இலக்கினை நோக்கிச் செயற்படுவதுடன் வாழ்க்கையைக் கொண்டு நடாத்தவும் மனிதனை ஏனைய சம்பவங்களுடன் இணைப்புறச் செய்யும் சாதனமாகவும் இருக்கின்றது. இதனால் தொழில்சார் நெருக்கீடுகள் அத்தொழிலாளியின் உளநலத்தையும் அதன் நிமித்தத்தால் ஏனையோருடன் சமூகத் தொடர்பு கொள்ளலையும் பாதிக்கும் காரணியாக முக்கியத்துவம் கொள்கின்றது. இதன் நிமித்தம் குறிப்பிட்ட நபரின் ஆரம்ப ஆளுமையில் விரிசலும் சிதைவடைதலும் தொடர்ந்து உளப்பாதிப்பும் ஏற்படுகின்றது. இந் நெருக்கீட்டு நிகழ்வுகள் தொடர்ந்து நிகழும் போது அவை அந்நபருக்குப் பாரிய உளத்தாக்க நோய்களுக்கு இட்டுச்செல்ல வழிவகுக்கின்றது சமகாலத்தில் எமது பகுதி ஒரு சிக்கலான சூழ்நிலையாக அது நடந்து கொண்டிருக்கும் நீண்டகாலப்பகுதி ஒன்றுக்குள் வாழ்பவர்கள் என்ற ரீதியிலும் இவைகளை மையப்படுத்தி இரு வயதிலிருந்தெழும் நெருக்கீடுகளை இனம் காணலாம். இதனால் வரும் உளத்தாக்கம முதலாவதாக தொழிலாளர் நிலையிலிருந்தெழும் தன்வய நிலையிலும்,

இரண்டாவதாக தொழிலாளர்களுக்கு புறவயதிலிருந்தெழும் புறவய நிலையிலிருந்தும் எழுகின்றது. தன்வயதிலிருந்து தெழும் உளத் தாக்கம் ஒருவரின் மேலதிக ஆளுமையினால் தீர்மானிக்கப்படுகிறது. இவ் ஆளுமையானது சமகால நெருக்கீடுகளைத் தாங்கும் சக்தி, குடும்பப் பிண்னனி போன்ற பல காரணிகளால் நிர்ணயிக்கப்படலாம்.

இரண்டாவது புற்வயத்தில் எழுவதென்பது தொழில் கொள்வோரது அணுகு முறை, தொழில் செய் சூழல், போர்ச்சூழல் உக்கிரம் - இதனால் ஏற்படும் அனத்தங்கள் பல்வேறுபட்ட தடைகள் என்பவற்றால் ஏற்படுகின்றது. தொழிலில் சமகால நெருக்கீடுகளால் தொழிலாளர் பெறும் தன்வயநிலையிலான உளத்தாக்கம் அளவிடமுடியாததுடன் பொதுக்கணிப்பு ஒன்றுக்குள் உட்படுத்த முடியாத ஒன்றாகும்.

ஆனால் புறவயத்திலிருந்தெழும் உளத்தாக்கத்தினை வரையறுத்து அண்ணளவாக ஒரு பெரும்பாலன மட்டத்தில் ஒரு பொதுக்கணிப்புக்குள் அளவிட முடியும். புறவயநிலையில் இருந்து எழுவதற்குத் தொழில் கொள்வோரின் அணுகுமுறை என்பது அவசியமானதென்று முன்பு காட்டப்பட்டுள்ளது. இத் தொழில்கொள்வோருக்கு முதலீடு செய்வதில் தயக்கம், இதனால் தொழிலாளர் பாதிப்பு, இதைவிட ஏற்கனவே முதலிட்ட முதலீட்டை உபயோகிக்க முடியாமல் இருத்தல் அல்லது சமகால சூழலால் முற்றாகப் பாதிக்கப்படல் அல்லது பெறப்படும் உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாமல் இருத்தல் காணப்படலாம். அத்துடன் ஒரு குறித்த தொழிலில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற தொழிலாளி சமகால நெருக்கடி நிகழ்வதனால் ஏற்பட்ட தொழில்வசதி, மூலப் பொருட்கள் இழப்புகளால் அத்தொழிலில் ஈடுபட முடியாதநிலை ஏற்படுகின்றது. இத்தொழில்

துறையைச் சிறிய அளவிற் கூட செய்து தன் உழைப்பைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப் படுகின்றான். இது இவனது மனவலிமையை உளவியல் ரீதியாக குறைப்பதுடன் தொடர்ந்து சமுதாயம் அவனை ஒதுக்கும் நிலைக்கும் இட்டுச் செல்லும் போது சோர்வடைகின்றான். இந்நிகழ்வுகள் (நெருக்கீட்டு நிலைகள்) புறவயத்தலிருந்தெழுந்து தொழிலாளியின் பொருளாதார நிலையை சீரழித்து ஜீவனோபாய மட்டத்துக்குக் கீழான நிலைக்குத் தள்ளப்பட்டு அவர்களின் குடும்பத்தை அன்றாடத் தினின்றும் அன்னியப்படுத்தி விடுகின்றது.

இவ்வாறு குடும்பம் அன்றாடம்(தொடர்ந்து பாதிக்கப்படுகின்ற போது தான் ஒவ்வொரு தொழிலாளியும் தனது எண்ணத் தூண்டலினால் ஏற்படும் மிகப்பெரும் உளவியல் பாதிப்புக்கு உட்படுகிறான். அவனுக்கு தனது குடும்பத்தை நினைக்கும் போது கவலை குடிகொள்வதோடு ஒருபுறம் தொழில் கொள்வோர் அல்லது முகாமை செயற்பாடுகளில் இருந்து வருகின்ற பயப்பிராந்தி இறுதியில் குடும்ப அழிவு வரையிட்டுச் செல்கிறது.

தொழிலாளரின் புறவய நிலையில் பொதுவாகத் தான் தொழிலுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப் படாமை, தான் செய்யும் தொழிலுக்கு உத்தர வாதம் இன்மையும், தொழில் பாதுகாப்பின்மையும், செய்யும் தொழிலில் ஓய்வு நேர வசதியின்மை, அளவுக்கதிகமான வேலைப்பளு, தான் வேலை செய்யுமிடத்தில் சக தொழிலாளி – குழு என்பவற்றிற்கு இடையே உள்ள பிணக்குகள் முரண்பாடுகள் ஒற்றுமையீனங்களால் ஏற்படும் சிறந்த கடமைச் சூழல் இன்மை தான் தேர்ச்சி பெற்ற தொழிலைச் செய்ய முடியாமல் வேறு ஒரு தொழிலில் விருப்பமின்றி ஈடுபட்டிருந்தலால் ஏற்படும் பொருத்தமற்ற வேலைத் தேர்வு என்பனவும் முன்பு கூறப்பட்டன போன்று புறவய உளத்தாக்கத்திற்கு உத்வேகம் கொடுக்கும் சில தொழில் சார் நெருக்கீடுகளாக காணப்படுகின்றன. இவற்றையே மொத்தத்தில் தொழில்சார் உளவியலை வகைப்படுத்தும் போது தொழிலால் பெறப்படும் பயன், தொழிலினால் ஏற்படும் மனத்திருப்தி தொழில் கொள்வோர் தொழிலாளி உறவுகள் மேம்படுத்தல் எனும் அம்சங்களில் இந்நெருக்கீட்டு நிலைகள் பங்கெடுப்பதாக இருக்கின்றது என உளவிய லாளர்கள் கூறியுள்ளார்கள்.

சம காலத்தில் பெரும்பாலான தொழிலா ளர்களின் உளத்தாக்கம் தொழில்ரீதியான பாதிப்பில் வேலையிழப்பு அதனால் ஏற்பட்ட வேதன இழப்பாலும் ஏற்படுகின்றது என்ற கூறுமிடத்துமுன்பு வாழ்க்கை செலவுடன் தொழிலாளி ஒருவனது வேதனம் மட்டுப் படுத்தப்பட்டிருந்தவிடத்து இப்போது அது இன்னமும் பலவழிகளில் வறுமை நிலையை வெளிக்காட்டி அத்தொழிலாளியின் உளத்தாக்கத்தை அதிகரிக் கின்றது. அரிசியைக் கொள்வனவு செய்யும் போது அதை வேகவைப்பதற்கு ஒரு எரிபொருளும் தேவை யென நினைக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அது போலவே தொழிலாளரின் ஒவ்வொரு கொள்வனவும் அவர்களை இன்னொரு கேள்விக்கு இட்டுச் செல்கிறது. இவற்றைச் செய்து முடிக்கக் கூடிய இயலளவை தொழிலாளியானவன் பெற்றிருக் கின்றானா என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இங்கு தான் அத்தொழிலாளியின் உளத்தாக்க அளவை அண்ணளவாகக் கணிப்பிட முடியும் அதாவது சமகால நெடுக்கீட்டைச் சமாளித்து அவன் தனது குடும்பத்தைக் கொண்டு நடாத்துகி றானா அதன் படிதான் அவனது உளத்தாக்கமும் அமைகிறது.

அதாவது தொழிலாளியின் சமகால உளத்தாக்கம் = சமகால நெருக்கடியின் பின்வருமானம் - குடும்பச் செலவு இதன்படி இக்கணிப்பீட்டில் வரும் பெறுமானம் மறைப் பெறுமானத்தில் வருமிடத்து அது அத் தொழி லாளியின் உளத்தாக்க அதிகரிப்பை ஏற்படுத்துவ தாகக் கொள்ளலாம். ஆனால் இக்கணிப்பீட்டின் படி பொருளாதார நிலைமட்டும் தான் ஒரு தொழிலாளி யின் உளத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனப் பெறப்படுகின்றது. ஆனால் நிலைமை அதுவல்ல.

இதர தொழில்சார் நெருக்கீட்டுக்காரணிகளையும் வைத்து அதனை அளவிடும் போது கீழ்வருமாறான வகைப்பாட்டிற் குள் அடக்கலாம்.

**தொழிலாளியின் சமகால உளத்தாக்கம் = தொழிலாளியின் யுத்தகால உளத்தாக்கம் - செலவு மிகை ஆகும்.**

முதலில் மேற்கூறப்பட்டவற்றை ஒரே பார்வைக்கும் அடக்குகின்ற போது சமகால நெருக்கீடுகள், தொழில்சார் நெருக்கீடுகள் என்பவற்றால், தொழிலாளர்களுக்கு ஏற்படும் உளத்தாக்கம் என்பது தன்வயநிலை, புறவய நிலை போன்ற நிலைகளிலிருந்து எழுகின்றது என்றுமிடத்து அது தொழிலாளர்களின் ஒரு நலனில் அல்லது ஒரு சில நலனில் மட்டும் பாதிப்பை ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்கள் உளப்பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பதற்கு மேலாக அத்தொழிலாளர்களின் முழு நிலை களிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக சமகால தொழில்சார் நிலைமைகள் என்பது தொழிலாளர்களின் எண்ணத்தை ஆக்கிரமித்து அவர்களை உளவியாதி நோயாளர்களாகி விடுகிறது.

க.ஸ்ரீசண்முகநாதன்
ஆய்வுகூட உதவியாளர்.

**உசாத்துணை நூல்கள் :**
"நான் உளவியல" சஞ்சிகை
"திசை"பத்திரிகை

## விஞ்ஞான விளக்கங்கள் சில ...

- முட்டையை பச்சையாக உண்பதிலும் சமைத்து உண்பதே சிறந்தது
பச்சை முட்டையில் அவித்தீன், பயோட்டின் எனும் இரு பொருட்களும் இணைந்து காணப்படும். இது இம்முட்டையை சமைக்கும் போது வெப்பம் காரணமாக அவித்தீனும் பயோட்டினும் தனித்தனியாக பிரியும். அவ்வாறு தனித்தனியாக காணப்பட்டால் அது உடலால் அகத்துறிஞ்சப்படும். ஆகவே முட்டையை பச்சையாக உண்பதிலும் சமைத்து உண்பதே சிறந்தது.

- முட்டையை நீண்ட நேரம் சமைக்கும் போது மஞ்சட்கரு பச்சை நிறமாக மாறுகின்றது.
உயர் வெப்பத்தில் நீண்ட நேரம் முட்டையை அவிக்கும் போது முட்டை வெண்கருவில் உள்ள புரதத்தில் உள்ள கந்தகம் ஐதரசன் சல்பேற் ஆக திரிந்து முட்டையின் மஞ்சட் கருவில் உள்ள இரும்புடன் சேர்ந்து சல்பேற்றாக மாறும். இதுவே முட்டை மஞ்சட் கருவுக்கு பச்சை நிறத்தை கொடுக்கின்றது.

# பல்இணையமும் மருத்துவத்துறையும்

✍... ஏ.சஞ்சீகா
தரம் 10A

மனிதகுல வரலாற்றில் 20ம் நூற்றாண்டு பொன் எழுத்துக்களால் குறிக்கப்பட வேண்டிய ஆண்டாகும். ஏனெனில் இந்நூற்றாண்டிலேயே பல் மகத்தான கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் தகவல்துறை ஏற்படுத்திய கண்டு பிடிப்பும், வளர்ச்சியும் உலகினை கிராமமாக்கு மளவிற்கு சிறப்பானது. இந்த வகையில் தகவல் துறையுகத்தின் சிகரமே (Internet) இணையம் ஆகும். இது உலகளாவிய ரீதியில் பல்வேறு கணினிகளுக் கிடையிலான தகவல் தொடர்பு பரிமாற்றத்தைக் குறித்து நிற்கின்றது. இங்கு கணனிகளை ஒன்றுடன் ஒன்று இனைத்து வலைப்பின்னல் ஏற்படுத்தப்பட்டு பின் அவ்வலைப் பின்னல் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படும். இந்த வகையில் ( Net work of Net work) வலைப்பின்னலின் வலையமைப்பே இணையம் ஆகும்.

இது கரைகாண முடியாத ஓர் தகவல் சமுத்திர மாகும். அதாவது தொலை காண முடியாத தூரத்து வானம் சிறுகச் சிறுக வளர்ச்சி பெற்று குறுகிய காலத்தில் நாகரீக வாழ்வின் அத்தியாவசிய தேவையாக மாறி உலகின் ஒவ்வொரு பகுதியையும் இணைத்து ஒரே உலகம், ஒரே மனித சமூகம் என்ற எண்ணத்தை வளர்க்கிறது. இந்தவகையில் புவிக் கோள மனைத்திலும் உள்ள மனிதர்கள் அன்னி யோன்னியமாய், சிலந்தி வலைப்பின்னலாய் கட்டுண்டு கிடக்கும் உயரிய நிலைக்கு இணை யத்தின் இனிய சிநேகிதமே காரணம் எனில் அது மிகையல்ல.

இந்த வகையில் முக்கியத்துவம் பெறும் இணையமானது இன்று விஞ்ஞானம், அரசியல், மருத்துவம், கலை போன்ற அனைத்து துறைகளிலும் ஊடுருவி அவை தொடர்பாக தகவல்களை இலகுவாக வும், விரைவாகவும் எமக்கு வேண்டிய விதத்தில் அதாவது வாய்மொழி வடிவிலோ, எழுத்து வடிவிலோ மற்றும் படங்களாகவோ தந்துதவுகிறது.

இணையத்தின் அபாரசக்தி மருத்துவத் துறையில் வெளிப்படுமாற்றினை இங்கு நோக்கு வோமாயின் மருத்துவத்துறையில் அதன் வளர்ச்சி அளப்பரியதாகக் காணப்படுகிறது.

அதாவது அனைத்துத்தரப்பினருக்கும் உதவக் கூடியதான பல்தள தகவல்களை கொண்டமைந்து மருத்துவ இணையத்தளங்கள் காணப்படுகின்றன. இவை குறித்தான ஓர் ஆய்வின் முடிவில் அண்ணளவாக 15% ஆண்களும், 27% பெண் களும் இம்மருத்துவ தளங்களை பார்வையிடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தற்போது கிடைக்கப்பெற்ற புள்ளிவிபரங்களின்படி கிட்டத்தட்ட 100,000 வரையி லான இணையத்தளங்கள் இருப்பதாக குறிப்பிடப் படுகிறது. மேலும் இது வளரும் போக்கும் காணப்படு கின்றது.

இம்மருத்துவ தளங்களில் உள்ள தகவல்கள் அனைத்தும் மருத்துவ நிபுணர்களால் சரிபார்க்கப் பட்டு வெளிப்படுத்தப்பட்டவையாகக் காணப்படு கின்றன. இவை மனிதர்கள் தங்கள் உடலை நலமுடன் வைத்துக்கொள்வதற்கும், நோய்கள் வராமல் தடுப்பதற்கும் ஓர் வழிகாட்டியாக அமைவ தால் இவற்றைப் பார்வையிடுவதன் மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி நோளாளர்களும் பயன்பெற முடியும். இந்த வகையில்

- ❖ குறித்த நோய் பற்றிய முழுவிபரங்களையும் தெரிந்து கொள்ள முடியும்.
- ❖ சாதாரண மக்கள் மருத்துவம் தொடர்பான அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

- ❖ அடுத்து மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவ மாணவர்கள் தமது மருத்துவ அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.
- ❖ மேலும் நாள்தோறும் மாற்றமுறும் முன்னேற்ற அம்சங்களை இதனூடாக கண்டு கொள்ள லாம். என்ற வகையில் பயனளிக்கின்றன.

இவ் மருத்துவ தளங்கள் மேற்கூறியவாறு பல்தள பயன்பாட்டைக் கொண்டிருந்தாலும் இவற்றை நாம் ஓர் நண்பனாக பார்க்க வேண்டுமே தவிர மருத்துவரின் மாற்றீடாகக் கருதி நாம் சிகிச்சை எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு நோய்க்கும் உரிய மருத்துவரிடம் சென்று தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்..

பொதுவாக உடல் நலம் பற்றிய மருத்துவ தளங்கள் காணப்படினும் அவற்றில் குறிப்பிடத் தக்கதாக WWW.betterhealth.com அமைகிறது. இதில் பல நோய்கள் பற்றிய ஆராய்ச்சி விபரங்கள் அடங்கியிருப்பதுடன் குறிப்பிட்ட உடலின் குறைபாட்டை கூறும்போது தக்க மருத்துவ நிபுணரின் ஆலோசனையும் பெறலாம். அத்துடன் உடல் நலம் குறித்து அறியும் வரைபட வசதிகளையும் இது கொண்டுள்ளது.

அடுத்து தமிழ் மொழி சார்ந்த இணையத் தளத்தை நோக்குவோமாயின் www.maruthuvaulagam.com என்ற இணையத்தளம் சிறப்பிடம் பெறுகின்றது. இது மருத்துவம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் தமிழில் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகவும் விளக்கமாகவும் தருகின்றது. இந்த வகையில்

- ❖ மனிதருக்கு பொதுவாக ஏற்படக்கூடிய நீரிழிவு நோய் இரத்தஅழுத்தம், வயிற்றுவலிகள், ஆண்மைக்குறைவு, புற்றுநோய் போன்றன எப்படி ஏற்படுகின்றது, அவற்றை எப்படித் தடுப்பது, மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள், உணவுக் கட்டுப்பாடுகள் குறித்த விரிவான விளக்கங்களை அளிக்கின்றது.
- ❖ செக்ஸ் தொடர்பில் தவறான நடத்தைகளின் விளைவாக ஏற்படக்கூடிய நோய்கள் பற்றிய மேற்கொள்ளக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் விளக்குகிறது.
- ❖ அடுத்து இத்தளத்திலுள்ள மருத்துவமனை என்ற பகுதியில் மருத்துவமனை தொடர்பான விபரங்கள் காணப்படுகின்றது. பிரபல மருத்துவ மனைகள் அவை எந்நோய்க்கு சிகிச்சையளிக்கின்றன மற்றும் அவற்றின் முகவரிகள், தொலைபேசி எண்கள், மருத்துவ நிபுணர்கள், அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் போன்றன இதில் அடங்கியுள்ளன.
- ❖ மேலும் ஆங்கில மருத்துவம் மட்டுமன்றி சித்த மருத்துவம், வர்மக்கலை போன்ற தமிழ் மருத்துவக்கலைகளையும் கொண்டமைந்து தமிழ்மொழி பேசுவேருக்கு இது பயனள்ள தளமாக அமைகின்றது.

மேலும் மருத்துவத் தகவல்களையுள்ள டக்கிய தளங்களை நோக்குவோமாயின் முதல் முதலில் சக்கரை நோய் குறித்து உருவாக்கப்பட்ட www.diabatesforum.net என்பது அந்நோய் குறித்தான பல்வேறு தகவல்களை உள்ளடக்கியுள்ளது. உணவு முறை, மருத்துகள், இன்சுலின் கண்காணிப்பு முறை, தடுப்பு முறை போன்ற அனைத்து விபரங்களும் இதில் காணப்படுகின்றது. இதன் அதீத வளர்ச்சி எதிர்காலத்தில் ஒருவரது உடல்நிலை குறித்து தகவல் அளிக்கையில் அவர் இந்நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதா எனக்கூறுமளவிற்கு விருத்திபெறும். இவை தவிர www.medicineonline.com என்ற தளம் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை மருத்துவம் தொடர்பான தகவல்களை அறியும் வகையில் விபரங்களை கொண்டுள்ளது. www.bodyquest.com என்ற தளம் மனித உடல் கூறு பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளதுடன் எமது உடல் எவ்வாறு இயங்குகின்றது என்பது பற்றியும் தகவல் அளிக்கின்றது.

அடுத்து http://www.americanheart.org என்ற தளத்தை நோக்குவோமாயின் இது எமது இதயம் பற்றிய தகவல்களையளிக்கிறது. இதயம் எவ்வாறு செயற்படுகிறது இதத்தை பாதிக்கும் நோய்கள் எவை? அவற்றை எவ்வாறு தடுப்பது? மற்றும் நோய்க்கான அறிகுறிகள், ஏற்பட்ட நோயை எவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்வது? போன்ற கேள்விகளுக்கு பதிலளிக் கின்றது.

அடுத்து www.dentalsite.com என்ற இணை யத்தளம் பல் தொடர்பான தகவல்களையளிக்கிறது. பல்மருத்துவம், பற்பாதுகாப்பு, பல்நோய்கள் குறித் தான தகவல்களை அறித்து கொள்ள உதவுகின்றது. இத்தவகையில் மருத்துவத்துறையில் பல இணையத் தளங்கள் காணப்படு கின்றது.

இணையத் தளமானது தகவல் தடாகமாய் தேடத்தேட புதிய புதிய விடயங்களை எமக்கு அளிக் கின்ற ஓர் அறிவுப்பெட்டகமாக காணப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

கம்பியூட்டர் எக்ஸ்பிறஸ் - இதழ் 1,2

## எமது அதிபர்கள்

| | |
|---|---|
| திரு.கே.முத்துக்குமாரசாமிப்பிள்ளை | 1934-1943 |
| திரு.என்.கணபதிப்பிள்ளை | 1944-1967 |
| திரு.எஸ்.பி.நடராசா | 1968-1970 |
| திரு.பி.இலங்கைநாயகம் | 1971-1972 |
| திரு.வி.கே.நாகராசா | 1973 |
| திரு.ஈ.பொன்னம்பலம் | 1974 |
| திரு.வீ.மகாதேவா | 1975-1977 |
| திரு.எஸ்.சிவப்பிரகாசம் | 1978 |
| திரு.பி.சுவாமிநாதசர்மா | 1979-1985 |
| திரு.எம்.சண்முகலிங்கம் | 1986 |
| திரு.வி.அரியநாயகம் | 1987 |
| திரு.எம்.பரமேஸ்வரன் | 1988-1995 |
| திரு.ஏ.இராஜகோபால் | 1995-1999 |
| திருமதி.எஸ்.விஸ்வலிங்கம் | 1999 |




செங்குந்த இந்துக் கல்லூரி வலய மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட
உதைபந்தாட்ட அணி



செங்குந்த இந்துக் கல்லூரி வலய மட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட
கரப்பந்தாட்ட அணி

# வியாபார நிறுவனங்களும் செயற்பாட்டு பெறுபேறுகளும்



ஒவ்வொரு நிறுவனமும் பொதுவாக பல நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுமுகமாக உருவாக்கப்படுகின்றன. அந் நோக்கங்களைப் பொதுவாக

உற்பத்தி நோக்கம்

இலாப நோக்கம்

சேவை நோக்கம் / சமூகநலன் நோக்கம்

என பிரதானமாகப் பிரிக்கலாம். இத்தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவை உரிமையின் பால் பலவகையாகப் பிரிக்கலாம்.

1. தனியார்துறை நிறுவனங்கள்
   தனியுடமை, பங்குடமை, கம்பனி
2. பொதுத்துறை நிறுவனங்கள்
   கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள், அரச கம்பனி

இவ்வாறு பல நிறுவனங்கள் இயங்கினாலும் உற்பத்தி நிறுவனங்கள் பொதுவாக இலாபங்கள் அடைவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் இலாப நோக்கங்கள் கொண்ட நிறுவனங்கள் தமது உச்ச இலாபத்தை உறுதிப்படுத்தும் சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்கள் இவற்றில் இருந்து முற்றாக வேறுபட்டுச் செயற்படுகின்றன. இந்நிறுவனங்கள் ஏனைய இரு நிறுவனங்களை விடவும் வேறுபாடான கணக்கு முறைகளை பேணுகின்றன. இந்த வகையில் தான் ஒவ்வொரு நிறுவனங்களும் தமது முயற்சியின் அல்லது நோக்கத்தின் முடிவுக் கணக்குகளை அல்லது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றன. இத்தகைய முடிவுக் கணக்குகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலாபநோக்கு நிறுவனங்களை எடுத்துப் பார்ப்போமானால் ஒரு நிறுவனத்தில் விற்பனையும் கொள்வனவும் பிரதான செயற்பாடாகும். இவற்றோடு தொழிலை ஆரம்பிப்பதற்கான மூலதனமும் முக்கியமானது. இங்கு கொள்வனவு, விற்பனை என்பது பணம், கடன் என்றும் இரு பிரதான நடவடிக்கையினூடாக மேற்கொள்ளப்படும். இதனைவிட வியாபாரத்தின் துணைச் செயற்பாடுகளுக்காக ஏனைய செலவுகளையும் மேற்கொள்கின்றது. இவ்வாறு நிறுவனங்கள் இயங்கும் போதும் கணக்குகளைத் தயாரிக்கும் போதும் கணக்கீட்டு நியமங்களுடன் அதாவது கணக்கீட்டு எண்ணக் கருக்களை அடிப்படையாகக் கொண்டு அதற்கேற்றவாறான முறையில் கணக்குகளை தயாரிக்க வேண்டும். எனவே பொதுவாக இலாபநோக்கு நிறுவனங்கள் தமது கணக்குகளை

மூலதனக் கணக்கு

சொத்துக் கணக்கு

செலவினக் கணக்கு

வருமானக் கணக்கு

பரிப்புக் கணக்கு

எனக் காட்டுகின்றன. இவ்வாறான கணக்குகளை பேரேடுகளே கொண்டுள்ளன. பேரேடு எனும் போது நிறுவனத்தின் சகல கணக்குகளையும் உள்ளடக்கிய ஏட்டுத் தொகுதி ஆகும். எனவே பொதுவாக நிறுவனங்கள் எவ்வாறு தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றன எனின் இதனை இலகுவாக அட்டவணை மூலம் காட்டலாம்.

| நடவடிக்கை | மூல ஆவணம் | முதன்மைஏடு | பேரேடு |
|---|---|---|---|
| 1. காசு மூலமான நடவடிக்கைகள் | பற்றுச்சீட்டு கைச்சாத்து | காசேடு, சில்லறைக் காசேடு | காசேடு, பொதுப்பேரேடு |
| 2. கடன் கொள்வனவு | கொள்வனவுப்பட்டியல் | கொள்வனவுத்தினசேரி | கொள்வனவு க/கு ஆட்குறிப்பேரேடு (கடன்கொடுத்தோர் பேரேடு) |
| 3. கடன் விற்பனை | விற்பனைப்பட்டியல் | விற்பனைத்தினசேரி | விற்பனை க/கு ஆட்குறிப்பேரேடு (கடன்பட்டோர் பேரேடு) |
| 4. கொள்வனவு செய்த பொருளை திரும்புதல் | வரவுத்தாள் | வெளிமுக வருதிகள் தினசேரி | வெளித்திரும்பல் க/கு கடன்கொடுத்தோர் க/கு |
| 5. விற்பனை செய்த பொருள் திரும்புதல் | செலவுத்தாள் | உள்முக வருதிகள் தினசேரி | உட்திரும்பல் க/கு கடன்பட்டோர் க/கு |
| 6. மேலே குறிப்பிடாத விடயங்கள் | | | |
| 6.1 நிலையான சொத்து கடன் கொள்வனவு | பட்டியல் முகாமைத்துவ அறிக்கைகள் | பொதுத்தினசேரி | பொதுப் பேரேடு ஆட்குறிப் பேரேடு |
| 6.2 நிலையான சொத்து கடன் விற்பனை | உறுதிச்சீட்டுக்கள் | | |

மேலே அட்டவணையில் காட்டிய முறையில் நிறுவனங்கள் தமது முதன்மையான நடவடிக்கை களை மேற்கொள்கின்றன. அதாவது ஒரு கொடுக்கல் வாங்கல் சம்பவம் இடம்பெறும் போது முதலில் அதற்கு சான்றாதாரமாக அமையும் ஆவணமே மூல ஆவணமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே முதன்மையேடுகளில் பதிவுகளில் மேற்கொள்ளப் படுகின்றன. முதன்மைஏடு என்பது ஒரு வியாபார நடவடிக்கையை மூல ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு முதலில் பதிவுகளை மேற்கொள்ளும் ஏடே முதன்மைஏடு or தினசேரி எனப்படும். இம் முதன்மை ஏடுகளில் பதிவு செய்யப்படும் பதிவுகள் பேரேட்டுக்கு மாற்றப்படும். இப்பேரேடுகள் பொதுவாக

பொதுப் பேரேடு

பெயருள் பேரேடு என இருவகைப்படும்.

இங்கு பொதுப் பேரேட்டில் சொத்துக் கணக்குகள், வருமானம், செலவினக் கணக்குகள், மூலதனக் கணக்குகளும் உள்ளடங்கிய பேரேடே பொதுப் பேரேடாகும்.

பெயருள் பேரேடு என்பது நிறுவனங்களில் கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான கணக்குகளைப் பேணும் பேரேடாகும். இங்கு கடன் தொடர்பான நடவடிக்கைகள் அதிகரிக் கும் போது பெயருள் பேரேடானது

1. கடன்கொடுத்தோர் பேரேடு
2. கடன்பட்டோர் பேரேடு

என இரு வகைப்படும்.

கடன்கொடுத்தோர் பேரேட்டில் கடன் கொடுத் தோர் தொடர்பான நபர்கள் விபரங்கள் உள்ளடக்கப் படும்.

கடன்பட்டோர் பேரேட்டில் கடன்பட்டோர் தொடர்பான விபரங்களும் உள்ளடக்கப்படும்.

இவ்வாறு தயாரிக்கப்படும் பேரேடுகள் நிறுவன நிதியாண்டு இறுதியில் மூடப்படும் மூடப்பட்ட மீதிகள் இறுதிக் கணக்குகளுக்கு மாற்றப்படும்.

நிதியாண்டு என்பது நிறுவனங்கள் தமது கணக்குகளை பேணும் காலமாகும். அது பொதுவாக ஓராண்டாக அமையும் அது 1-1,31-12 ஆகுவோ 01-04,31-03 ஆகவோ 01-07,30-06 ஆகவோ அமையலாம்.

நிதிக் கூற்றுக்கள் எனும் போது அவை பொதுவாக வியாபார கணக்கையும் இலாபநட்டக் கணக்கையும் ஐந்தொகையையும் உள்ளடக்கி இருக்கும். வியாபாரக்கணக்கில் கொள்வனவுகளும் அதனோடு சேர்ந்த செலவுகளும் விற்பனையும் ஒப்பீடு செய்யப்படும். இக் கணக்கினூடாக விற்பனைக் கிரயமும்மொத்த இலாபமும் கணப்பீடு செய்யப்படும்.

இந்தவகையில் வியாபாரக் கணக்கில் நிதியாண்டு ஆரம்ப இருப்பு மீதியேடு இவ்வாண்டு கொள்வனவு செய்த தொகையில் இருந்து திருப்பியனுப்பபிய பொருளை கழித்துவரும் மீதி தேறிய கொள்வனவு அதனையும் கொள்வனவு செய்த பொருளை விற்கும் வரை ஏற்பட்ட கொள்வனவு செலவுகளையும் கூட்டி பெறப்படும் தொகை விற்க இருந்த சரக்கின் பெறுமதி ஆகும். இத் தொகையில் இருந்து நிதியாண்டு இறுதியில் உள்ள அதாவது இறுதிச் சரக்கிருப்புத் தொகையை கழித்து வரும் பெறுமதியே விற்பனைக்கிரயம் ஆகும்.

இதனை விற்பனையில் இருந்து விற்பனை செய்து திரும்பிய இருப்பை கழித்துப் பெறப்படும் தொகையாகிய தேறிய விற்பனையுடன் ஒப்பீடு செய்வதனூடாக தேறிய விற்பனை அதிகமாகவும் விற்பனைக்கிரயம் குறைவாகவும் இருந்தால் அது மொத்த இலாபம் / சாதாரண இலாபம் எனவும் விற்பனைக் கிரயம் தேறிய விற்பனையை விட அதிகமாக இருந்தால் அது மொத்த நட்டம் எனவும் குறிப்பிடுவர். இம் மொத்த இலாபத்தை இலாபநட்டக் கணக்கில் செலவினங்களோடு ஒப்பீடு செய்து பின்வருமாறு காட்டலாம்.

**மாதிரி வியாபாரக் கணக்கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 15000 | விற்பனை | 97000 | |
| கொள்வனவு | 52000 | | (-) உட்திரும்பல் | (3000) | |
| (-) வெளித்திரும்பல் | (2000) | 50000 | தேறிய விற்பனை | | 94000 |
| கொள்வனவுச் செலவு | | | | | |
| கொள்வனவாளர் தரகு | 2000 | | | | |
| களஞ்சிய செலவு | 3000 | | | | |
| இறக்குமதி தீர்வை | 2000 | 7000 | | | |
| விற்க இருந்த சரக்கின் பெறுமதி | | 72000 | | | |
| (-) இறுதி இருப்பு | | (22000) | | | |
| விற்பனைக் கிரயம் | | 50000 | | | |
| மொத்தலாபம் மீதி/கீ/கொ/செ | | 44000 | | | |
| | | 94000 | | | 94000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலைய நிர்வாகச் செலவு | | | மொத்தலாபம் மீதி/கீ/கொ/வ | | 44000 |
| காப்புறுதி | 5000 | | செயற்பாட்டு வருமானம் | | |
| அஞ்சல் தொலைபேசி | 3000 | | பெற்ற கழிவு | 5000 | |
| சம்பளம் | 10000 | | பெற்ற தரகு | 3000 | |
| கூலியும் வரியும் | 2000 | | நானாவித வருமானம் | 1000 | 9000 |
| வாடகை | 4000 | | | | |
| எழுதுகருவி | 1000 | 25000 | இயங்கா வருமானம் | | |
| | | | முதலீட்டு வருமானம் | 7500 | |
| விற்பனை விநியோக செலவு | | | பெற்ற வாடகை | 2500 | |
| விளம்பரம் | 3000 | | நிலையான சொத்து | | |
| விற்பனைத்தரகு | 1500 | | விற்பனை இலாபம் | 5000 | 15000 |
| அறவிடமுடியாக்கடன் | 1000 | | | | 68000 |
| மோட்டார் தேய்வு | 2000 | | | | |
| வெளிச்சென்ற வண்டிக் கூலி | 500 | 8000 | | | |
| நிதிச் செலவு | | | | | |
| கொடுத்த கழிவு | 2000 | | | | |
| வங்கிக் கட்டணம் | 1500 | | | | |
| வங்கித்தரகு | 500 | 4000 | | | |
| | | 37000 | | | |
| தேறியலாப முடிவை க/கு | | 31000 | | | |
| | | 68000 | | | 68000 |

மேலே தரப்பட்ட உதாரணத்தில் இலாபநட்டக் கணக்கில் செலவினங்களை நிலைய நிர்வாகச் செலவு என்றும் விற்பனை விநியோகச்செலவு எனவும் நிதிச்செலவு என்றும் செலவுகளை வகைப்படுத்தலாம். வியாபார நிறுவனத்திற்கும் நிலையத்திற்கும் ஏற்படும் செலவுகளான காப்புறுதி, சம்பளம், காகிதாதி, தளபாட கட்டடத் தேய்வுகள், மின் செலவு கள், வாடகை வரியும் கூலியும், பொதுச் செலவுகள் போன்ற செலவுகளும் விற்பனை விநியோகச் செலவுகள் எனும் போது நிறுவனத்தில் பொருளை வி/னை செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் ஏற்படும் செலவுகளான விளம்பரம், அறவிடமுடியாக் கடன், ஐயக்கடன் ஏற்பாடு, வெளிச்சென்ற வண்டிக்கூலி, மோட்டார் பெறுமானத்தேய்வு, மோட்டார்திருத்தச் செலவு, போக்குவரவு செலவு போன்ற செலவுகள் காட்டப்படும்.

நிதிச் செலவு எனும் போது நிறுவனத்தின் நிதி பெறும் வழிமுறைகளிலும் வங்கிகள் மூலமும் ஏற்படும் செலவுகளான வங்கிக்கடன், வங்கியாளர் தரகு, கொடுத்தகழிவு போன்ற செலவுகளும் ஏனைய செலவுகள் எனும் போது தீயழிவு நட்டம், களவு, சட்டச்செலவு போன்றனவும் செலவின் வகைகளாகக் காட்டலாம்.

அதேவேளை வருமானப்பக்கத்தில் மொத்த இலாபத்துடன் நிறுவனச் செயற்பாட்டு வருமானங்களான பெற்ற தரகு பெற்ற கழிவு சில்லறை வருமானம் என்பவற்றையும் நிறுவன இயக்கத்தின் மூலம் பெறப்படாத முதலீட்டு வருமானம், நிலையான சொத்து விற்பனை இலாபம் பெற்ற வாடகை என்பனவற்றையும் கூட்டி மொத்த வருமானத்தையும் மொத்த செலவுகளையும் ஒப்பீடு செய்து மொத்த

வருமானங்கள் அதிகமாக இருக்குமானால் தேறிய / நிகர இலாபத்தையும் மொத்தச்செலவு மொத்த வருமானத்தை விட அதிகமாக இருந்தால் தேறிய / நிகர நட்டத்தையும் பெறமுடியும். இவ்வாறு நிறுவனத்தின் இலாபநட்டத்தை கணிப்பிட்ட பின்னர் நிறுவனத்தின் சொத்துக்கள் நிறுவனத்தின் உரிமைகளுக்கு சமமாக இருக்கின்றதா என்பதை கணிப்பிட ஐந்தொகையை தயாரிக்கின்றனர். இந்த ஐந்தொகையானது சொத்துப்பக்கம் எவ்வாறு பிரதிநிதித்துவம் செய்கிறது என்பதை குறித்த தினத்தில் உள்ளவாறான ஐந்தொகை என்பது வெளிக்காட்டுகிறது.

X நிறுவனத்தின் 31.12இல் உள்ளவாறான ஐந்தொகை

| உரிமைகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|---|
| **உரிமையாண்மை** | | | **நிலையான சொத்து** | | | |
| மூலதனம் | 60000 | | | கொ/வி | தி/பெ/தே | தேறிய |
| + தேறியலாபம் | 31000 | | | | | பெறுமதி |
| | 91000 | | காணிகட்டடம் | 100,000 | 20000 | 80000 |
| - பற்று | (6000) | 85000 | பொறியந்திரம் | 40000 | 31000 | 9000 |
| | | | மோட்டார் | 30000 | 20000 | 10000 |
| | | | தளபாடம் | 15000 | 2000 | 13000 |
| **பரிப்புக்கள்** | | | | 185000 | 73000 | 112000 |
| **நீண்டகாலப்பரிப்பு** | | | | | | |
| வங்கிக்கடன் | 50000 | | **நடைமுறைச்சொத்து** | | | |
| y கடன் | 20000 | 70000 | சரக்கிருப்பு | | 22000 | |
| | | | கடன்பட்டோர் | 31000 | | |
| **நடைமுறைப்பரிப்பு** | | | (-) ஐயக்கடன் | (6000) | 25000 | |
| கடன்கொடுத்தோர் | 40000 | | முற்பண செலவு | | 3000 | |
| அட்டுறு செலவு | 3000 | | வருமதி வருமானம் | | 2000 | |
| முற்பண வருமானம் | 2000 | 45000 | வங்கிமீதி | | 30000 | |
| | | | காசுமீதி | | 6000 | 88000 |
| | | 200000 | | | | 200000 |

மேற்காட்டிய உதாரணத்தின்படி 200000/- பெறுமதியான சொத்துக்கள் உரிமையாண்மை மூலமாக 85000யும் நீண்டகால பரிப்பினூடாக 70000/-வும் நடைமுறைப்பரிப்பினூடாக 45000/-யும் பிரதிபலிக்கிறது.

மேலே காட்டப்பட்ட முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்கங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை. இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது பின்வரும் சீராக்கங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

1. இறுதி இருப்புச் சீராக்கம்

இறுதி இருப்பு கொள்விலை சந்தை விலை என வேறுபட்ட விலைகள் குறிக்கப்பட்டு இருந்தால் எது குறைவோ அதனையே இறுதிஇருப்பாக கொள்ள வேண்டும். இதனைச் சீராக்கும்போது,

இறுதி இருப்பு கணக்கு — வரவு

வியாபார கணக்கு — செலவு

இறுதி இருப்பு மீதியாக அடுத்த ஆண்டு கொண்டு செல்லும் அதேவேளை நடைமுறை ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்படும்.

வியாபார கணக்கில் செலவுப்பக்கம் பதிவு செய்யப்பட வேண்டிய பதிவு விற்பனைக் கிரயம் கணிப்பிடு செய்வதற்காக வியாபாரக் கணக்கில் வரவுப்பக்கம் விற்க இருந்த சரக்கின் பெறுமதியில் இருந்து கழித்து காட்டப்படுகிறது.

2. பெறுமானத்தேய்வு

பெறுமானத்தேய்வு பின்வரும் வழிகளில் கணிப்பிடப்படும்

1. நேர்கோட்டு முறை
2. ஒடுங்கு பாகை முறை
3. மறுபடிவிலை மதித்தல் முறை

இவற்றுள் நேர்கோட்டு முறையும் ஒடுங்குபாகை முறையும் பொதுவாகப் பயன்படுத்துகிறது.

நேர்கோட்டுமுறையின் போது உரிய சொத்தின் பெறுமதியினை தரப்பட்ட பெறுமானத்தேய்வு வீதத்தினால் கணிப்பீடு செய்து கொள்ளலாம்.

Eg : தளபாடம் 50000/-

10% பெறுமானத்தேய்வு கணிப்பிடுக

பெறுமானத்தேய்வு $\frac{50000 \times 10}{100}$

5000/- பெறுமானத்தேய்வு

மேற்படி உதாரணத்தில்

தளபாடம் 50000/-

தளபாட பெறுமானதேய்வு ஒதுக்கம் 20000/-

10% பெறுமானத்தேய்வு ஒடுங்குபாகை முறை மூலம் கணிப்பிடுக

$50000-20000=\frac{30000 \times 10}{100}$

3000/-

பெறுமானத்தேய்வுக்கான இரட்டைப்பதிவு வருமாறு

| | |
|---|---|
| பெறுமானத்தேய்வு கணக்கு | வரவு |
| பெறுமானதேய்வு ஒதுக்கக் க/கு | செலவு |

பெறுமானத்தேய்வு கணக்கு மீதி இலாபநட்ட கணக்கிற்கு மாற்றப்படும்.

பெறுமானத்தேய்வு ஒதுக்க க/கு மீதி இறக்கப்பட்டு அடுத்த ஆண்டு மீதியாக கொண்டு செல்லப்படும் அதேவேளை இந்தாண்டு ஐந்தொகையில் உரிய சொத்தில் இருந்து கழித்துக் காட்டப்படும்.

3. ஐயக்கடன் சீராக்கம்

கடன்பட்டோர் தரவேண்டிய கடன்பணம் கிடைக்கலாம். கிடைக்காது விடலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கடன்பட்டோரில் குறித்த வீதத்தினை ஏற்பாடு செய்தலையே ஐயக்கடன் சீராக்கம் எனப்படும்.

இதற்கான இரட்டைப்பதிவு

| | |
|---|---|
| இலாபநட்ட க/கு | வரவு |
| ஐயக்கடன் ஏற்பாடு க/கு | செலவு |

ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு மீதியாக அடுத்தாண்டு கொண்டு செல்லப்படும். அதேவேளை இவ்வாண்டு ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தில் கடன்பட்டோர் தொகையில் இருந்து கழித்துக் காட்டப்படும்.

அட்டுறுக்கள்

குறித்த காலப்பகுதிக்குரிய வருமானம் அல்லது செலவு பெறப்பட, கொடுக்கப்பட வேண்டி இருந்தால் அது அட்டுறு எனப்படும். அட்டுறுக்கள் ஏற்கனவே பெறப்பட்ட செலவுடன், வருமானத்துடன் கூட்டப்பட்டு இலாபநட்டக் கணக்கில் காட்டப்படும் அதேவேளை அட்டுறுத்தொகை அடுத்தாண்டு மீதியாக கொண்டு செல்லப்படும் அதேவேளை நடைமுறையாண்டு ஐந்தொகையில் அட்டுறு செலவு எனின் நடைமுறைப் பரிப்பாகவும் அட்டுறு வருமானம் எனின் நடைமுறைச் சொத்தாகவும் காட்டப்படும்.

5. முற்பணங்கள்

நிறுவனத்தின் குறித்த காலப்பகுதிக்குரிய செலவுக்கான தொகை முன்கூட்டியே செலுத்தபடுமாக இருந்தால் அல்லது வருமானம் முன்கூட்டியே பெறப்பட்டு இருந்தால் அது முற்பணம் எனப்படும்.

முற்பண செலவாயின் உரிய செலவுக் கணக்கில் இருந்து செலவு வைக்கப்படும் or கழிக்கப்படும்.

உரிய செலவு கணக்கில் செலவு வைக்கப்பட்ட தொகை கழிக்கப்பட்ட மீதி இலாபநட்டங்கனக்கிற்கு மாற்றப்படும்.

இது முற்பண வருமானமாயின்

உரிய வருமான க/கு வரவு

முற்பண வருமான க/கு செலவு

என அமையும் இங்கு கழிக்கப்பட்ட வருமானம் இலாபநட்ட கணக்கில் வருமானமாககட காட்டப்புடும்.

முற்பண செலவு நடைமுறைச் சொத்தாகவும் முற்பண வருமானம் நடைமுறைப் பரிப்பாகவும் காட்டப்படும்.

இவ்வாறு செம்மையாக்கல்களை சீராக்கம் செய்வதனூடாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் இவ்வாறு தயாரிக்கும்போது கணக்கீட்டு நியமங்கள் கருத்திற் கொள்ளப்படும் அவையாவன.

1. வியாபார அலகுகள் எண்ணக்கரு
2. பணஅளவீட்டு எண்ணக்கரு
3. இரட்டை விளைவு எண்ணக்கரு
4. இணைதல் எண்ணக்கரு
5. கால எண்ணக்கரு

வியாபார அலகுகள் எண்ணக்கரு என்பது நிறுவனம் வேறு உரிமையாளர் வேறு என பதிவினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

- பணஅளவீட்டு எண்ணக்கரு என்பது கொடுக்கல் வாங்கல்கள் பணத்தால் அளவிடக்கூடியன மட்டுமே பதிவுக்குட்படுத்தப்பட வேண்டும் என வலியுறத்துகிறது.
- இரட்டை விளைவு எண்ணக்கரு என்பது எந்த ஒரு வியாபார நடவடிக்கைகளும் இரண்டு தாக்கங்களையும் ஏற்படுத்தும் என்பதையும் அதனைக் கருத்திற் கொண்டே பதிவுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுறத்துகிறது.
- இணைதல் எண்ணக்கரு என்பது குறித்த தொடர்பு அடிப்படையில் இணைத்து கணக்குகளை தயாரிக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.
- கால எண்ணக்கரு என்பது குறித்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்க வேண்டும் என்பதையும் இது வலியுறுத்துகிறது

எனவே கணக்கீட்டு நியமங்களையும் சீராக்கங்களையும் கருத்திற் கொண்டு முடிவுக் கணக்குகளைச் செய்வதனூடாக நிறுவன செயற்பாட்டை துல்லியமாக அறியலாம்.

இ. பசுபதீஸ்வரன்
ஆசிரியர்

> மன அமைதி எப்பொழுதும் எம்மிடமே இருக்கிறது. குழப்பம், கலக்கம், உளைச்சல், படபடப்பு முதலியவற்றிற்கான காரணங்களை நாமாகவே உண்டாக்கிக் கொண்டு அந்த "அமைதி"யை இழந்து விடுகிறோம்.
>
> சுவாமி தேஜோமானந்தா
> சின்மயா மிஷன்

# அரசும் அரசாங்கமும்

✍... செ.ஷர்மிலா
*A/L 2009* கலை

அரசறிவியலில் மிகச் சாதாரணமாக பயன் படுத்தப்படுகின்ற பதங்களில் ஒன்றாக அரசு என்னும் பதம் காணப்படுகிறது. கிரேக்க மொழிச் சொல்லாக polis என்பதில் இருந்தும் உரோமனிய சொல்லான குடியரசு என்ற (status) என்ற சொற்பதத்துடனும் இணைந்த ஒன்றாக இது காணப்படுகிறது.

அரசு என்றால் என்ன என்பதற்கு பல்வேறு அறிஞர்களும் வெவ்வேறு வகையான வரைவிலக் கணங்களை முன்வைத்துள்ளனர்.

- வூட்றோ வில்சன் (woodran wilson)
  நிச்சயிக்கப்பட்ட நிலப்பகுதிக்குள் வாழுகின்ற மக்கள் சட்டத்திற்காக ஒழுங்கமைக்கப்படுகின்ற போது அது அரசு எனப்படும்.
- மாக்கியவல்லி (machiavelli)
  மனிதனது சிறந்த படைப்பு அரசு ஆகும்
- ஹெல் (Hagal)
  மனிதனது அக உணர்வின் அடிப்படையில் எழுந்த நடவடிக்கையே அரசு எனப்படும்
- தெய்வீக உரிமைக் கோட்பாட்டாளர்கள்
  இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு நிறுவனமே அரசு எனப்படும்.
- கால்மாக்ஸ்
  சமுதாய வர்க்க முரண்பாடுகளின் விளைவே அரசு எனப்படும்.

இவ்வாறாக பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் நவீன அரசானது பின்வரும் 5 அம்சங்களை உள்ளடக்கியதாக காணப் படல் வேண்டும்

- குறிக்கப்பட்ட நிலப்பரப்பு
- மக்கள் தொகை
- அரசாங்கம்
- இறைமை
- சர்வதேச அங்கீகாரம்

குறிக்கப்பட்ட நிலப்பரப்பு

ஒரு அரசானது மிகவும் தெளிவான வகையில் அதற்கென குறிக்கப்பட்ட நிலப்பரப்புக்களை கொண்டு காணப்படல் வேண்டும். தரை, கடல், ஆகாயம் போன்ற எல்லைகளை அவை கொண்டிருத்தல் அவசியமானதாகும். புராதன காலத்தில் கிரேக்கர்கள் மிகச் சிறிய நிலப்பரப்புக்களை கொண்ட அரசுக ளையே பெரிதும் விரும்பினர். ஆனால் அதற்கு மாறாக ரோமானியர்கள் மிகப்பரந்த நிலப்பரப்புக் களை கொண்ட அரசுகளையே அவர்கள் விரும்பினர் ஆனால் இன்று உலகில் மிகப்பரந்த அளவிலே or மிகச் சிறிய நிலப்பரப்புக்களை கொண்ட பல அரசு களை நாம் காணமுடிகிறது. இருப்பினும் பரந்த நிலப் பரப்பினை கொண்டு காணப்படுதல் அபிவிருத்திக்கு உறுதுணை புரியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

| | | |
|---|---|---|
| உ+ம்: | இங்கிலாந்து | 93,323 சதுர மைல் |
| | பிரான்ஸ் | 210,038 சதுர மைல் |
| | வத்திக்கான் | ½ சதுர மைல் |
| | நவுரு | 8 சதுர மைல் |
| | மோல்டா | 95 சதுர மைல் |

இன்று உலகில் பாலஸ்தீனம் தனக்கென குறித்து ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பை கொண்ட நாடாக காணப்படுவதில்லை. ஏனெனில் அந்த நாடானது காலத்துக்கு காலம் இஸ்ரேல் என்னும் அருகில் உள்ள நாட்டால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் எல்லை கள் மாறுபட்டு அமைகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

### மக்கள் தொகை

ஒரு அரசானது தனக்கென குறித்து ஒதுக்கப்பட்ட மக்கள் தொகையை கொண்டவையாக காணப்படல் வேண்டும். ஒரு நாட்டிற்கு எவ்வளவு சனத்தொகை இருக்க வேண்டும் என்பது முக்கியமானது அல்ல மாறாக எவ்வளவு எண்ணிக்கையிலான சனத்தொகையையும் கொண்டனவையாக காணப்படலாம். இன்றைய உலகில் அதிக அளவிலான சனத்தொகையைக் கொண்ட அரசுகளையும் மிகக் குறைவான அளவு சனத்தொகையைக் கொண்ட நாடுகளையும் நாம் உலகில் காணமுடியும்.

உ+ம்: சீனா 135 million
இந்தியா 108 million
இலங்கை 9.5 million

### அரசாங்கம்

அரசாங்கம் என்பது அரசின் ஒரு கருவியாகும். அரசின் விருப்பத்தை வெளிப்படுத்தும் செயற்படுத்தவும் இறைமை அதிகாரத்தை செலுத்துதல் தகைமையுடையதாகும். நாட்டில் உள்ளேயும், வெளியேயும், அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவது அரசின் முதற் கடமையாகும். ஆகவே இதற்கு படைகள் அவசியம். மேலும் அதற்கு சட்டங்களை இயற்றும் ஆற்றல் வேண்டும். அரசைப் பாதுகாத்து அரசின் சார்பாகத் தான் இயற்றும் சட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதியை மக்களிடமிருந்து அறவிடுவதற்கு வேண்டிய ஆற்றல் அரசாங்கத்திற்கு தேவையாகும்.

அதாவது சட்டம் இயற்றுதல், சட்டத்தை நிர்வகித்தல், நீதித்துறை அதிகாரம் ஆகிய 3 அரசாங்கத்துடன் இருத்தல் வேண்டும். இவ்வாறாக தகைமையை ஒரு அரசாங்கம் பெற்றிருக்காவிட்டால் அரசு நிலைபெற முடியாது. அரசு சீர்குலைந்து குழப்பங்கள் நிகழும் தனிப்பட்ட சங்கங்களும் தங்களுடைய நில உரிமையை அடைய வாய்ப்பாக இருக்கும். ஒரு அமைதியான சூழலை உருவாக்குவதற்கு அரசு அரசாங்கத்தை அமைக்கின்றது. சங்கங்களின் வசதிகள் அச் சங்கத்தினரது அங்கத்தவர்களையே கட்டுப்படுத்தும். ஆயினும் அரசாங்கங்கள் அவ்வாட்சிக்குட்பட்ட அனைவரையும் கட்டுப்படுத்தும்.

### இறைமை

ஒரு அரசானது தனது நாட்டு விவகாரங்களை தானே கொண்டு நடாத்தக் கூடிய உயர்ந்த அதிகாரம் இறைமை எனப்படும். அதாவது ஒரு அரசானது பயன்படுத்தக்கூடிய முழு நிறைவானதும், பிரிக்கமுடியாததுமான அதிகாரமே இவ் இறைமை ஆகும். ஒரு நாடானது தனது உள் இறைமையைக் கொண்டு தமது நாட்டின் உள் விவகாரங்களையும் தனது வெளி இறைமையைக் கொண்டு அருகிலுள்ள நாடுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் தொடர்பு கொள்ளமுடியும். இதனை எந்தவொரு அரசே or நிறுவனங்களே அவற்றை கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மாறாக ஒரு நாட்டை அருகில் உள்ள மற்றும் ஒரு நாடு கைப்பற்றுவதன் மூலம் அவ்வரசின் இறைமை அற்றுப் போகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

உ+ம் : இன்று பாலஸ்தீனம் உள் இறைமையைக் கொண்டுள்ள போதிலும் அந்நாட்டின் உள் விவகாரங்களில் இஸ்ரவேல் தலையீடு செய்வதனால் அவ் அரசின் இறைமை கேள்விக்குரியதாக காணப்படுகிறது.

### சர்வதேச அங்கீகாரம்

இன்றைய உலகில் எந்தவொரு அரசும் தனித்து வாழமுடியாது. ஏனெனில் அவ் அரசானது தனது தேவைகளை தானே தனித்து நின்று நிறைவேற்ற முடியாது. உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக தொடர்புகளை கொண்டிருப்பது அவசியமானது ஆகும். இந்நிலையில் ஒரு அரசை சர்வதேச அமைப்பான ஐக்கியநாடுகள் சபை அங்கிகரித்தால் மட்டுமே அது சர்வதேச அங்கீகாரம் என பொருட் கொள்ளப்பட்டு அவ்வரசு ஏனைய நாடுகளுடன் ராஜதந்திர தொடர்புகளை வைத்திருக்க முடியும்.

உ+ம் : இன்று உலகில் 192வது நாடாக மொண்டி நிக்ரோ என்னும் நாடு ஐ.நா.சபையால் அங்கீகரிக்கப் பட்டமை

அரசும் அரசாங்கமும்

அரசு என்பது தெரிந்தோ, தெரியாமலோ உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இந் நிறுவனம் கண்ணுக்குப் புலப்படமாட்டாது. அதாவது அரசு அருவமானது. அருவமான அரசின் நோக்கத்தை நிறைவேற்ற காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்படும் ஒரு குழுவே அரசாங்கமாகும். அதாவது அரசு செயற்படு கின்றது என்பதனைப் புலப்படுத்துகின்ற உருவமான வடிவம் அரசாங்கம். அரசாங்கமானது அரசு தனது கடமைகளை நிறைவேற்ற ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு நிறுவனம் என்று கூடக் கூறலாம். அரசோடு ஒப்பிடும் போது அரசாங்கம் நிலையற்றது. ஆனால் அரசு நிரந்தரமாக காணப்படுகின்றது. அரசாங்கங் களும் பலவகைப்படுகின்றன. மக்களாட்சி, அரசாங்கம், முடியாட்சி அரசாங்கம், இராணுவ ஆட்சி அரசாங்கம் என்பனவாகும்.

அரசு இல்லையேல் அரசாங்கம் நடைபெற இயலாது. அரசும், அரசாங்கமும் வெவ்வேறானவை. ஆயினும் தொடர்புடையவை அரசின் திறமையைப் பிரயோகிக்கும் கருவியே அரசாங்கமாகும். மேலும் அரசு கருத்துப் பொருள் சார்ந்தது என்றும் அரசு மாற்ற முடியாதென்றும் அரசாங்கம் மாற்றக் கூடிய தென்றும் கூறுவர். காலத்திற்கு காலம் ஆட்சி முறையும் அரசாங்கமும் மாற்றம் அடைவதினா லேயே அரசாங்கம் மாற்றமடைகிறது என்கிறோம். அரச அழிந்து போகாத போதிலும் உருமாற்றமடையக் கூடியது. ஒரு அரசு பல அரசாங்கங்களாகவோ பல அரசுகள் ஒரு அரசாங்கமாகவோ மாற்றமடையும்.

உ+ம்:
- 1990ம் ஆண்டின் பின்னர் சோவியத் ரஸ்யா பல அரசுகளாக (15 குடியரசு களாக) மாற்றமடைந்தது.
- 1990ம் ஆண்டிற்கு பின்னர் கிழக்கு ஜேர்மனியும், மேற்கு ஜேர்மனியும் ஒன்றாயின.
- மன்னராட்சி மக்களாட்சி, இராணுவ ஆட்சி என ஆட்சி முறைகள் மாற்ற மடைகின்றன.

அரசையும், அரசாங்கத்தையும் வேறுபடுத்தல்

| அரசு | அரசாங்கம் |
|---|---|
| • அரசு நிலையானது | அரசாங்கம் நிலையற்றது |
| • அரசினுடைய செயற்பாடுகள் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்றது | அரசாங்கம் தொழிற்படும் முகவர் |
| • அரசு உடல் போன்றது | அரசாங்கம் உயிர் போன்றது |
| • ஒரு நாட்டின் நலன் பேணும் அமைப்பு | நல்கனை நிறைவேற்றும் கருவி |
| • அரசு கருத்துப் பொருள் | அரசாங்கம் காட்சிப் பொருள் |
| • அரசு காலத்தால் முந்தியது | அரசாங்கம் காலத்தால் பிந்தியது |
| • அரசாங்கம் இன்றி அரசு செயற்படாது | அரசின்றி அரசாங்கம் இயங்கும் |
| • ஒற்றை ஆட்சி ஒரு அரசும், ஒரு அரசாங்கமும் காணப்படும் | சமஸ்டி ஆட்சி, ஒரு அரசும், பல அரசாங்கமும் காணப்படும் |
| • அரசு இறைமை அதிகாரம் கொண்டது | இறைமை அதிகாரம் இல்லை |
| • அரசின் நோக்கம் சமுதாயத்தில் வளர்ந்து வருகின்றது | அரசின் நோக்கத்தை நிறைவேற்றுதல் |

யாழ் குடாநாட்டிற்குள் எங்குமே பார்த்திராத
இயற்கை எழில் நிறைந்த பசுமையான காட்சிகளை
உங்கள் மங்கல நிகழ்ச்சிகளுக்கு
படம் பிடித்துக் கொள்ளலாம்.

எம்மிடம் பூங்கன்றுகள், கனிமரக்கன்றுகள்,
மற்றும் சாடிகள், றோசாப் பூக்கள்
என்பனவும் பெற்றுக் கொள்ளலாம்.

# பூங்கனிச்சோலை

பாடசாலைகள், வீடுகள், பொது ஸ்தாபனங்கள்,
சிறுவர் பூங்கா என்பனவற்றிற்கு பூக்கன்றுகள்,
புற்கள், கட்டு வேலைகளுடன் வடிவமைப்பும்
செய்து கொடுக்கப்படும்.


**Poonkanichcholai**

இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.

**T.P : 021 2222976**

# நஸ்ரி

ஒளி ஒலி அமைப்பு



உரிமையாளர்:- எஸ்.எவ.சேவியர்

443, இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

# ஸ்ரீ கல்லுடைக்கும் ஆலை



உரிமையாளர்:- வி.சுகுமார்

*இராஜ வீதி*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

# குமார் சவுண்ட் சேவிஸ் & ஒளி அமைப்பு



சட்டநாதர் வீதி, தேர் மடத்தடி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

T.P : 021 2227017

சுடரொளி எங்கும் பரவட்டும்

# இராசையா அன் சன்ஸ்



சித்த மருந்துகள், மருந்து சரக்குகள்
அபிசேகப் பொருட்கள்
என்பவற்றை ஒரே கூரையின் கீழும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

விளைவு சூடம்
அபிஷேகச் சாமான்கள்
புதுமனை அத்திவாரப் பொருட்கள்
நாள் சரக்குகள், கும்குமப் பூ
விவாக சுபமுகூர்த்த பொருட்கள்

அஷ்ட பந்தன மருந்துத் திரவியங்கள்
பச்சை சந்தனம்
மைசூர் சந்தனம்
ஆயுள்வேத மருந்துக்கள்
மருந்துச்சரக்குகள்

இல 209, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

---

சுடரொளியே தொடர்ந்தும் வெற்றிநடை போட வாழ்த்தும்

என்றும் உங்கள் தேவைகளுக்கு

விளைவு சூடம், அபிஷேகச் சாமான்கள், புதுமனை அந்திவாரப் பொருட்கள் நாள் சரக்குகள், குங்குமப் பூ
விவாக சுபமுகூர்த்தப் பொருட்கள், அஷ்ட பந்தன மருந்துத் திரவியங்கள், பச்சைச் சந்தனம். மைசூர் சந்தனம்
ஆயுள்வேத மருந்துக்கள், மருந்துச்சரக்குகள்.



வைத்தியர்களுக்குத் தேவையான

சூரணம், தைலம், எண்ணெய் வகைகள், லேகியம், செந்தூரம்
குளிசை வகைகள், பஸ்பம் எப்போதும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

## மருந்துச்சரக்கு வியாபாரம்

5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

# பெண் ஜென்மம்

✍... சிவப்பிரியா

தையல் யந்திரத்தின் ஓசையைப் போல இராணியின் இதயமும் கடகடத்தது. தைத்து அலுத்தான நிலையில் எழுந்தாள்.

இது என்ன யந்திர வாழ்க்கை மனம் சலித்தது. சமையல், சாப்பாடு, தையல், தந்தையின் ஏச்சு, தாயின் முனகல் . தினசரி அனுபவங்கள் இந்த நிலை இன்னும் எவ்வளவு காலத்துக்கோ... இதயம் நீண்ட பெருமூச்சுடன் கேள்வி எழுப்பியது. விடை காணும் வழியாவது.

தந்தியறுந்த வீணையென மூலையில் கிடக்கிறாள் தாய் பொன்னம்மா. அவள் நிரந்தர நோயாளி. அவள் அப்பாவின் உதைக்கும் வசைக்கும் உடலையும் உள்ளத்தையும் அர்ப்பணித்தவள்.

தந்தையின் உழைப்பு குடியோடும் கொழுத்த கறியோடும் முற்றுப்பெறும். குடும்பத்தைப் பற்றியோ தன்னை நம்பி வேறு மூன்று ஜீவன்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனவே என்ற உணர்வோ கொஞ்சமும் இல்லாதவர். இதனைப்பற்றி ஞாபக மூட்ட விளைந்ததன் விளைவுதான் பொன்னம்மாவின் உருக்குலைந்த இன்றைய நிலை.

பொறுப்பற்ற தலைவனையுடைய குடும்பத்தின் மூத்தவள் என்ற வகையில் இராணிக்குப் பொறுப்பதிகம். பல திறமைச்சித்திகளோடு க.பொ.த. சித்தியடைந்த அவளுக்கு ஏதாவது வேலை கிடைத்தாலாவது குடும்பத்துக்குதவலாம் என்பதவள் நம்பிக்கை. ஆனால் வேலை?

எங்கே கிடைக்கப்போகிறது. கல்லூரியிலிருந்து வெளியேறி ஆறாண்டுகளாக அவள் கண்டவை வேதனை விரக்தி, ஏமாற்றம் என்பனவே. நீண்ட பெருமூச்சுடன் இரவுச் சமையலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

நைந்து போன மனம் காலை அவள் நண்பி சுசீலா எழுதியிருந்த கடிதத்தில் மொய்க்கிறது. "ராணி, மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று ஒரு முட்டாள் கவிஞன் பாடியிருக்கிறான். ஆம் ராணி அவன் சரியான முட்டாளேதான். பெண்களாகப் பிறந்து படுகிற அவஸ்தைகளை அந்தக் கவிஞன் யாழ்ப்பாணத்துக்கு வந்து கண்டு உணர்ந்தால் இரத்தக் கண்ணீரே வடித்திருக்கக் கூடும். மங்கையராகப் பிறந்திட மாது அவம் செய்திட வேண்டும் என்று ஒருவேளை பாடியிருக்கக் கூடும் என்று சுசீலாவின் கடிதம் அவள் சிந்தனைகளைக் கிளறியது. உண்மையிலேயே பெண்கள் பாவ ஜென்மங்கள்தான். அல்லாவிட்டால் பெண்களை எதற்காக அந்தச் சமூகம் இவ்வளவு தூரம் புண்படுத்த வேண்டும். "என்ன குழந்தை, பெண்ணா ஆ பாவம்" என்று அனுதாபம் தெரிவிக்கும் முதியவரும் "ஐயோ நான் என்ன செய்வேன்" என்று கலங்கும் பெற்றோரும் அவள் ஞாபகத்துக்கு வந்தனர் வாழ வேண்டிய வயதில் பணம் இல்லையென்ற ஒரே காரணத்துக்காக கிடைக்கவேண்டிய நியாயமான வாழ்க்கையின்றி அவலப்படும் பெண்களைக் காணும் பொழுது ராணியின் உள்ளம் குமுறும். எதையாவது செய்து இதற்கு விடிவு காண வேண்டும் என்று மனம் துடிக்கும். எல்லாம் சில கணங்களே. சொந்தக் கவலைகள் பிரச்சனைகள் மேலே வந்ததும் தன்னாலே எதுவும் செய்ய முடியாத கையாலாகாத்தனம் தோன்றும்போது அவள் உள்ளம் விரக்தியின் எல்லைக்கே சென்றுவிடும்.

'கடவுளே ஏன் தான் பெண் என்ற பாவ ஜென்மத்தைப் படைத்தாயோ சிந்திக்கச் சிந்திக்க

அவள் உள்ளம் நடுங்கியது. 'அறிவு வளர்கிறது' என்று கண்ட கண்ட புத்தகங்களைப் படித்து ஓரளவு உலகத்தைப் புரிந்து கொண்டு வருத்தப்படுவது தானே உலகம் புரியாமலே இருந்து விட்டால் பிரச்சனைகளே இராது. வேதனை இராது. சமுதாயத்தின் இழுப்பில் இழுபட்டு வருவதை விதி என்று ஏற்றுக்கொண்டு அமைதியாக வாழலாம் போலத் தோன்றுகிறது.

"புள்ளை, புள்ளை உந்த ஆடு வாழ் வாழ் எண்டு கத்துது. புண்ணாக்கைக் கொண்டே வையன் மோனை." பொன்னம்மாவின் அனுங்கல் ஒலி கனவில் ஒலிப்பதுபோல அவள் காதில் விழுகிறது. அறுபட்ட சிந்தனைகளோடு ஆட்டை நோக்கி நடக்கிறாள். தகரப்படலை திறந்து விடும் சத்தம் காதில் ஒலிக்கிறது. 'அப்பா வாறாராக்கும் இன்றைக்குச் சனிக்கிழமை. நல்லாய் பெற்றோல் அடித்திருப்பார். நடுச்சாமம் வரைக்கும் இனித் திருவிழாதான்". மனம் வெறுப்பை உமிழ படலைப் பக்கத்தைத் திரும்பிப் பார்க்க மனமில்லாமல் ஆடு பிண்ணாக்குக் குடிக்கும் 'அழகை' இரசிக்கிறாள். இதயம் பெருமூச்சு விடுகிறது. 'ஏன்தான் அப்பா என்ற எண்ணமே எங்களுக்கு பயத்தை நினைவூட்ட வேண்டும். அவர் ஏன்தான் இப்படி நடக்கிறாரோ' இதயத்தின் வேதனையான கேள்விக்கு இராணியால் விடையிறுக்க முடிய வில்லை. "ராணி" கரகரத்த மெதுவான குரல் அவளைத் திடுக்கிட வைக்கிறது. நடுங்கும் உள்ளத் தோடு வியப்பு மேலிடத் திரும்பிய அவள் கண்கள் நிலை குத்தி நிற்கின்றன. எதிரே குமரன்! தாய் வழி உறவினன். தங்கள் வீட்டுக்கு அதிகம் வராதவனின் திடீர் வருகை அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுக் கிறது. அத்துடன் அவன் நின்ற நிலை வேறு அவள் உள்ளத்தைப் படபடக்க வைக்கிறது. அவளையும் மீறிச் சில கணங்கள் அவனைப் பார்த்தபடி நின்று விடுகிறாள். 'சே..சே இது என்ன' அவள் மனமே அவளைச் சாடுகிறது. வந்தவனை என்னவென்று விசாரியாமல் தடுமாறிய அவள்நிலை அவளுக்கே தர்ம சங்கடமாகிவிடுகிறது. மிகுந்த சிரமத்தின் பேரில் அப்பா இல்லை என்கிறாள்.

"அதுதான் நான் வந்து ... உங்கள் அப்பா.." எப்படிச் சொல்வது என்று புரியாமல் குமரன் தடுமாறினான். "அப்பா... ஏனோ பயம் அவளைக் கவ்வப் பரபரப்புடன் அவனைப் பார்க்கிறாள். "உங்கள் அப்பா ..சந்திக் கடையிலை ஒரு சின்னச் சண்டை.." "என்ன சண்டையா அப்பவா" ஓ சிறிய காயம். ஒன்றும் பயப்பட இல்லை. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதித்தாயிற்று. சில நாட்கள் "வார்ட்டில்' இருக்க வேண்டுமாம்".

குமரன் சென்றதுந் தெரியாமல் பிரமை பிடித்தவளாக நின்றுகொண்டிருந்தாள் ராணி : புள்ளே.. புள்ளே ராணி உதார் வந்தது." தாய்பல முறை அழைத்த பின்பே ராணி சுய நிலை பெற்றசளாக தாயிடம் விஷயத்தை விளக்கினாள். தாயிடம் விஷயத்தை விளக்குவதற்கிடையில் கண்ணீர் கட்டுமீறி வெளிப்படத் தொடங்கியது. பொன்னம்மாவும் படுத்த படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

தந்தை தாயை என்றுமே நன்றாக நடத்தியதில்லை. தந்தையில்லாத வேளைகளில் தாய் தந்தையின் செயல்களைச் சொல்லி வேதனைப் படுவது அன்றாட நிகழ்ச்சிகள். இதனால் ராணியும் அவள் தம்பியும் தந்தையயை வெறுத்தனர். அத்துடன் குடும்பப் பொறுப்பு எதுவுமின்றிக் குடியும் வெறியுமாக வந்து அடித்துத் துன்புறுத்துவதும் அவர்களுக்குத் தந்தைமீது நீங்காத வெறுப்பைக் கொடுத்திருந்தது. இருந்தும் தந்தை தாக்கப்பட்ட சம்பவம் அவளையும் தாயையும் கலக்கியது. ராசன் -இராணியின் தம்பி உடனேயே விசாரிக்கச் சென்றுவிட்டான். அவன் வந்து விபரம் கூறும் வரைக்கும் ராணியும் தாயும் தவியாத் தவித்தனர்.

இராணியின் தந்தைக்கும் சின்னையா என்பவருக்கும் நீண்ட நாட்களாகப் பகை. "குடிக்கு மிடத்தில் இருவரும் ஒருமித்துச் சந்தித்த போது ஏற்பட்ட வார்தைப் பரிமாறல்கள் கைகலக்கும் நிலைக்கு வந்தது. அப்போது ஆத்திரம் அடைந்த சின்னையா 'கொடுவாக் கத்தி' ஒன்றினை தூக்கி

எறிந்தார். அக்கத்தி தந்தையின் காலை பதம் பார்க்கவே இரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தார் சுப்பையா. அங்கு நின்றவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள்.

அன்று மூவருக்கும் நித்திரை இல்லை. தாய் இடைக்கிடை ஏதாவது கேட்டுக்கொண்டே இருந்தாள் மகளும் களைக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந் தாள். விடிந்ததும் விடியதாததுமாக இராணியும் தம்பியும் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். அவருக்கு பலத்த காயம் பெருமளவு இரத்தம் வெளியேறி இருந்தது. மிகவும் பலவீனமான நிலையில் நீட்டி நிமிர்ந்தபடி கட்டிலில் கிடந்த தந்தையின் உருவத்தைப் பார்த்ததும் இருவரும் கோவெனக் கதறி விட்டனர். தந்தையும் கண்ணீர் விட்டதுதான். அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவருடைய கல் மனத்திலும் கசிவா...?

சுப்பயைா ஆஸ்பத்திரியில் இருந்தவரை ராசன் காலையிலம் இராணி மாலையிலுமாகச் சென்று வந்தனர். ஒருநாள் மாலை இராணி ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தாள். தந்தை ரொம்பவும் மாறி விட்டார். அவர்கள் மீது உயிரையே வைத்திருப்பது போலப் பேசினார். தாயைக்கூட ரொம்பவும் விசாரித்தார். "புள்ளே" நான் அவளுக்கு ஒரு சுகமும் கொடுக்கல்லை. பாவம் அவளை நீங்களாவது காப்பாற்றுங்கள்" என்று கண்ணீர் மல்க பேசினார். இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது குமரன் வந்தான். யாரையோ பார்க்க வந்ததாகக் கூறி சில நிமிடங்கள் அவரைப்பார்த்து விசாரித்துவிட்டு திரும்பினார்.

நேரத்தைக் கவனியாமல் கதைத்துவிட்டு வந்ததனால் ஆறு மணி பஸ்சை தவறவிட்டு விட்டாள். இனி ஏழரைக்கே பஸ். வீடு போய்ச் சேர எட்டு மணியாகி விடும். இருட்டில் சென்று அவளுக்கு அதிகம் பழக்கமில்லை. பஸ் ராண்டில் தெரிந்த பழகிய முகம் எதனையும் காணவில்லை. "குமரன் போய் இருப்பாரே" சுற்றிலும் நோக்கிய அவளுக்கு ஏமாற்ற மாகிவிட்டது. பயத்துடன் தவித்துக் கொண்டிருந்தாள். அப்பப்பா அவள் தவிர்த்த தவிர்ப்பு. என்னதான் துணிவு வீரம் என்று பிதற்றினாலும் பெண் பெண் தான் என்று புரிந்து கொண்டாள். பெண்களின் இரத்தத்துடன் ஊறிவிட்ட அம்சம் அச்சம். கற்ற கல்வியும் தேடிப் பெற்ற துணிவும் ஆறுமணிக்கு பின்னர் செல்லாது என்ற உணர்ந்த போது பெண்களை பலவீனமாப்படுத்தி விட்ட ஆண்டவன் மீதே கோபம் வந்தது.

அவனைச்சூழ நின்ற இளைஞர்களை நோக்கினாள். ஒருவர் முகத்தில் தானும் நேரம் போய்விட்டதே என்ற ஏக்கத்தின் சாயலோ, கவலையின் குறியோ காணப்படவில்லை.

'அவர்கள் அப்படி நல்ல மகிழ்ச்சியோடு பேசிச் சிரித்து கலகலத்து நிற்கின்ற வேளையில் அவள் பயத்துடன் நின்று கொண்டிருந்தாள். பஸ்சும் ஒருவாறாக வந்தது. தெரிந்த முகத்தை நாடி கியூ வரிசையில் பின்புறத்தை ஆராய்ந்த அவள் தங்களுக்கு இறுதியில் கண்ட குமரனைக் கண்டதும் நிம்மதி பிறந்தது.

குமரனோடு கதைப்பதில்லை. மெதுவாக அவன் பின்னால் போய் வீட்டைச் சேர்ந்து விடலாம். ஆனால் பஸ்சிலிருந்து முதல் இறங்கிய குமரன் அவளுக்காக காத்திருந்து " ஏன் இவ்வளவு நேரம் கொஞ்சம் முன்னதாகவே வந்திருக்கக் கூடாதா" என்று வினவிய போது அவள் வைராக்கியம் தளர்ந்தது. மெல்லி சிரிப்பொடு சமாளித்தாள். குமரனின் கனிவான பார்வையும் புன்னகை தவழ உரையாடும் நேர்த்தியும் அவள் உள்ளத்தில் ஒரு சித்திரத்தை எழுப்பியது. வெளிப்படையாக ஏதோ அவள் பேசிக்கொண்டு வந்த போதிலும் உள்ளத்தில் பலத்த போராட்டம். அன்பு- பாசம் உணர்வு இவற்றைப்பற்றி அறிவு அளந்ததை விட இன்னும் ஆழமான ஏதோவொன்று இருக்கிறது அது என்ன?

பன்னிரண்டு நாட்களின் பின்னர் இராணி யின் தந்தை ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி னார். இதுவரைக்கும் தந்தைக்கும் அவர் குடும்பத்துக் கும் இருந்த நீண்ட இடைவெளி இப்போதில்லை. நெருங்கிய பிணைப்பில் நிம்மதி பெற்றனர். இராணி தான் வெகுவாக மகிழ்ந்தாள். 'அப்பா உண்மையி லேயே நல்லவர். அவருக்கும் இதயம் இருக்கிறது. அன்பு, பாசம் எல்லாம் இருந்தது. மது அரக்கனின் தொடர்பு ஏற்படும் போதுதான் கொடியவராக மாறுகிறார். இனி அவர் திருந்திவிடுவார்' என்றும் நம்பினாள். ஆனால் அவள் நம்பிக்கை வெறும் நம்பிக்கையாகத் தான் இருந்தது. மறுபடியும் அவர் பலம் பெற்றதும் குடிக்கத் தொடங்குகிறார். குடித்துவிட்டு வாய்க்கு வந்தபடி பேசுவது அவர் வழக்கமாகி விட்டது. பொன்னம்மா மறுபடியும் புறுபுறுக்கவும் திட்டவும் தொடங்குகின்றாள். இராணி விரக்தியின் எல்லை க்கே சென்று விட்டாள். இராசனும் கல்லூரிக்கு பணம் கட்ட முடியாததால் செல்லவில்லை. எங்கெல் லாமோ சுற்றித் திரிகிறான். நேரங் காலமற்ற வேளைகளில் விட்டுக்கு வருகிறான். அவனும் முன்போல அல்லாமல் மிகவும் மாறி விட்டான். தந்தையின் கண்காணிப்போ, கண்டிப்போ இன்றி வாழ்ந்தவன். இதுவரை தமக்கையின் அன்புக்கும், பாசத்துக்கும் மதிப்புக் கொடுத்தவன். இனியும் கொடுப்பானா? வயதும் வளரும் சூழலும் மதிப்புக் கொடுக்க விடுமா? நடையுடை பாவனை தலையிழுப்பு பேச்சு சகல துறைகளிலும் மாற்றம்.

தம்பியைத் தெப்பமாகக் கொண்டு வாழ்க்கையில் மிதக்கலாம் என்ற இராணியின் கனவு கனவாகவே நின்று விடுமா? மறுபடியும் தையல், சமையல், வீட்டுவேலை, சாப்பாடு — வேதனையின் சுமை — போதாக் குறைச்சலுக்கு தற்செயலாக வாழ்க்கையில் வந்து போன குமரனின் நினைவால் ஏற்பட்ட சலனம் - கற்பனை அதில் ஒரு நளினமான சுகம்...சே...சே..மனிதஜென்மமே மோசமான பரப்பு.!......நாட்கள்...நக:...ர்...கி..ன்...றன.

## உலகப் பெருந் தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத வணிகம்
மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
தியாகம் இல்லாத வணக்கம்
அடிப்படைக் கொள்கை இல்லாத அரசியல்

(மகாத்மா காந்தி)

# அன்பளிப்பு

| | |
|---|---|
| ஜீவன் நகைத் தொழிலகம் | ரூபா 200.00 |
| அபர்ணா உணவகம் கல்வியங்காடு | ரூபா 200.00 |
| திருவள்ளுவர் அச்சகம் நல்லூர் | ரூபா 200.00 |
| தர்சினி ஸ்ரோஸ் | ரூபா 200.00 |
| பிரசன்னியா சலூன் நல்லூர் | ரூபா 200.00 |
| வசந்தி சலூன் | ரூபா 200.00 |
| ஊர்மிளா ஸ்ருடியோ 3ம் கட்டை | ரூபா 100.00 |
| நியூ ஸ்ரார் சலூன் | ரூபா 100.00 |
| பிரசாத் சலூன் கல்வியங்காடு | ரூபா 100.00 |
| கமல் களஞ்சியம் முத்திரைச்சந்தி | ரூபா 100.00 |
| லாவோஜி நல்லூர் | ரூபா 100.00 |
| சரவாண ஸ்ரோஸ் | ரூபா 50.00 |



கமலேஷ் - கனடா
ரூபா 2000.00


நியூ தர்சன் ரேடேர்ஸ்
T.V, றேடியோ போன்ற மின் உபகரணங்கள்
பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.



MATHI

COLOURS

Printers



சகல விதமான பிறிண்டிங் வேலைகளுக்கு

மதி கலர்ஸ்

பிறிண்டர்ஸ்



15/ 2, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.



தொ. பேசி:-021 2229285, 077 7222524, 077 7222259




அச்சமைப்பு:- மதி கலர்ஸ் நல்லூர், 021 2229285